
# பிரபஞ்சமும் வாழ்வியலும்



கவிக்கோ செல்லையூர்க் கோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சமும் வாழ்வியலும்

கவிக்கோ வெல்லவூர்க் கோபால்

மனுவேதா வெளியீடு —— 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் தரவுகள்


| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | பிரபஞ்சமும் வாழ்வியலும் |
| வகை | : | தத்துவவியல் |
| ஆசிரியர் | : | கவிக்கோ வெல்லவூர்க் கோபால் (தேசியக் கலைஞர் - சீனித்தம்பி கோபாலசிங்கம்) |
| பதிப்பு | : | 1ம் பதிப்பு 2017 |
| பிரதிகள் | : | 1000 |
| வடிவமைப்பு | : | கோபால் |
| பக்கங்கள் | : | 112 |
| அச்சுப் பதிவு | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11. தொ.பே: 0777 345 666, 071-2726778 |
| விலை | : | 350.00 |
| ISBN | : | 978-955-42694-3-9 |

| | | |
|---|---|---|
| TITLE OF THE BOOK | : | **PIRAPANCHAMUM VALVIYALUM** |
| EDITOR | : | KAVIKO VELLAVOOR GOPAL (National Artist Seenithamby Gopalasingham) |
| EDITION | : | 1ST 2017 |
| COPIES | : | 1000 |
| TYPE SETTINGS | : | GOPAL |
| PAGES | : | 112 |
| PRINTED BY | : | Chemamadu Pathippakam, Colombo -11. Tel : 0777 345 666, 071-2726778 Mail :chemamadu@yahoo.com web :chemamadu.com |
| PRICE | : | 350.00 |

Manuvetha Publications
143/23, Boundary Road, Batticaloa (Sri Lanka)
Phone: 065 2222993 - 0718938367 - 0750584427
e-mail: manuvetha@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணம்



என்னை மனிதனாக்கி
தன்னைத் தெய்வமாக்கிய அன்னைக்கு...

ஓராண்டு முடியவில்லை தந்தை யிந்த
உலகத்தை விட்டுவிட்டார், அன்பு அன்னை
ஆராரோ பாடியா மகிழ்வார், கண்ணீர்
அலைகளிலே தத்தளித்தே வளர்த் தெடுத்தார்
போராடப் போமகனே, யாவும் எம்மைப்
போட்டாட்டி விட்டதடா இந்தப் பாரில்
வேராக நானிருப்பேன் விருட்சமாய் நீ
மேலோங்கிச் செல்லதுவே சிறப்பு என்றாள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கவிக்கோ வெல்லவூர்க்கோபால் வெளியிடும் பிரபஞ்சமும் வாழ்வியலும் எனும் நூலுக்கு அணிந்துரை ஒன்றை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கல்லூரிக்காலமிருந்தே எழுத்துலகில் பிரவேசித்த கவிக்கோ அவர்கள் கவிதை, சிறுகதை, நாவல், வரலாறு, பண்பாடு எனத் தொடரும் 20 நூல்களுக்கு மேல் படைத்துத் தமிழ் தொண்டாற்றியவர். தனது வரலாற்று ஆக்கமான மட்டக்களப்புத்தேசம் வரலாறும், வழக்காறும் எனும் நூலுக்குச் சர்வதேச நிறுவனமொன்றின் அங்கீகாரமும் பெற்றவர்.

இந்நூலில் பிரபஞ்சம் பற்றிய முன்மொழிவு எனத்தொடங்கி முழுமையை நோக்கி நாம் என்ற தலைப்பீறாக 15 பிரதான தலைப்பின் கீழ்த் தனது தத்துவச்சிந்தனைகளைத் தருகின்றார் ஆசிரியர். பன்னிரண்டு ஆண்டுகளாகக் கற்றும், சிந்தித்தும் வாழ்வியல் அனுபவங்களைத் தொடர்புபடுத்தியும் வந்த அவரது சிந்தனைகளைப் படிக்கும்போது, உபநிடதங்களில் உள்ள மொழி அமைப்பும், சுருக்கமும், தெளிவும், உறுதிப்பாடும் தெளிவாகின்றன. மெய்ஞ்ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் அவர் தொடர்புபடுத்திக் காட்டும் விதம் சிறப்பானது. பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த வடிவான "ஓம்" என்பதற்கு அவர் கொடுக்கும் விளக்கம் உபநிடதங்களின் சாரமாக உள்ளது. சூரியன், காற்று, கடல் முதலிய இயற்கை அனைத்தும் ஓம் என்ற ஒலி எழுப்பியே பயணிக்கின்றன என சாந்தோக்கிய உபநிடதம் கூறும். புனிதமான சொற்கள் அனைத்துள்ளும் புனிதமானதும், நாமரூபங்களுக்கெல்லாம் தாயானதும், அழிவற்றதும் ஆன இந்த ஓங்காரத்திலிருந்துதான் பிரபஞ்சம் முழுவதும் படைக்கப்பட்டுள்ளது என சுவாமி விவேகானந்தர் கூறுவார். இக்கருத்துக்களை வெகு அழகாக ஆசிரியர் சுருக்கமாக, இறுக்கமாக ஆனால் தெளிவாக விளக்குவது அவரது சிந்தனைத் தெளிவைக் காட்டுகின்றது. தேவையான இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதார புருஷர்களான, ஜேசுகிறிஸ்து, முகம்மது நபி, புத்தர், இராமகிருஷ்ணர் போன்றோரின் போதனைகளைத் தெளிவாகக் காட்டுவதும், சோக்கிரதீஸ், பிளேட்டோ, மிசேல் பூக்கோ போன்றவர்களது கோட்பாடுகளைத் தொடர்புபடுத்துவதும் சிறப்பாகவுள்ளது.

மனிதமனம் தொடர்பாகக் கூறும் ஆசிரியர் மனம் தொடர்பான ஆய்வு ஆரம்பநிலையிலேயே உள்ளதென்றும், மனத்திலிருந்து உருவாகும் எண்ணங்கள் மிக வேகமாகப் பயணிக்கின்றன என்றும் அதன் வேகம் அளவிடமுடியாமலுள்ளதென்றும் எடுத்துக் காட்டுகின்றார். இங்கு சுவாமி யதீஸ்வரானந்தர் குறிப்பிடுவதையும் சுட்டிக்காட்டலாம்.

"பலவிழிப்புணர்வு மட்டங்கள் இருக்கின்றன. கண்களுக்குப் புலனாகும் பொருட்களைக் கண்டு கொள்ளும் உணர்வுமட்டம் ஒரு மட்டமாகும். நாம் பகற்கனவுகளைப் பற்றி எண்ணும் பொழுது அந்த நேரத்தில் மனமட்டத்தில் இருக்கின்றோம். ஆனால் பொதுவாக நமக்கு இந்த மட்டத்தைப்பற்றி ஒரு சிறு கூறுதான் தெரியும். மற்றும் நம் மனத்தைப்பற்றி மிகச் சிறிதளவுதான் நமக்குத் தெரியும். பரந்த இயலுலக மனத்தைப் பற்றி (மஹத்) நமக்கு ஒன்றுமே தெரியாது. இந்தப் பரந்த இயலுலக மனத்தின் பகுதிகளாக நம் மனங்கள் உள்ளன. இங்கு என்ன ஆற்றல்கள் மறைந்து உள்ளன? அங்கு எத்தகைய விசித்திரமான செயல்கள் நடைபெறுகின்றன என்பவற்றைக் குறித்து நமக்கு மிகக் குறைந்த அளவான அறிவுதான் உள்ளது." (தியானமும் ஆன்மீக வாழ்வும் பக்கம் 914).

சிறந்த ஆன்மீக மனிதர்கள் அனைவரும் மனத்தின் ஆற்றல்களின் பால் கவனத்தைச் செலுத்துவதை விட்டுவிடவேண்டும் எனவும் இவை ஒருவனை நல்ல வழியிலிருந்து திசைதிருப்பி இறுதியாக முற்றிலும் அழிவிற்கு வழிகாட்டுவதாகவும் இருந்துவிடக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கின்றார் (பக்கம் 918).

ஒவ்வொரு பொருள்மீதும் சிந்தனையைச் செலுத்திச் செல்லும் ஆசிரியர் இடையிடையே எழுப்பும் வினாக்கள் அவர் எவ்வளவு தூரம் ஆழமாகச் சிந்தித்துள்ளார் என்பதைக் காட்டுகின்றன. உதாரணம் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதிர்பார்ப்பு ஏமாற்றத்தையும் தரும். எதையும் எதிர்பாராத ஒருவனுக்கு ஏமாற்றம் எப்படி வரமுடியும்? என அவர் எழுப்பும் வினா அவர் ஒரு தத்துவ அறிஞன் என்பதைக் காட்டுகின்றது. இவ்வாறான வினாக்கள் உபநிடதங்கள் பலவற்றிலும் எழுப்பப்படுவதைக் காணலாம். சொர்க்கம், நரகம், எல்லாம் நம்முள்ளேயே உள்ளன என்ற கருத்துக்க ளெல்லாம் இன்று சித்தாந்த வேதாந்தச் சிந்தனையாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவையே. எதிர்பார்ப்புள்ளவன் உயர்ந்தோனாக முடியாது. மேலும் அகங்காரம், அதன் முடிவு என்பனபற்றி அவர்தரும் கருத்துக்கள் பல ஆண்டுகள் அவர் ஆராய்ந்த, புராண, இதிகாச, சித்தாந்த, வேதாந்த, மற்றும் நடைமுறை வாழ்வு, உலக அரசியல் என்பனவற்றின் சாரமாகவுள்ளன. இது அவரது சிந்தனைத் தெளிவைக் காட்டுகின்றது.

வினா எழுப்புதல் வேதகால அறிஞர்களிடமும், சோக்கிரடீஸ் போன்ற கிரேக்க அறிஞர்களிடமும் காணப்பட்ட ஆய்வினைத்தூண்டும் முறையாகவும் அறிவை வெளிக்கொணரும் முறையாகவும் பயன்பட்டன. உதாரணத்திற்கு பிளேட்டோவின் குடியரசில் சோக்கிரடீசுக்கும், அவரது நண்பரான அதைமாந்தசுக்குமிடை நடைபெறும், உரையாடலின் சிறிய ஒரு பகுதியைக் குறிப்பிடலாம்.

*சோக்கிரடீஸ் : துணிவும், அறிவும் மிக்க உள்ளம் வெளியுலகச் செல்வாக்கினால் கலக்கமோ, குழப்பமோ அடையாது அல்லவா?*

*அதைமாந்தஸ் : உண்மை (பக்கம் 97).*

அதேபோல் தைத்திரிய உபநிடதத்தில் மனதிற்கு அளிக்கப்படும் உணவு பற்றி மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனக்கூறப்படுகின்றது. மனத்தின் உணவு எது? சிந்தனைகள். நல்ல சிந்தனைகளை மனதிற் கொள்ளவேண்டும் என அவ் உபநிடதம் கூறுகின்றது.

இயற்கையையும் மனித சமூகத்தையும் பற்றிப் பேசும் நூலாசிரியர் பிரபஞ்சக்கோட்பாடு தொடர்பான ஆன்மீகக் கருத்துக்களை விஞ்ஞான லோகாயதவாதம் உடைக்க முடியாததாகின்றதென்ற உண்மையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துகின்றார். எது நடக்கவிருக்கின்றதோ அது நடந்தேதீரும் என்ற சார்புவிதியைக்காட்டி விஞ்ஞானமும் வேதாந்தமும் ஒன்றுபடும் நிலையையும் எடுத்துக் காட்டுவது ஆசிரியரின் ஆழ்ந்த சிந்தனைத் திறனைக்காட்டுகின்றது. மதம், கடவுள் நம்பிக்கை, சம்பிரதாயங்கள், அனைத்தும் பரிணாம வளர்ச்சிக்கு அப்பாற்பட்டவை என்பதை காட்டில் வாழ்ந்த பெண் ஓநாயும், இரு சிறுமிகளும் என்ற உண்மை நிகழ்வு மூலம் எடுத்துக்காட்டுகின்றார்.

ஆசிரியர் ரமணமகரிஷியின் போதனையை எடுத்துக்காட்டி நமக்கான தேடலை நாமேதான் மேற்கொள்ள வேண்டுமென்பதையும், பிறரால் மேற்கொள்ள முடியாது என்பதையும் தெளிவாக்குகின்றார். சம்பளத்திற்காகப் பணியாற்றும் கோயிற்குருக்களை உதாரணங் காட்டுகின்றார் ஆசிரியர்.

மாற்றமொன்றே நிலையானது என கி.மு.500 ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த ஹெரகிளிற்றஸ் எனும் தத்துவஞானி கூறினார். *(Nothing is permanent exept change)* மக்கள் மாறுகின்றார்கள், கருத்துக்கள் மாறுகின்றன. இயற்கையும் மாறிக்கொண்டிருக்கின்றது என அவர் மாற்றம் பற்றிய முக்கிய கருத்தொன்றை வெளியிட்டார். எதுவும் நித்தியமில்லை என்பதையே கௌதம புத்தரும் வாழ்ந்து, உணர்ந்து வெளியிட்டார். இந்த வகையில் கடவுட் கோட்பாடுகளும் மாற்றமுற்றே வருகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்ட மதங்களும் பல அழிவுகளுக்கும் வித்திட்டுள்ளன. மதக்கருத்துக்களில் கொண்ட வெறித்தனம் முப்பதாண்டுப்போர், நூறாண்டுப்போர் என ஏற்பட்டுப் பேரழிவுகளை ஏற்படுத்தியதை உலகவரலாற்றில் காணமுடிகின்றது. இன்றும் இவ்வித வெறிக்காக மக்களைக் கொல்லும் நிலை தொடர்வதை ஆசிரியர் ஒரு தோற்றப்பாடாகக் காட்டுகின்றார்.

சிந்தனையும் செயற்பாடும் ஒன்றை ஒன்று சார்ந்ததாகவே செல்லும் நிலையைக் காட்டும் ஆசிரியர் புதிய சிந்தனை எதுவும் தானாகத்தோன்றுவதில்லை எனவும் பழைய சிந்தனை வேர்களிலிருந்தே கிளை விடுகின்றன என்றும் கூறுகின்றார். புதிய சிந்தனைத்தோற்றத்தின் ஒரு முக்கிய அம்சமாக இது கொள்ளப்படுகின்றது. கடவுள் மறுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையாளர்களை பெருஞ்சிந்தனையாளர்களாகக் காட்டும் பகுத்தறிவு — விஞ்ஞான வாதிகளையிட்டும் கருத்துக்களை வெளியிடவும் ஆசிரியர் தயங்கவில்லை.

சொர்க்கமும் நரகமும் இருவேறுபட்டமனநிலைகள் எனவும், இரண்டுமே நம்முள்ளேதான் உள்ளன என்றும், எதிர்பார்ப்பின்மை ஒரு சிறந்த மனநிலை என்றும் கூறும் ஆசிரியர் சாந்தோக்கிய உபநிடதம் கூறும் "பிரஹ்மபுரம்" என்று உடலைச் சித்தரிக்கும் கருத்தையும் பிரதிபலிப்பதாகத் தெரிகின்றது. அதாவது இறைவன் வாழும் நகரம் என்று உடம்பைக் குறிப்பிட்டாலும் அது மனத்தைச் சுட்டுவதாகவே · அதன் உயர்ந்த நிலையைக் காட்டுவதாகவே அமையும்.

அறிவு, சிந்தனை பற்றிக் கூறவந்த ஆசிரியர் ஈசாவாசிய உபநிடதச் சிந்தனையொன்றை விளக்கமுனைகின்றார். ஆயத்த அறிவு, நுண்ணறிவு இரண்டிலும் மேலானது நுண்ணறிவே என்பதையும் இது குழந்தைகளிடம் களங்கப்படாமலுள்ளது என்பதையும் சில உதாரணக்கதைகளால் வெளிப்படுத்துகின்றார். அறிவும் சிந்தனையும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குவதையும் பகுதியும் முழுமையும் ஒன்றுக்கொன்று சமன் என்பதையும் மனதின் எல்லைக்கோடுகள் அகலும்போது முழுமையுடன் ஒன்றாகிவிட மனதால் முடிகிறதையும் எடுத்துக்காட்டுகின்றார் ஆசிரியர். அனைத்து உலகங்களும் தன்னிடமிருந்து வெளிப்பட்டும் நிறைவான பிரம்மம் நிறைவாகவே இருக்கின்றது என்கிறது ஈசாவாசிய உபநிடதம்.

இப்பிரபஞ்சத்தில் எதுவும் மனிதனுக்கு எதிரானதல்ல. ஆனால் நமது செயற்பாடுகளாலே அவை ஆக்க பூர்வமானதாகவும் அறிவு பூர்வமானதாகவும் மாறுகின்றன என்றும் எமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு அவை மாறவேண்டும் என எதிர்பார்ப்பது தவறானது எனவும், எதிர்பார்ப்புக்கள் வளர ஏமாற்றங்களும் கூடவே வரும் என்ற சிறிஅரவிந்தரின் கருத்தையும் எடுத்துக்காட்டி இறைவனது சித்தப்பிரகாரம் உண்மையை வெளிப்படுத்தக்கூடிய உலகினை உருவாக்கவே இங்கு நாம் பிறவியெடுத்துள்ளதை அரவிந்தர் குறிப்பிடுவதையும் விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பான நமது எண்ணங்களுக்கு கடிவாளம் போடக்கூடாது என்ற ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்களது கருத்தும் இங்கு எடுத்தாளப்படுகின்றது. அதாவது யோகமுறைகள் போன்று முழுமை நோக்கிய பயணத்தில் இயற்கையான போகமுறை ஒரு நெறியாக உள்ளதைத் தந்திரமார்க்கத்தை எடுத்துக்காட்டி விளக்குகின்றார் ஆசிரியர். தந்திரமார்க்கத்திலான முறைகளின் முடிவாக "முழுமையடைதலே" குறிப்பிடப்படுவதையும் ஆணும் பெண்ணுமான சிவனும் சக்தியும் ஒன்றேயன்றி வேறல்ல என்பதையும், விஞ்ஞானமும் இக்கருத்துடன் ஒத்துச்செல்வதையும், யந்திரங்கள் இச்சாதனையின் கருவியாகக் காணப்படுவதையும், போகவாழ்வு. காமநெறி முறைகள் என்பவற்றின் தொடர்பு, அவசியப்பாடு என்பனவெல்லாம் நூலில் வெகுசிறப்பாக எடுத்தாளப்படுகின்றன. இவையெல்லாம் வாசகனின் முழுமையான கவனக்குவிப்பையும், ஆழமான தர்க்கப்பண்பையும் வேண்டி நிற்கின்றன.

நிலையான அன்பு பேணப்படுவதற்கு எதிர்பார்ப்புத் தடையாக அமைகின்றது. தாயினது உண்மையான அன்பிற்கு எதிர்பார்ப்பு இராது எனத்தாயன்பை விஷேடித்து வெளிப்படுத்தும் ஆசிரியர் சொந்த வாழ்க்கை அனுபவங்களையும் புலப்படுத்துவதாகவே தோன்றுகின்றது. தாயின் நிலையில் பிற மனிதரும் இருக்கவே செய்கின்றனர் என்பதற்கும் பொருத்தமான உதாரணங்களை எடுத்தாள்கின்றார் ஆசிரியர். அதேபோல் அறிவை விளங்க அறிவீனமும் தேவையாகின்றது எனும் ஆசிரியர் இயற்கை எப்பொழுதும் சமநிலைப் பேணலை மேற்கொள்வதையும் தெளிவுறுத்துகின்றார். கவனம் சிதறிக்கப்படாதவிடத்து செயற்பாட்டில் மகிழ்ச்சி தானாக எழுவதையும் அதில் முழுத்திறமையும் வெளிக்கிளம்பும் நிலை நமது வெற்றியாக மலர்வதையும் ஆசிரியர் தனக்குரித்தான தர்க்கிக்கும் ஆற்றலுடன் தெளிவுறுத்துகின்றார்.

ஆவிபற்றிய சிந்தனைகள் என்ற பதினான்காம் அத்தியாயத்தில் ஆய்வுதொடர்பான பல சிந்தனைகள் முன்வைக்கப்படுகின்றன. உயிர்கள் தோன்றுதல் மறைதல் என்பன இயற்கை நியதிக்குட்பட்ட நிலையில் ஆவி பற்றிய வினா எழுகின்றது. உடல் எடுத்த உயிர் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலைக் கொண்டு இனிச் செயற்படமுடியாது என்று கருதும் பொழுது உடலைவிடுகின்றது எனவும் அது மரணம் எனப்படுவதையும் கடஉபநிடதம் கூறும். ஆவிபற்றிய ஆய்வுகள் பிரித்தானியாவில் 19ம் நூற்றாண்டில் முன்னெடுக்கப்பட்டன. சுவாமி அபேதானந்தர் மற்றும் மறைமலையடிகள் போன்றோரது ஆய்வுகளும் நூலில் குறிப்பிடப்படுகின்றன. கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய, சமண சமயங்களும் ஆவி பற்றிக் குறிப்பிடுகின்றன. சமூக நம்பிக்கைகள் இறந்தவர்க்குச் செய்யும் கடமைகள், ஆண்டு தோறும் செய்யப்படும் பிதிர் கடன்களும் எடுத்துரைக்கப்படுகின்றன. இறுதியாக கடவுட் கொள்கையும் கோட்பாடும் எவ்வாறு புரியாத புதிராக இருக்கின்றதோ அது போன்றே ஆவி பற்றிய கருத்தும் புரியாத புதிராக இருப்பதாக ஆசிரியர் குறிப்பிட்டு இப்பகுதியை நிறைவு செய்கின்றார்.

முழுமையை நோக்கி நாம் என்ற இறுதி அத்தியாயத்தில் நாம்யார் என்பதை அறிய முழுநிலைப்பட்ட அனுபவ உணர்வின் அவசியத்தை வலியுறுத்தும் ஆசிரியர் நம்மை நாம் தேடிக்கொள்ளவேண்டும். அதற்காக நம்மிடத்தே ஒருகுரு இருப்பதான ஒரு உறுதியான மனோநிலையைக் கொள்ளவேண்டும். சுதந்திரமான, தெளிவான எமது இயக்கத்திற்கு இது அவசியம் எனும் உயரிய சிந்தனையையும் ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். கடவுள் என்பது உள்ளே தேடுகின்ற ஒன்றேதவிர வெளியில் தேடுவதல்ல. பிறப்பும், இறப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை விளங்கிக்கொண்டால் மரணபயமும் வேறு துன்பங்களும் அணுகா என்ற உண்மையை நிலைநிறுத்தும் ஆசிரியர் அவதார புருஷர்களால் தர்மம் நிலைநாட்டப்பட்டபின்னரும் அதர்மம், போர் என்பன தலையெடுக்கும் நிலைதொடர்வதையும், இதை உலக நியதியாகவும் பார்க்க முடிவதையும் ஆசிரியர் தெளிவுபடுத்துவதைக் காணமுடிகின்றது. மாறும் தன்மைக்குள் மாறாத ஒன்றைப் புரிந்துகொள்ள எடுக்கப்படவேண்டிய முயற்சி பற்றியும் ஆசிரியர் குறிப்பிடுவதைக் காணலாம். இதற்கு மனது வெறுமையாக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டு அப்போதுதான் நமது பயணம் பூரணத்துவத்தை நோக்கியதாயமையும் என்பதையும் தெளிவுபடுத்தும் பாங்கு சிறப்பாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஒருவனிடம் இருப்பவற்றை வைத்தே அவனை எடைபோடுகின்றோம். வீடு, செல்வம், பதவி, அந்தஸ்து போன்ற புறவளர்ச்சிகளே அவனை நிர்ணயிக்கின்றன. ஆனால் அகவளர்ச்சி, உணர்வின் விரிவு என்ற ஒன்று உள்ளது. மனிதன் அகத்திலும் வளர்கிறான். அன்பு, இரக்கம், விவேகம் போன்ற அவனது பண்புகள் விரிகின்றன. தன் உடம்பை, தன்னைமட்டுமே நேசித்தவன் தன்வீடு, தன்கிராமம், தன் நாடு, உலகம் என்று பிரபஞ்சம் முழுவதையுமே தனதாகக் கண்டு, தானாகக் கொண்டு நேசிக்கும் அளவிற்கு அவனது உணர்வு விரிகின்றது. இந்த அகவளர்ச்சிதான் உண்மையான வளர்ச்சி. புறவளர்ச்சிக்குக் காரணமாக அவனிடம் சேர்ந்தவை விலக நேர்ந்தால் அவன் பழையபடியே ஆகிவிட நேர்கிறது. ஆனால் அகவளர்ச்சியில் எதையும் இழக்கும் அபாயம் இல்லை. "மேலானது வேறு, சுகம் தருவதுவேறு அவை இரண்டும் வேறுபட்ட பலன்களைத்தந்து அவற்றின் மூலம் மனிதனைப் பிணைக்கின்றன. மேலானதை ஏற்றுக்கொள்பவனுக்கு நன்மை உண்டாகின்றது. சுகம் தருவதை நாடுபவன் லட்சியத்திலிருந்து வீழ்கிறான்". என்ற கடஉபநிடதச் சிந்தனையைக் குறிப்பிட்டு நூலாசிரியரின் இழக்க முடியாத அகவளர்ச்சிக்கு எனது பாராட்டைத் தெரிவித்து இவ்வணிந்துரையை நிறைவுசெய்கின்றேன்.

**பேராசிரியர் மா.செல்வராஜா**
*(முன்னாள் பீடாதிபதி,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து கவி

சொற்கொண்டல் நல்லறிஞன் தொல்லியல்சார் ஆய்வாளன்
நற்றமிழே ஊற்றான நம்மீழக் கவிவாணன்
பொற்புநிகர் நெஞ்சுரத்தோன் புகழ்நாடாப் பொன்மனத்தோன்
வெற்றிக் கனியெங்கள் வெல்லவூர்க் கோபாலாம்!

பல்துறைசார் கலைப்புலத்துள் பனுவல் பலசெய்தே
நல்லறிஞர் உளம்வாழும் "நல்லறிஞன்" நம்கவிக்கோ
பல்லாண்டு அனுபவத்தின் பார்வைக்குள் நிலைத்தாய்ந்தே
சொல்லரிய பணியொன்றத் தொடக்கிநம் கையளித்தான்

"பிரபஞ்சமும் வாழ்வியலும்" பேசும் கருப்பொருளாய்
இருவேறு நிலைக்குள்ளும் இணைப்பொன்றைக் கண்டறிய
விரிவான பார்வைக்குள் வினாவாகி விடைதேடும்
வரமான நம்கோபால் வாழ்ந்திடுவான் பல்லாண்டே!

தன்மானத் தமிழாளர் வாழு மீழத்
தமிழ்மண்ணாம் மட்டுநகர்த் தென்பா லாங்கே
விண்ணோங்கப் புகழ்மேவும் வெல்ல வூராம்
வியந்தோங்கப் பாரெங்கும் மிகுந்தே ஞானப்
பண்ணோங்கப் பேர்பொறித்த கவிக்கோ கோபால்
பார்போற்றும் படைப்பாளி பன்னூல் யார்த்தே
என்னாளும் இன்புற்றே நீடு வாழ
இறையடியே தஞ்சமென இறைஞ்சி கின்றேன்!

பாவாணர் - முனைவர்
**எஸ்.பாவேந்தன்**
சட்டத்துறைப் பேராசிரியர், இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழை வாயில்...

"முழுமையுடன் முழுமையைக் கூட்டினால் முழுமையே வரும்
முழுமையிலிருந்து முழுமையைக் கழித்தாலும் முழுமையே வரும்"

-ஈசாவாசிய உபநிடதம்-

26.12.2004ல் உலக அரங்கில் விஸ்வரூபம் எடுத்த சுனாமியைப் பற்றி நாம் நிறையவே அறிந்துவைத்துள்ளோம். அதன் பிரதிபலிப்பாக 17.02.2005ல் "சுனாமி ஒரு மீள் பார்வை" என்ற நூலினை விபுலம் வெளியீடாக வெளிட்டிருந்தேன். அதில் "இப்பிரபஞ்சம் பொதுவாக இருபக்கக் கருத்துக்களின் சார்பு அம்சமாகவே தென்படுகின்றது. ஊக அறிவு அல்லது தர்க்க அறிவே பிரபஞ்சத்தை ஓரளவேனும் புரிந்துகொள்ள உதவுகின்றது. இது நேரடி அறிதல் இல்லாவிட்டாலும் தர்க்கத்தின் ஊடான ஒரு வெளிப்பாடாக இதனைக் கருதமுடியும். நம்மைச் சுற்றிப் பரந்து விரிந்து கிடக்கின்ற இப்பேரண்டத்தைப் பார்க்கின்றோம். அங்கே ஒரு ஒழுங்கமைவு — அதுவும் ஒரு இசைவுபெற்ற திட்ட அமைவே நமக்குத் தெரின்றது. இதற்கு எவ்வாறு விளக்கம் தருவது. அறிவியலின் முயற்சியானது தொடர்ந்தால்போல் இதனைத் தேடிக்கொண்டிருக்கின்றது. அது இன்னும் பலப்பல திட்ட அமைவுகளையும் புதிய புதிய இயற்கைசார் விதிகளையும் கண்டுபிடித்துக்கொண்டே செல்கின்றது. விஞ்ஞானத்தின் இப்போக்கு இன்றோ நாளையோ முடிந்துவிடப்போவதில்லை. அது தொடரத்தான் செய்யும். இவற்றையெல்லாம வைத்துப் பார்க்கின்றபோது இப்பிரபஞ்சத்தை ஒரு தற்செயல் நிகழ்வு என்று கூறமுடியுமா? ஒருபோதும் மாறுபட்டிராத — மாறுபடாத திட்டவட்டமான குறித்த விதிகளின்படித்தானே இப்பிரபஞ்சம் இயங்குகின்றது. இது எதனைக் காட்டுகின்றது? அபாரமாகவும் பெரும் நுணுக்கத்துடனும் எல்லையற்றும் மிக மிக அற்புதமாகவும் மொத்தப் பிரபஞ்சமும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளலயத்துடன் இயங்கிக்கொண்டிருப்பதை எந்தத் திட்டமும் எந்தச் செயல்பாடும் - இந்தப் பிரபஞ்சத்தையும் அதன் காலவோட்டத்தையும் மாற்றிவிட முடியாது என்பதுதானே அது" எனக் குறிப்பிட்டிருந்தேன்.

என்நெஞ்சின் அடித்தளத்தில் இறுக்கமாக வேர்கொண்ட இக்கருத்துக்கள் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்தாற்போல் பல கேள்விகளை என்னுள் எழுப்பின. இத்தனைகால வாழ்வியல் பலநிலையிலும் இக்கருத்துகளோடு சங்கமிக்கவே செய்தன. இதுகாலவரையும் கண்ணில்கண்ட நூல்களும் இணையத்தளத் தேடல்களும் கேள்விகளை தொடர்ந்தும் எழுப்பமட்டும் உதவினவே தவிர அதற்கான விடையினைத்தர உதவவில்லை. அதில் பட்டறிவே இங்கு பதிவாகிநிற்கின்றது.

இப்பிரபஞ்சத்தைப் பொறுத்தவரை நாமறிந்தவை கைமண்ணளவுதான் இருக்கின்றது. எந்தவொரு அறிவியல் கோட்பாடோ கண்டுபிடிப்புகளோ இன்னும் ஒரு தீர்க்கமான முடிவை எட்டவில்லை. இது ஒரு இலகுவான காரியமுமில்லை. முற்றுமுணர்ந்த முனிவராக ஸ்வேதாஸ்வதர உபநிடதம் குறிப்பிடும் கபிலமுனிவரைப்பற்றி அறிகின்றோம். கபிலரின் தத்துவக் கோட்பாடு சாங்கியம் என்ற பெயரால் வழங்கப்படுகின்றது. சாங்கியம் என்றால் தத்துவங்களைக் கணக்கிட்டுக் கூறுவதாகும். நாமறிந்தவரை இந்தப் பிரபஞ்சத்தை அறிவியல் ரீதியாக ஆராய்ந்து விளக்கிய முதல் தத்துவ ஞானியாக கபிலரே முன்னிறுத்தப்படுகின்றார். அவரது சூத்திரங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவன.

"கடவுள் இருக்கின்றார் என்பதனை யாரும் நிரூபிக்கமுடியாது. அவர் சுயேச்சையாக தன்னிச்சையாக இயங்கிக்கொண்டிருப்பவராகவும் வேறு ஒன்றுக்கு கட்டுப்பட்டவராகவும் இருக்கவும்முடியாது. அவர் பூரணமானவர் என்பதால் எதனையும் படைக்கவோ காக்கவோ அழிக்கவோ அவருக்கு அவசியமில்லை. இப்பிரபஞ்சத்திற்கு அப்பால் தனித்தோ வெளிப்புறமாகவோ கடவுள் என்று ஒன்று இருக்கமுடியாது" என்பது கபிலரின் கூற்று. இதனை ஆழ்ந்து நோக்கும் தன்மையில் பிரபஞ்ச செயல்பாடுகள் அனைத்தும் அதனுள் அடங்குவதாகவே அர்த்தம்கொள்ளவேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருக்ஷ்ன பரமஹம்சரின் நேரடித் தூதரான சுவாமி ராமகிருக்ஷ்னானந்தர் கபிலமுனிவரின் பிரபஞ்ச தத்துவங்கள் தொடர்பில் தனது *"The Universe and Man"* என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இருப்பது ஒன்றேயொன்றுதான். அது சர்வ வல்லமையுள்ளது, எங்கும் நிறைந்தது, ஆதியந்தமற்றது, அழிவற்றது, தூயது, குறைவற்றது, பூரணத்துவமுடையது, முற்றிலும் சுதந்திரமானது. படைப்புகள் அனைத்தும் அதன் சித்தத்தின் வெளிப்பாடுகள். அது அதனது திருவுளப்படி திருவுள்ளத்தினுள்ளேயே நடைபெறுகின்றது. எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் கடவுள் கருத்துக்கு முரண்படாத வகையில் பிரபஞ்சம் பற்றிய ஒரு முடிவுக்கு நாம் வரவேண்டுமானால் பிரபஞ்சம் அவ்வொன்றினது கனவில் ஒரு கற்பனை என்றுதான் சொல்லவேண்டும்." எனக் குறிப்பிடுகின்றார்.

நாம் விழித்திருக்கும்போது எப்படி வேண்டுமானாலும் நம்மால் கற்பனைசெய்யமுடியும். ஆனால் நன்றாகத் தூங்கிவிட்டால் எதுவுமே நமக்குத் தெரியவராது. நம்மைப் பொறுத்தவரை எந்தப் பிரபஞ்சமும் அப்போது இருக்கமாட்டாது. காலநேரங்களும் இடப்பரப்புகளும் நமக்குத் தெரியவராது. இதுகுறித்து சொல்லப்போனால் நமது அறிவிற்கும் உணர்விற்கும் எட்டாத ஒன்று நிச்சயமாக வெளியில் இருக்கமுடியாது. எனவே இப்பிரபஞ்சமானது நமக்குள்ளேயே இருக்கின்றது என்பதே உண்மையாகும்.

ஐரோப்பாவின் தலைசிறந்த தத்துவ ஞானிகளில் ஒருவராகக் கருதப்படுபவர் தத்துவமேதை இம்மானுவல் காந்த். அவரது தத்தவ ஆராய்ச்சிப்படி நமது உடலை வியாபித்திருப்பது மனமென்றும் மனத்தை வியாபித்திருப்பது பரமாத்மா என்றும் எனினும் பரமாத்மாவானது மனத்துள் அடக்கமென்றும் குறித்துச் சொல்லப்போனால் அனைத்துமே நமக்குள் அடக்கமென்றும் குறிப்பிடுகின்றார். அதாவது இடமும் காலமும், இடைவெளியும் காலநேரங்களும் அனைத்துமே, பஞ்சேந்திரியங்களும் மனமும் தோற்றுவிக்கும் வெறும் வடிவங்களேயென்பதுவும் இவற்றிற்கு அப்பால் புறம்பாக எதுவுமேயில்லையென்பதுவும் இவரது கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்ற விஞ்ஞானி (1972) அவரது கட்டுரையொன்றில் "பிரபஞ்சமானது ஒரு மாபெரும் இயந்திரமோ அன்றேல் இயக்கமோ அல்ல. மனதில் பிரதிபலிக்கும் எண்ணமாகவே அதனைக் கொள்ளவேண்டும். நமது மனமானது அகஸ்மாத்தாக ஏற்பட்ட ஒன்று அல்ல. ஜடப்பொருட்கள் அனைத்தும் நம் மனத்தின் கற்பனையே. அவற்றிற்கு இருப்பைத்தருவதும் நமது சிந்தனையே" எனக் குறிப்பிடுகின்றார். பொதுவாக எல்லா விஞ்ஞானிகளும் இக்கருத்தினை ஏற்கவே செய்கின்றனர்.

உபநிடதங்களைப் படிக்கும்போது நசிகேதனுடைய உள்ளத்து துறவுபற்றி வியந்துபோகின்றோம். இயமன் கொடுத்த அனைத்துச் செல்வப்பேறுகளையும் வேண்டாமென ஒதுக்கிவிட்டு மரணத்தின் பின்னரான ஆன்மாபற்றிய விளக்கத்தினை அவன் பெறுவதைப்பார்க்கின்றோம். "எனக்கு ஒரு விடயம் புரியவேண்டும். மனிதன் இறந்தபின்னர் சிலர் அவன் இருப்பதாகக் கூறுகின்றனர். வேறுசிலரோ அவன் இல்லையெனக் கூறுகின்றார்கள். இதையே உங்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விழைகின்றேன்" என நசிகேதன் கேட்க இயமன் திக்குமுக்காடிப்போகின்றான். இயமன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் நசிகேதன் விடுவதாயில்லை. இப்போது இயமன் பதிலளிக்கின்றான். "உடல் இறந்தபின்னும் ஞானபரமான ஆன்மா இறப்பதுமில்லை பிறப்பதுமில்லை. அது எதிலிருந்தும் தோன்றுவதுமில்லை. அதேபோல் அதிலிருந்து எதுவும் தோன்றுவதுமில்லை. பிறப்பற்றதும் நிரந்தரமானதும் எப்போதுமே நிலைத்திருக்கின்றதுமான அந்த ஆன்மா உடல் அழிந்தபின்னும் அழிவதில்லை. ஆன்மாவானது கொல்வதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை. இதில் கொல்பவன் தான் கொல்வதாகவும் கொல்லப்படுபவன் தான் கொல்லப்படுவதாகவும் நினைத்தால் அவ்விருவரும் உண்மையை அறியாதவர்கள் என்பதே பொருளாகும்.".

இங்கே இயமன் ஆன்மாவை ஞானபரமானதாக குறிப்பிடுவது பெரும் அர்த்தப்பாட்டினைக் கொண்டிருப்பதை நாம் கவனத்தில்கொள்ளவேண்டும். பொதுவாக எல்லா நாட்டங்களும் ஆசைகளும் பந்தபாசங்களும் நாமாகவே வருவித்துக் கொண்டவைதானே?. இதையேதான் சுவாமி விவேகானந்தர் "நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதனை நினைக்கின்றோமோ அதுவாகவே ஆகிவிடுகின்றோம்" எனக் குறிப்பிடுகின்றார்.

பகவான் புத்தர்பெருமானின் உபதேசங்களில் "அங்குத்தர நிக்காய" மிகுந்த முக்கியத்துவம் பெறுபவை.

1. எனக்கு ஒருநாள் முதுமைவரும். அதனை நான் தவிர்க்க இயலாது.
2. எனக்கு ஒருநாள் நோய்வரும் அதனை நான் தவிர்க்கமுடியாது.
3. எனக்கு ஒருநாள் மரணம்வரும். அதனைநான் தவிர்க்கமுடியாது.
4. எதையெல்லாம் எனக்குப் பிரியமானதாக நினைத்தேனோ அவையெல்லாம் ஒருநாள் என்னைவிட்டு மாறியோ அழிந்தோ போய்விடும். அதை நான் தவிர்க்க இயலாது.
5. என்னுடைய செயல்களின் வெளிப்பாடாகவே நானிருக்கின்றேன். அவை நல்லவையோ கெட்டவையோ அவற்றிற்கு வாரிசாகப்போவதுவும் நானே.

நமது செயல்கள் நல்லவையாக அமைய மனக்கட்டுப்பாடு நமக்கு அவசியமாகின்றது. மனதை ஒருமுகப்படுத்த "ஓம்" எனும் பிரணவ மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருப்பது பெரும் நன்மை பயப்பதாக கூறப்படுகின்றது. இதனை பதஞ்சலி யோக சூத்திரமும் (1. 27-39) குறிப்பிடுகின்றது. "கடவுளின் சொல்வடிவமே "ஓம்" ஆகும். ஓம் என்ற சொல்லை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதன் மூலமும் அதன் பொருளைச் சிந்திப்பதன் மூலமும் அதனுடைய அகக் காட்சி பற்றிய அறிவினை நாம் பெறமுடியும். தடைகளும் அகலும்." இவ்வாறு யோக சூத்திரம் விளக்கமளிக்கின்றது. வேதங்களில் ஓம் என்ற வார்த்தையானது மிகவும் உயர்வானதாகவும் புனிதம் மிக்கதாகவுமே கருதப்படுகின்றது.

சுவாமிவிவேகானந்தர் வேதாந்தம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரையில் உலக சிருஷ்டி பற்றிக் குறிப்பிடும்போது "பிரகிருதியென்றும் மாயையென்றும் அழைக்கப்படும் இயற்கையானது ஆரம்பமும் முடிவுமற்றது. இயற்கையின் ஆக்கும் சக்தியானது இடைவிடாமல் வேலைசெய்துகொண்டேயிருக்கின்றது. இதனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதையில் கிருக்ஷ்ன பகவானும் கூறுகின்றார். "நான் ஒரு கணமேனும் வேலை செய்யாமலிருந்தால் இவ்வுலகம் அழிந்துவிடும். நம்மைச் சுற்றிலும் அல்லும் பகலும் வேலைசெய்துகொண்டிருக்கும் ஆக்கச் சக்தியானது ஒரு வினாடி நின்றாலும் இவ்வுலகம் அழிந்துவிடும். இச்சக்தியானது வேலைசெய்யாத காலமே கிடையாது. எனினும் அது மாறிமாறி அழிவதும் தோன்றுவதுமாகவேயிருக்கும்". மேலும் அவர் தனது உரையில் இது தொடர்பாக சில கேள்விகளையும் முன்வைக்கின்றார். அப்படியாயின் இதற்கான சிருக்ஷ்டியை மேற்கொள்வது யார்? கடவுள் என்று கூறினால் அதற்கான பொருள் என்ன? கடவுளே இவ்வுலகை உருவாக்கிக்கொண்டிருக்கின்றார் என்றால் இதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், கொடுமைகள், போட்டிபொறாமைகள் அனைத்தும் உலக வாழ்க்கையின் தன்மையாக விளங்கத்தக்கவையா என அவர் கேள்வி எழுப்புவதைப் பார்க்கின்றோம்.

இந்தியாவை விடுத்து மேலைநாடுகளை பார்ப்போமானால் பாலஸ்தீனத்தில் தோன்றிய மோசஸ் என்ற ஞானி இறைவன் ஒருவனேயென்றும் அவனிடமிருந்தே இப்பிரபஞ்சமும் எல்லா ஆன்மாக்களும் தோன்றின என்றும் அதனடிப்படையிலே தனது போதனைகளையும் மேற்கொண்டார். அதன்பின்னர் வந்த யேசு கிறிஸ்து ஞானமார்க்கத்தை பரப்பினார். அவரது பாதையில் மோட்ச சாம்ராச்சியம் நமக்குள் இருப்பதையும் கடவுளை நமக்குள்ளேயே தேடவேண்டிய அவசியத்தையும் அவர் போதித்தார். இதில் மோசஸ்சும் யேசுநாதரும் காட்டிய வழிகளும் ஆதிசங்கரர், மத்வார் மற்றும் இராமானுக்ஷர் போன்றவர்கள் காட்டிய பாதையும் ஒன்றாகி நிற்பதைக்காணமுடிகின்றது.

நபிகள் பெருமானாரைப் பொறுத்தமட்டில் அவருக்கு கிட்டிய இறையனுபவத்திற்குப்பிறகு மனித சமூகம் உய்வுற மேலான அறிவுரைகளையே மக்களுக்கு அவர் வழங்கினார். கற்றறிந்தோர் வியக்கும்வண்ணம் வெளிவந்த அவரது வாய்ச்சொற்கள் இறைவனின் சொற்களாகவே அமைந்தன. குர்-ஆனைப் படிக்கும்போது அவை இறைவார்த்தைகளாகவே வெளிவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர்பெருமான் தனது ஞானோதயத்திற்காக சோதனைகள் பலவற்றைச் சந்தித்தவர். தான்பெற்ற மெய்ஞானத்தை பகிர்ந்து கொள்ளக்கூட நல்ல சீடர்கள் தொடக்கத்தில் அவருக்குக் கிடைக்கவில்லை. காயாவிலும் தொடர்ந்து வாரணாசி போன்ற இடங்களிலும் அவர் தனது போதனைகளை மேற்கொண்டார். துன்பத்தின் தீர்வே நிர்வாண நிலையென்றும் அதனை அடைய உள்முகமாகப் பார்வையை செலுத்துவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பொதுவாக உலகில்தோன்றிய எல்லா மகான்களும் எல்லா மதங்களும் நமக்கு போதிப்பவை அனைத்தும் ஒன்றேயென்பதை நாம் ஏற்றுக்கொண்டோமானால் எந்தப் பிரச்சனையும் நம்மில் எழ வாய்ப்பில்லை. வாழ்வில் நம்பிக்கை என்பது கடவுளை நம்புவதன் ஊடாகவும் அமையலாம் அல்லது தன்னைத்தானே நம்புவதன் மூலமும் அமையலாம். இவையிரண்டும் வேறுபட்டவையல்ல என்பதேயுண்மை.

சொல்லப்போனால் ஸ்ரீ இராமகிருக்ஷ்ணர் கூறுவதைப்போல பௌத்தர்கள் உண்மையான பௌத்தர்களாக வாழட்டும். இந்துக்கள் உண்மையான இந்துக்களாக வாழட்டும். முகம்மதியர்கள் உண்மையான முகம்மதியர்களாக வாழட்டும். கிறிஸ்தவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக வாழட்டும்.

கவிக்கோ வெல்லவூர்க் கோபால்

(தேசியக் கலைஞர் எஸ்.கோபாலசிங்கம்)

143/23 எல்லைவீதி,மட்டக்களப்பு,(இலங்கை)

தொ.பேசி:0091 65 2222993,
0718938367, 0750584427,0764644460
e-mail: manuvetha@gmail.com

**Kaviko Vellavoor Gopal**
(National Artist S.Gopalasingham)
143/23. Boundary Road,
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | |
|---|---|
| *01: பிரபஞ்சம் பற்றிய முன்மொழிவு* | *01* |
| *02: பிரபஞ்ச தத்துவம்* | *06* |
| *03: கடவுள் கொள்கையும் கோட்பாடும்* | *11* |
| *04: மனிதனும் மனமும்* | *17* |
| *05: இயற்கையும் மனித சமூகமும்* | *22* |
| *06: நாம் யார்?* | *28* |
| *07: மதமும் மனிதனும் மாற்றங்களும்* | *32* |
| *08: சிந்தனையும் செயல்பாடும்* | *41* |
| *09: நம்பிக்கையும் அவநம்பிக்கையும்* | *45* |
| *10: அறிவும் சிந்தனையும்* | *52* |
| *11. மனதும் புத்தியும்* | *56* |
| *12: போகவாழ்வும் காம நெறிமுறைகளும்* | *59* |
| *13: வெற்றியும் தோல்வியும்* | *65* |
| *14: ஆவிபற்றிய சிந்தனைகள்* | *70* |
| *15: முழுமையை நோக்கி நாம்* | *80* |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01.
# பிரபஞ்சம் பற்றிய முன்மொழிவு

பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றி இன்று அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடு "பெருவெடிப்பு கோட்பாடு" *(Big Bang Theory)* ஆகும். இக்கோட்பாட்டின்படி பிரபஞ்சமானது அணுவைவிடவும் மிகச் சிறியதாகவும் மிகமிக அடர்த்தி மிக்கதாகவும் இருந்து விரிவடைந்ததாகவும் இதனையே பெருவெடிப்பு எனவும் குறிப்பிடப்படுகின்றது. இது நிகழ்ந்த காலத்தை அண்ணளவாக 13.8 பில்லியன் வருடங்கள் எனவும் விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர். மேலும் இப்பிரபஞ்சமானது தொடர்ந்தாற்போல் விரிவடைந்து செல்வதும் உணரப்பட்டதாகும். அத்தோடு இப்பெருவெடிப்பு ஏற்பட்ட காலத்திலும் அதனைத்தொடர்ந்துவந்த காலத்திலும் பிரபஞ்சம் என்னென்ன மாற்றங்களை அடைந்துள்ளது என்பதையும் விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

தற்போது நாம் பார்க்கின்ற சூரியன் அண்ணளவாக 5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் உருவானதாகவும் ஏற்கனவே அவ்விடத்தில் இருந்த ஒரு விண்மீன் வெடித்த எச்சத்தில் இச் சூரியன் உருவானதாகவும் சூரியன் உருவாகியதன்பின்னர் அதனை சூழவிருந்த துகழ்கள் கொஞ்சம் கொஞ்மாகச் சேர்ந்து கோள்கள் உருவானதாகவும் கூறுகின்றனர். சுமாராக 4.5 (நாலரை) பில்லியன் வருடங்களுக்குமுன்னர் பூமி மற்றும் ஏனைய கோள்கள் உருவாகியதெனவும் இவ்வுருவாக்கத்திற்கு தேவையான மூலப்பொருட்களும் ஏனைய மூலகங்களும் விண்மீன்களிலிருந்தே உருவானதாகவும் விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர். இதனையே பிரபஞ்சத் தோற்றத்திற்கான பெருவெடிப்பு கோட்பாடு என நாம் அறிகின்றோம். எனினும் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரையும் நேரடியாக தக்க ஆதாரங்களுடன் நிருபிக்கப்படவோ அன்றேல் மறுக்கப்படவோ இல்லை.

பிரபஞ்சத் தோற்றம்பற்றி மதரீதியான கோட்பாடுகளை விடுத்து விஞ்ஞான ரீதியாக வேறு கோட்பாடுகளும் பெருவெடிப்புக் கோட்பாட்டிற்கு சவாலாகப் பேசப்பட்டதுமுண்டு. இதில் முக்கியமான கோட்பாடு "நிலையான பிரபஞ்சக் கோட்பாடு" *(Steady State Theory)* என்ற பெயரைக் கொண்டிருந்தது. இக்கோட்பாட்டின்படி பிரபஞ்சத்திற்கு தொடக்கமுமில்லை முடிவுமில்லை என்றும் அது தொடர்ந்தும் அப்படியே இருக்குமென்றும் எனினும் அது தொடர்ந்தாற்போல் விரிவடைந்து செல்லுமென்றும் கூறப்பட்டது. பிரபஞ்சத்தின் ஒரு குறித்த பகுதியில் உள்ள பருப்பொருள்களின் சராசரி அடர்த்தியானது அதன் ஏனைய எல்லாப் பகுதிகளிலும் அதேதன்மையில் காணப்படுமென்றும் இதனால் பிரபஞ்சத்தை எங்கு நோக்கினாலும் அது ஒரே சீராகவே இருக்குமெனவும் அக்கோட்பாடு விளக்கியது. 1950 காலப்பகுதியில் இயற்பியலாளர்களால் முன்வைக்கப்பட்ட இக்கோட்பாடு விஞ்ஞான உலகில் பெரும் வரவேற்பைப் பெற்றதாகவே விளங்கியது. எனினும் 1965ல் புகழ்பெற்ற பிரபஞ்சவியலாளர் ஸ்ரீபன் ஹவ்கிங் போன்றவர்களால் வெளிவந்த பிரபஞ்ச நுண்ணலை தொடர்பான கண்டுபிடிப்புகள் "நிலையான பிரபஞ்சக் கோட்பாட்டை" பின்னோக்கித் தள்ளி மீண்டும் பெருவெடிப்புக் கோட்பாட்டை முக்கியப்படுத்தியது. எனினும் சில இயற்பியலாளர்கள் நிலையான பிரபஞ்சக் கோட்பாட்டில் கொண்ட நம்பிக்கையை இன்னும் இழந்துவிடவில்லையென்பதே உணமையாகும். இதுபோக புதிய இயற்பியல் முறைகளான "குவாண்டம் இயற்பியல்", "ஸ்ற்றிங் கோட்பாடு", "எம்- கோட்பாடு" போன்ற பிரபஞ்சக் கோட்பாடுகளும் வெளிவந்துள்ளன.

பிரபஞ்சம் மற்றும் அதன் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துக்கள் இதுவரை முன்மொழியப்பட்டுள்ளன. அவை பொதுவாக அந்த அந்தக் காலத்தில் பெறப்பட்ட தரவுகள் மற்றும் பிரபஞ்சம் தொடர்பான ஆய்வுகளை அடிப்படையாக வைத்து அமைந்தவையாகும். வரலாற்று ரீதியில் பார்க்கும் தன்மையில் பிரபஞ்சவியல் மற்றும் பிரபஞ்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியியல் போன்றவை பலதரப்பட்ட கடவுளரின் செயல்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு அமைந்திருந்தன. இயற்பியல் விதிகளால் நிருவகிக்கப்படுகின்ற பிரபஞ்சத்தின் நடுநிலையான கொள்கைகளை முதலில் கிரேக்கர்களும் இந்தியர்களுமே முன்மொழிந்தனர். பல நூற்றாண்டுகளாக நடைபெற்ற விண்வெளி ஆய்வுகள் மற்றும் ஈர்ப்பியல் கொள்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் போன்றவை இப்பிரபஞ்சத்தின் துல்லியமான விளக்கங்களை நாம்பெற உதவின. எனினும் பிரபஞ்சவியலின் புதிய சகாப்தம் உலகின் தலைசிறந்த விஞ்ஞானியாகக் கருதப்படுகின்ற அல்பேர்ட் ஐன்ஸ்டீனின் 1915ல் வெளியான பொதுச் சார்புக் கொள்கையுடனேயே ஆரம்பமானது. அது முழுப் பிரபஞ்சத்தினதும் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் முடிவு ஆகியவற்றை அளவிடும் தன்மையில் கணிப்பீடுகளைக் கொண்டிருந்தது. ஓப்புக்கொள்ளப்பட்ட மிக நவீனத்துவம் மிக்க பிரபஞ்சவியல் கோட்பாடுகள் ஐன்ஸ்டீனின் பொதுச்சார்புக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டவை என்பதையே இன்று உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பிரபஞ்சம் தொடர்பில் மத ரீதியாக முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களும் பலரின் கவனத்தை ஈர்ப்பதாகவே உள்ளன. இது தொடர்பில் இந்திய தத்துவஞானியான சத்குரு, யோக மரபினூடாக எல்லையில்லாப் பிரபஞ்சம் தொடர்பில் முன்வைக்கும் கருத்துக்களும் இங்கு நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. அவர் கூறுவதைப் பாருங்கள்.

"எல்லையில்லாப் பிரபஞ்சம் என்பது யோகமரபில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சொல்லப்பட்டதாகும். பெரு வெடிப்புகள் ஒன்றல்ல, பல நிகழ்ந்திருக்க வேண்டுமென்று இப்போது சிலர் சொல்கின்றனர். பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பெருவெடிப்பு நிகழ்ந்து அதன் விளைவாகவே இந்தக் கோள்களும் பிரபஞ்சமும் உருவாகியதாகச் சொல்கின்றனர். இந்தக் கோட்பாடுகள் ஏறக்குறைய யோகமரபின் தொன்மங்களையே கொண்டுள்ளன. எவற்றையெல்லாம் நாம் புனிதமானவை எனக்கருதி வழிபட்டு வருகின்றோமோ அந்த வடிவங்கள்பற்றி இவர்கள் இப்போது பேசத் தொடங்கியுள்ளனர். எல்லையில்லாத இந்தப் பிரபஞ்சத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இருப்பதனைத்தையும் நம்மால் கண்டறிந்துவிடமுடியாதென யோகமரபு கூறுகின்றது. விஞ்ஞானிகள் கூறுகின்ற எல்லையில்லாப் பிரபஞ்சமும் இதே கருத்தையே முன்வைக்கின்றது. அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் என்பார்கள். எனவே இந்த இருப்பின் தன்மையை உணர மிகச் சிறந்தவழி உள்நோக்கித் திரும்புவதுதான். நமது உடலானது இப்பிரபஞ்சத்தின் சுருக்கப்பட்ட பிரதி. பிரபஞ்சத்தில் எது நடந்தாலும் இந்தச் சிறிய உடலில் ஏதோ வழியில் அது பதிவாகி விடுகின்றது. கடவுளின் பிம்பத்தில் மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என்பதுவும் இதனால்தான். படைப்பிலிருந்து படைத்தவனை நம்மால் பிரித்துவிடமுடியாது. யோக மரபு எப்படி இதனை விளக்குகின்றது பாருங்கள்.

அடிப்படையில் இது இயங்கியல் தன்மையைக்கொண்டது. இது தர்க்க எல்லைக்கு அப்பாற்பட்ட ஒரு அம்சம். இது இங்கு ஒரு கதையின் வடிவில் பேசப்படுகின்றது. உருத்திரன் ஆன சிவன் உறங்கிக்கொண்டிருந்தாராம். இங்கு சொல்லப்படும் சிவன் மனிதரோ யோகியோ அல்ல. எது இல்லையோ அது சிவனாகும். இல்லாத ஒன்றால்தான் உறங்கமுடியும். சக்தி சிவனை எழுப்ப முற்படுகின்றாள். நீண்டநேரமாக அவன் எழவில்லை. தோடர்ந்து எழுப்புகின்றாள். சிவன் எரிச்சலுடன் சீறி எழுகின்றார். அந்தச் சீற்றம் பெருவெடிப்பை ஒத்தது. இதனால் அவருடை முதல்வடிவம் ருத்திரன் ஆனது. இந்தச் தொடர் சீற்றமே தொடர் வெடிப்பாகும். உடலின் சக்கரங்கள் விஞ்ஞானம் கண்டறிந்த பல விடயங்களை முன்னமே கண்டறிந்துள்ளது. நமது உடலில் 114 சக்கரங்கள் அல்லது சக்தி மையங்கள் உள்ளன. உடலிலுள்ள 72000 நாடிகள் இந்த மையங்களிலேயே சந்திக்கின்றன. உடலை அறுத்துப்பார்த்தால் அது கண்களுக்குப் புலப்படாது. ஆனால் சக்திநிலையின் அசைவையும் விரைவையும் நம்மால் உணரமுடிகின்றது. இந்த 114 சக்தி மையங்களில் 112 உடலுக்குள்ளும் இரண்டு உடலுக்கு வெளியும் உள்ளன. இதை நன்கு கவனித்தால் இவ்வமைப்பு முறையானது பிரபஞ்ச உருவாக்கத்தின் மறு வடிவமாகும். இச்சக்தி மையங்களில் 84 ஒரு விதமாகவும் மற்றையவை இன்னோர் விதமாகவும் உள்ளன. சிவன் 84 முறை சீறியதில் 84 பிரபஞ்சங்கள் உருவானதாக யோகமரபு கூறுகின்றது. காலப்போக்கில் இப்பிரபஞ்சங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமிழந்து இலேசாகிக் காணாமல் போயின. படைப் நிகழ்ந்தது. இந்தப் பிரபஞ்சம் உருவான அதே முறையில் மனித உடலும் உருவாக்கப்பட்டது. பிரபஞ்ச உருவாக்கத்தில் இது 84வது சுழற்சி. 112ஐ எட்டும்வரை இது இடம்பெறும். 113வது பிரபஞ்சம் அரை ஸ்தூல வடிவிலும் 114வது பிரபஞ்சம் பொருள்தன்மை சாரா வடிவிலும் வடிவமைக்கப்படும். அது ஒன்றுமில்லாத தன்மையைக் கொண்டிருக்கும். யோகமரபு இதையே கூறுகின்றது. நாம் தற்போது 84வது பிரபஞ்சத்திலிருப்பதால் யோகமரபு 84 அடிப்படை யோக முறைகளை உருவாக்கியுள்ளது. இந்த உடலானது உறுதிமிக்கதாவுள்ளது. அதே நேரத்தில் அழியத்தக்கதாகவும் உள்ளது. இதனை விழிப்புணர்வுக்குள் கொண்டுவந்தால் இதில் ஒரு சமநிலை வெளிப்படுவதை உணரமுடியும்." மேற்சொன்ன கருத்துக்கள் பிரபஞ்சம் பற்றிய முன்மொழிவுக்குள் பொருத்திப்பார்க்கத் தக்கதாகவேயுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02.
# பிரபஞ்ச தத்துவம்

இப் பிரபஞ்சத்தின் உயிராக சூரியன் இருப்பதைப் பார்க்கின்றோம். அண்டவெளியில் பவனிவரும் பல கோள்களும் சூரியன் எனும் நெருப்புக் கோளத்திலிருந்து சிதறிய பொறித்துளிகளே. அவற்றில் ஒன்றுதான் இந்தப்பூமியும். இலட்சக்கணக்கான மைல்களுக்கப்பால் சுடர்விடும் சூரியன் வெம்மையைப் பரப்பும் ஒரு பாரிய தீக்கோளம். இருளை அகற்றவும் மேகத்தை உருவாக்கி மழையைப் பெய்விக்கவும் பருவங்களை அமைத்து உயிரினங்களைச் செம்மைப்படுத்தவும் அதனால் முடிகின்றது.

பரிதி என்னும் கனல் வட்டத்துக்குள்தான் அணுக்களின் தாண்டவம் நிகழ்கின்றது. அது உருவாக்கும் சக்தியே அண்டமெங்கும் பரந்து வியாபிக்கின்றது. சூரிய சக்தி இல்லையென்றால் உயிர்கள் அனைத்துமே ஒரே விநாடியில் ஒடுங்கிவிடும். எனவேதான் ஞானிகள் மந்திரங்களிலே முதலும் மூலமுமாக காயத்திரி மந்திரத்தை இருபத்தினாலு சுலோகங்களால் உருவாக்கித் தந்தார்கள். வேதங்களின் சாரம் அனைத்துமே காயத்திரியில் அடக்கம் என்பதுவே வேத சாஸ்த்திர விற்பன்னர்களின் கருத்தாகவுள்ளது. அறிவியல்கூட இப்பிரபஞ்ச நிகழ்வுகள் அனைத்துமே சூரிய சக்திக்குள் அடக்கமாக அமைந்திருப்பதையே வெளிப்படுத்துகின்றன.

பிரபஞ்ச சக்திகளின் ஒட்டுமொத்த ஒலிவடிவே ஓம் என்பார்கள். இதன் வியாபிப்பின் எல்லை அளவிட முடியாதது. மந்திர சக்திக்கும் ஓம் என்னும் வடிவமே மூலமாகும். பொதுவாகப் பார்த்தால் எல்லா ஒலிக்குள்ளுமே ஓம் என்னும் சுலோகமே முதலும் முடிவுமாகி நிற்கும். ஓம் என்ற சொல்லை மெதுவாகவும் ஆழமாகவும் மேல் நோக்கி உச்சரிக்கும் பொழுது மூலாதாரத்திலிருந்து மூளை வரையான நாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்புகளில் ஒன்றோடொன்று தொடுகின்ற இயக்க அதிர்வுகளின் வெளிப்பாட்டினை நம்மால் உணரமுடியும். உடலின் அடிப்படையான அட்சரங்களால் இவ்வதிர்வியக்க நிகழ்வு இடம்பெறுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஓம் குறித்து இந்தியத் தத்துவவியலாளர் டாக்டர் ஆனந் பரமேக்ஷ் "ஜென்னும் ஜென் தியானமும்" என்ற நூலில் நன்கு விளக்கியுள்ளார். "ஓம் ஒரு ஆன்மீக ஒலி. இதிலுள்ள ஆ-ஊ- ம்- என்ற வடிவங்கள் உடலின் மூன்று நிலைகளிலிருந்து வெளிப்படுகின்றன. இது நாதத்தின் மூன்று நிலைகளைக் குறிக்கும். பிரிந்து நிற்கும் தன்மையில் நாதம் பிறக்கும். அந்நிலையில் இதன் சக்தி மிக மகத்தானதாக அமையும். இதனை ஆக்க சக்தியாகவும் கொள்ளலாம். அழிவுச் சக்தியாகவும் மாற்றலாம். பாரதப் போரில் அஸ்திரங்களை உபயோகித்து சண்டையிட்டதாகச் சொல்லப்படுவதை நாம் பொய்யென்று கூறிவிடமுடியாது. எலக்ரோன், பொசிற்றோன், நியூற்றோன் எனும் அணுவைப் பிளந்தால் கற்பனைக்கும் எட்டாத பெரும் சக்தி வெளிப்படும். ஓம் என்ற ஒலியில் ஆ என்ற எலக்ரோனும் ஊ என்ற பொசிற்றோனும் ம் என்ற நியூற்றோனும் அடங்கியுள்ளன. அக்கால ரிக்ஷிகள் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். மூலக் கூறுகளைப் பிரிக்கும் வித்தையை அவர்கள் அறிந்தே வைத்திருப்பார்கள். இவற்றையே அணுக் குண்டுகள் போன்ற அஸ்த்திரங்களாக்கி பாரதப் போரில் மிக்க பேரழிவினை அவர்கள் உண்டுபண்ணியிருக்கலாம்". இதுபற்றிப் பல்வேறு வியாக்கியானங்கள் எழுகின்ற போதிலும் டாக்டர் ஆனந் பரமேக்ஷ் அவர்களது இக்கருத்து நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. ஓம் என்பதின் மகத்துவம் குறித்து பலதரப்பட்ட அறிஞர்கள் விளக்கியிருக்கின்றனர்.

எல்லா நிறைவுகளையும் உள்ளடக்கிய இவ்வுலகில் வாழுகின்ற மனிதன் எதிலுமே நிறைவு பெறாதவனாகவேயுள்ளான். நெற் குவியலின் மேல் உறங்கிக்கொண்டு ஒரு வேளைச் சோற்றுக்கு வழியில்லாமல் தவிப்பவன் போலவே இவனின் போக்குகள் தென்படுகின்றன. மானிடத்திற்கான பண்பாடு, செம்மை, ஒழுக்கம் எதுவுமே இவனுக்கு உடன்பாடாகத் தெரியவில்லை. உடலுக்கு உதவ விஞ்ஞானம் இருந்தும் உள்ளத்திற்கு உதவ - மனோ வலிமை பெற மெய்ஞானம் இருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனால் இவற்றுடன் ஒன்றி வாழ முடியவில்லை. ஒன்றை உய்த்து உணராமலேயே மனிதனால் அதனை ஏற்கவும் முடிகின்றது அதனை அவனால் ஒதுக்கவும் முடிகின்றது.

ஒரு மனிதனுக்கு ஏதோ ஒரு காரணத்தினால் கால் முடமாகிவிட்ட தென்றால் அதற்கு வேண்டிய மருத்துவத்தைச் செய்துபார்க்கலாம். முடியாதவிடத்து செயற்கையான மாற்று உறுப்பினைக்கூடப் பொருத்தலாம். எனினும் அவனது அந்த இழப்பினையும் அதன்பின் தொடர்கின்ற அதிர்ச்சி மற்றும் மன வேதனைகளையும் அழுத்தங்களை யும் நம்மால் எவ்வாறு தீர்த்துவைக்க முடியும். இதற்காகச் சொல்லப்படுகின்ற கருத்துக்களும் காரணங்களும் உண்மையில் நிரந்தர பரிகாரங்களாகிவிட முடியுமா. அவனுக்குண்டான ஏக்கம் பெருமூச்சு யாவுமே அவனால்தானே போக்கப்படவேண்டும். இதற்கு காலம் ஒன்றுதானே உதவமுடியும்.

விஞ்ஞானம் முடிவடையும் இடத்திலிருந்து மெய்ஞானம் தொடர்வதாகக் கூறப்படுகின்றது. அதையேதான் மதங்களின் வழியாகவும் கொள்கின்றனர். உள்ளுணர்வின் உந்துதலே மிக உயர்ந்த விழிப்பு நிலையாகும். இந்தத் தத்துவத்தை அறிஞர் பிளாட்டோ உறிதிப்படுத்துவதற்கு முன்னரே வேதகாலத்து யாக்ஞவல்லியார் கண்டறிந்துள்ளார். பிரபஞ்ச இயல்பு, ஆத்மாவின் தன்மை, மன நிலை, சுவாசம், சிருக்ஷ்டி, மரணத்தை வெல்லும் தன்மை, மீட்சி அனைத்தையுமே உப நிடதங்கள் அலசி ஆராய்ந்திருக்கின்றன. முழுமைக்கான பாதைகள் அனைத்தும் அங்கு தெளிவாகவே தென்படு கின்றன. ஒன்றைச் செய்வதாலோ அன்றேல் அதனைச் செய்யாது விடுவதாலோ மரணம் நிகழ்ந்துவிடுவதில்லை. ஒன்றை மறவாது வாழ்தலே இயல்பான வாழ்க்கை என்று ஆகின்றபொழுது அதனை மறத்தலே மரணம் என்று ஆகிவிடுகின்றது.

சுவாமி விவேகானந்தர் விஞ்ஞானத்திற்கும் வேதாந்தத்திற்கும் நெருங்கிய உறவுண்டு என்ற கருத்தினையே தன்வாழ்வில் கொண்டிருந்தார். இவற்றின் இணைவில்தான் பிரபஞ்ச முழுமையைக் காணமுடியும் என அவர் கருதினார். இவற்றை அடியொற்றியே கல்வித் தத்துவமும் அமையவேண்டும் என்பது அவரது முக்கிய குறிக்கோளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. உண்மையில் இங்கே மனிதன் அடையும் துன்பத்திற்கெல்லாம் நிறைவேறாத அவனுடைய ஆசைகளே காரணமாய் அமைந்துவிடுகின்றன. ஒருவன் எதுவித பலனையும் கருதாமல் தன்னுடைய கடமைகளைச் செய்வானாயின் ஏமாற்றத்திற்கோ அன்றேல் மனவருத்தத்திற்கோ என்றுமே அவன் உள்ளாகமாட்டான்.

உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராகக் கருதப்படுபவர் ஆல்பேட் ஐன்ஸ்டின். அவரது கருத்துக்கள் பிரபஞ்ச தத்துவத்தை அடித்தளமாகக் கொண்டவை. "நமக்கு ஏற்படுகின்ற அனுபவங்களால் புலன்களுக்கு அப்பாற்பட்ட - உணர்வுகளுக்கு எட்டாத பரம்பொருள் ஒன்று இருக்கின்றது என்ற உள்ளுணர்வின் அனுபவமே சௌந்தர்ய மானது. இவ்வுணர்வே அனைத்திற்கும் அடிப்படை. எவன் ஒருவன் இதை அறிந்துகொள்ளவில்லையோ அவன் இருந்தும் இல்லாதவனாகி விடுகின்றான். இதில் உண்மை என்னவென்றால் இனம் புரியாத ஒரு வேதாந்த உண்மை நம்முன் வியாபித்து நிற்கின்றது என்பதே. அதனை உலகம் மதங்களாகவும் வேறுபடுத்திப் பார்க்கலாம். சொல்லப் போனால் பிரபஞ்ச தத்துவத்தின் ஒரு சிறு பகுதியையாவது தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் அவாவும் அதற்கான முயற்சியும் நம்முள் வந்தாகவேண்டும். உண்மையில் நமது வாழ்வின் கருத்துத்தான் என்ன? இப்பூமியில் எல்லாவிதமான உயிரினங்களும் வாழ்வது எதற்காக? தனது வாழ்க்கை அல்லது மற்றைய உயிரினங்களது வாழ்க்கை பொருளற்றது என்று எவராலும் கருதமுடியுமா? இப்பிரபஞ்சமானது ஒரு அறுதியிட்ட திட்டத்தோடு இயங்குகின்றதே - அதன் காரண காரியங்களின் கர்த்தர்தான் யார்?" இவை ஐன்ஸ்டின் தொடுக்கின்ற கேள்விக் கணைகளாகும்.

மெய்ஞானிக்கு மட்டும்தான் கடவுள் என்றில்லை. விஞ்ஞானிக்கும் அது உண்டு. சொல்லப்போனால் விஞ்ஞானியும் மெய்ஞானியும் ஒன்றுதான். விஞ்ஞானி காணும் தெய்வம் கோவில் கொண்டதாக இருக்கவேண்டுமெனும் அவசியம் அவனுக்கில்லை. மெய்ஞானியின் கோவில் கொண்ட கடவுளைப் போலவே விஞ்ஞானியின் கடவுளும் இப்பிரபஞ்சம் அனைத்தையும் ஒத்து இயங்கச்செய்யும் வல்லமை கொண்டவராக உள்ளார். உயர்ந்த தத்துவங்களோடு படைக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவற்றையெல்லாம் உய்விக்கச்செய்யவும் கூடிய அனைத்து ஆற்றலும் அவருக்கு இருக்கவே செய்கின்றது. ஆனால் அதற்கு அவன் கொடுத்திருக்கின்ற பெயர் இயற்கை என்பதாகும். இயற்கை நமக்குத் தோற்றுவித்த மகோன்னத தத்துவம் இப்பிரபஞ்சத்தின் நியதியும் ஒழுங்குமாகும். ஒழுங்கின்போதுதான் கீழ்ப்படிவு இருக்கும். காவல்கட்டும் பாதுகாப்பும் அதற்குண்டான சட்ட திட்டங்களும் எச்சரிக்கையும் இருக்கும்.

இயற்கையின் சூழலில்தான் மனித சிருஷ்டியே தோன்றியது என்பதால் இயற்கை அன்னையை விட்டு விலகிச் செல்ல மனிதனால் ஒருக்காலும் முடியாது. நாதத்தின் இருப்பிடமே இந்த அண்டம்தான். அதனாலேயே அண்டத்திலிருப்பதுதான் பிண்டத்திலும் இருக்கின்றது என சாதாரணமாகக் கூறுவார்கள். ஓம் என்னும் நாதமானது வெறும் ஓசை மட்டுமல்ல. அது ஒரு மாபெரும் சக்தி. அதுவே அனைத்திற்கும் ஆதாரம். அனைத்தையும் ஆட்டுவித்துக்கொண்டிருக்கின்ற சூத்திரம்.

மனிதனின் உள்ளுணர்வே சுயரூபம் என்றாகின்றது. அதன் தெய்வீகத் தன்மையின் ஏற்ற இறக்கங்கள்தான் அதனது உயர்வினையும் வேறுபடுத்திக் காட்டுகின்றது. ஞானிகள் அதனுடைய சரியான பாதையை மூன்றாக வகுத்துத் தந்துள்ளார்கள். மெய்ஞானம் அதனை ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், கர்ம மார்க்கம் எனக் கூற விஞ்ஞானம் அவற்றை அறிவு, கோட்பாடு, செயல்பாடு எனக் குறிப்பிடும். இவை மூன்றுமே பிரபஞ்ச தத்துவத்தின் தெளிவினை நமக்குத் தரத்தக்கவையாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03.

# கடவுள் கொள்கையும் கோட்பாடும்

*நாம் ஒன்றைப் பற்றி விவாதிப்பதோ அன்றேல் கேள்விகள் கேட்பதோ அல்லது அதுதொடர்பில் தர்க்கிப்பதோ அர்த்தமற்றதே. உண்மையில் அவை ஒன்றையொன்று அல்லது ஒன்றிலொன்று தொடர்ந்துகொண்டே செல்லும். எதையும் யாரும் இதுதான் தீர்க்கமானதென நிரூபிக்க முடியாது. நமக்கு தலைவலி ஏற்பட்டு விட்டதென்றால் அதை வலியுறுத்த முடியுமே தவிர நிரூபிக்க முடியுமா? கடவுள் பற்றிய கொள்கையும் அத்தன்மை வாய்ந்ததே. ஞானிகள் இதுதொடர்பில் தங்களது கருத்துக்களை முன்வைப் பார்களே தவிர அவர்கள் அதுபற்றித் தர்க்கிக்கமாட்டார்கள். இயேசுவிடம் நீங்கள் ஆண்டவரின் மகனா என்று கேட்டால் அதற்கு அவர் ஆம் என்றே பதிலளிப்பார். இதனை நிரூபித்துக் காட்டமுடியுமா என்று சொன்னால், அதற்கான அவசியம் எழவில்லை என்றுதான் கூறுவார். "இதனை நான் அறிந்திருக்கிறேன். இது சுய சாட்சியாகவே இருக்கின்றது." என்பதுவே இதற்கான அவரது விடையாக இருக்கும்.*

*நபிகள் பெருமானிடம் கடவுள் இருக்கிறாரா என்றால் ஆம் என்றே பதிலளிப்பார். அவரைப் பார்த்திருக்கிறீர்களா என்றால் நான் அல்லாவை நேரே பார்த்திருக்கிறேன். அவர் என்னைத் தனது முக்கிய பக்தராகவும் பிரதிநிதியாகவும் நியமனஞ் செய்திருக்கின்றார். கடவுள் ஒருவரே இருக்கின்றார். அவர் உருவமற்றவர். எல்லாவற்றையும் இயக்கிக் காத்து அறிவே வடிவாகவும் அருளாளனாயும் நிற்பவர் என்பார். அவரை அடையமுடியுமா என்றால் ஆம் நிச்சயமக முடியும். இஸ்லாத்தைப் பின்பற்றுங்கள். அதுவே உரிய மார்க்கம் என்பார். இராம கிருஷ்ன பரமகம்சரிடம் கடவுள் இருக்கின்றாரா என்றால் அதற்கு அவர் ஆம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதான் பதிலளிப்பார். அதனை நிரூபித்துக் காட்டுங்கள் என்றால் அது எனக்கு வேண்டியதில்லை. அதனை நான் தேடிக் கண்டிருக்கின்றேன். உனக்கு வேண்டுமெனில் நீயே தேடிக் கண்டுகொள் என்பார்.

ஒன்றைப்பற்றிய உள்ளுணர்வு இல்லாதபோதுதான் அங்கு அதுபற்றிய நிரூபணம் தேவையாகின்றது. ஞானிகள் எதையும் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். அவர்களையிட்டு யாராலும் தீர்ப்பிடவும் முடியாது. அதற்கான ஆற்றலோ உரிமையோ நம்மிடம் கிஞ்சித்தும் இல்லை. வேண்டுமானால் அவர்கள் செல்லுகின்ற பாதையைமட்டுமே நம்மால் பார்க்கமுடியும். அது நமக்கு நல்லதாகவும் படலாம் கெட்டதாகவும் படலாம். அதுபற்றிய நமது கருத்தை எப்படிச் சொன்னாலும் அதற்கு அவர்கள் நல்லது என்று ஒரே வார்த்தையில் பதிலளித்து விடுவார்கள். ஏனெனில் நாம் அவர்களோடு தர்க்கிப்பதை ஒருபோதும் அவர்கள் விரும்பமாட்டார்கள். கடவுள் கொள்கை என்பது இருபக்கக் கருத்துக்களுக்கும் சார்பம்சமாகவே தென்படுகின்றது. ஊக அறிவு மூலம் மட்டுமே இதன் வெளிப்பாட்டுத் தன்மை அமைகின்றது. ஊக அறிவு என்பது நேரடியான அறிதல் இல்லாவிட்டாலும் தர்க்கத்தின் ஊடாக ஒரு நிழலான அர்த்தத்தை தரவல்லதாகும்.

நம்மைச் சுற்றிப் பரந்து விரிந்த இப் பேரண்டத்தைப் பாருங்கள். இங்கே ஒரு ஒழுங்கமைவு - ஒரு இசைவு பெற்ற முழுமையான திட்டவடிவமைவு தெரிகின்றதல்லவா? இதற்கான பதிலைத் தேடி அறிவியல் என்ன செய்கின்றது. அது தொடர்ந்தாற்போல் இன்னும் பல திட்ட அமைவுகளையும் புதுப்புது இயற்கை சார் விதிகளையும் கண்டுபிடித்துக்கொண்டே செல்கின்றது. இது இன்றோ நாளையோ முடிந்துவிடப்போவதில்லை. அதன் பின்னரும் தொடர்ந்துகொண்டேயிருக்கும். எனினும் நாம் வாழுகின்ற இந்த உலகினை - இந்தப் பிரபஞ்சத்தை ஒரு தற்செயல் நிகழ்வு என்று எப்படிக் கூறுவது? ஒருபோதும் மாறுபடாத திட்டவட்டமான விதிகளின்படித்தானே இப்பிரபஞ்சம் இயங்குகின்றது? இப்பிரபஞ்சத்தில் காணும் திட்ட வடிவமைப்பை எவராலும் மறுத்துவிடமுடியுமா? அபாரமாகவும் நுணுக்கத்துடனும் அற்புதமாகவும் எல்லையற்றும் மொத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சமே ஒரு தாள லயத்துடன் அதிர்ந்து கொண்டிருக்கும்போது இத்தனைக்கும் பின்னால் யாரோ மறைந்துகொண்டிருப்பதாகத்தானே தோணும்? இதை நேரடியாக நம்மால் அறிய முடியாவிட்டாலும் அல்லது நேரடித்தொடர்பு இல்லாது போனாலும் அங்கு ஒரு கை மறைந்திருப்பதாகத் தோணுவது சரியான ஊகமாகத்தானே இருக்கமுடியும். எனினும் சொல்லப்பட்ட இதே காரணங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு திதரோ போன்ற சிந்தனை யாளர்கள் இதற்கு எதிர்மாறான முடிவுக்கு வருவதைப் பார்க்கின்றோம்.

இப்பிரபஞ்சத்தில் திட்டமிட்ட ஒரு செம்மையான ஒழுங்கமைவு நிலவுவதால் அதன் பின்னணியில் யாருமே இருக்கமுடியாது என்பதுவே திதரோவின் கருத்து. இதனால் கடவுள் என்று ஒருவர் இருப்பதை நம்பமுடியாதுள்ளதாக அவர் கூறுகின்றார். அப்படி இப் பிரபஞ்சப் பின்னணியில் யாரேனும் இருப்பாரேயாயின் சில வேளைகளிலாவது மனம்போன போக்கில் அவரால் தவறிழைக்கக்கூடுமல்லவா? அத்தோடு நாம் காணும் ஒழுங்கு விதிகளும் இந்த அளவு செம்மையாக இருக்க வாய்ப்பிருக்கும் என்று கருதமுடியாது. யாரேனும் இதன் பின்னணியில் இல்லாதிருந்தால் மட்டுமே விதிகள் ஒரு ஒழுங்கமைவில் தொடர்ந்தால்போல் இயந்திர நிலையில் சீராகச் செயல்படமுடியும்.

கடவுள் கொள்கைக்கு மாறான கருத்தைக் கொண்ட சிந்தனையாளர்கள் எழுப்புகின்ற இக் கேள்விகள் இது குறித்த நமது நம்பிக்கைகளைச் சிதறடிக்கவே செய்கின்றன. குறித்த வெப்பநிலையில் தண்ணீர் கொதிக்கின்றதென்றால் அது காலம் காலமாக நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது. இதன் பின்னணியில் யாரேனும் இருப்பாரேயாகில் சும்மாவேனும் ஒரு மாறுதலுக்காவது இதில் ஏதேனும் ஒரு மாற்றத்தை செய்து பார்த்திருக்கலாமல்லவா? இருபத்திநான்கு மணிக்கு ஒரு தடவை பூமி தன்னைத்தானே சுற்றி வருகின்றதென்றால் அன்றைய புராண கதைகளில் கூறுவதைப்போல இன்றும் ஒரு மாற்றத்தைச் செய்து பார்த்திருக்கலாமல்லவா? இவையேதான் இச் சிந்தனையாளர்கள் முன்வைக்கும் வாதமாகும். நாம் பார்க்கின்றபோது இங்கே முன்வைக்கப்படுகின்ற இரண்டுபக்க வாதங்களுமே சரியாகவே நமக்குத் தென்படும். எனினும் இதில் எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புள்ளதாக எந்த ஊகம் அமைகின்றதோ அதையேதான் சரியான ஊகமாக நாம் கொள்ளவேண்டியுள்ளது.

இந்தப் பிரபஞ்சத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன? எல்லாவித ஞானங்களுக்கும் அடிப்படைக் கோட்பாடு எது? இவையே பலருடைய நீண்டகால சிந்தனையாக இருந்துவந்துள்ளது. இச் சிந்தனையாளர்களே பழைய யுனிக் தத்துவவியலாளர்கள் என அழைக்கப்பட்டனர். நிலத்தை, நீரை, காற்றை, நெருப்பை, ஆகாயத்தை என இவர்கள் ஒவ்வொன்றாக மாற்றி மாற்றி இதுதான் இவற்றிற்கு அடிப்படைக் காரணம் என வாதிட்டார்கள். கிரேக்க தத்துவவியலாளரான தேல் (கி.மு 634 - 524) , அனக்சிமன் (கி.மு 588 - 524) போன்றோர் பிரபஞ்சத்தின் அடிப்படைக் காரணம் நீர் என விளக்கினார்கள். எனினும் அனக்சிமந்தர் ( கி.மு 611 - 546) என்பவர் எல்லையற்றதும் முடிவற்றதுமான ஒன்றிலிருந்துதான் பஞ்ச பூதங்கள் தோற்றம் பெற்றிருக்கவேண்டுமென்ற கருத்தினை முன்வைத்தார். இவர்களது கூற்றுக்களினூடாக ஒரு பொதுத்தன்மை வெளிப்படுவதை நாம் காணமுடியும். உண்மையில் இவர்களில் எவராவது இதற்கான அடிப்படைத் தத்துவத்தை தோற்றுவித்தவர் யார் என்ற கேள்வியை எழுப்பியதாகத் தெரியவில்லை. இவர்களது ஆர்வமெல்லாம் இப்பிரபஞ்சம் எப்படித் தோற்றமானது என்பதிலேயே தங்கியிருந்ததே தவிர இது யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதைப் பற்றியதாக இருக்கவில்லை. இது தொடர்பாக இவர்கள் அக்கறைகொள்ளாமை பெரும் புதிராகவேயுள்ளது.

சம காலத்தே இந்தியாவில் வாழ்ந்த புத்தரும் சார்வாகரும்கூட பிரபஞ்சப் படைப்பைப் பற்றி கேள்வி எழுப்பியதாகத் தெரியவில்லை. உயிரினம் பஞ்ச பூதங்களிலிருந்தே தோற்றம் பெற்றதென்பதும் இதற்கான செயற்பாட்டிற்கு எவருமே வேண்டியதல்ல என்பதும் இவர்களது கருத்தாக இருந்திருக்கலாம். பிரபஞ்சச் செயல்பாடுகள் அனைத்திலும் உயிர்த்தன்மை தென்படுவதைக் கண்டறிந்த இவர்கள் அவற்றையெல்லாம் தாண்டி கண்ணுக்குத் தெரியாத ஒருவரைத் தேடிச்செல்ல முயலவில்லை. பித்தாக்கோரஸ் (கி.மு 500) இந்தியத் தத்துவத்தின் அடித்தளமாக விளங்குகின்ற உபநிடத கருத்துக்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கவரப்பட்டவர். இவரே மறுபிறவித் தத்துவத்தையும் உடல்பிரம்ம சித்தாந்தத்தையும் வெளிக்கொணர்ந்தவர். இவரது சித்தாந்தங்களே பாரதத்தின் ஆன்மீக வாதம் எனக் கருதப்பட்டு உலகெங்கும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இவர்கூட பிரபஞ்சக் கோட்பாட்டுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதாக அறியமுடிய வில்லை. அன்றைய காலகட்டத்தே கடவுள் பற்றிய எண்ணங்களையே மனிதர்கள் கொண்டிருந்தார்கள் என்பதனை செநேவ்பென் (கி.மு 576 - 480) என்ற தத்துவஞானி குறிப்பிடுகின்றார். மனிதர்கள் தாம் தோன்றியதைப்போன்றே கடவுளரும் தோன்றினர் எனவும் தம்மைப் போன்றே அவர்களும் உருவ அமைப்பை உடையவர்கள் எனவும் நம்புவதாக அவர் குறிப்பிடுகின்றார். ஆனால் அம்மக்களது இக் கூற்றினை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் அனைத்தும் ஒன்றில் அடக்கம் என்பதால் அந்த ஒன்றே கடவுள் எனும் தத்துவத்தை அவர் நிலைநிறுத்தலானார்.

புத்தரோ கடவுள் பற்றிய உண்மைகளை இரண்டு நிலையில் வைத்துப் பார்த்தார். பழமைத் தன்மையை மறைந்த உண்மையென்றும் யதார்த்தத் தன்மையை பரமார்த்த உண்மையென்றும் அவர் வேறுபடுத்தினார். ஆனால் ஆதிசங்கரரோ புத்தர் சொன்ன மறைந்த உண்மையை அதுவே நடைமுறை உண்மையென வெளிப்படுத்த லானார். உலகின் புகழ்பெற்ற யதார்த்த வாதியான சோக்கிரட்டிஸ் (கி.மு 469 - 399) உண்மையைக் கண்டறிய பகுத்தறிவைவிடப் புனிதமானது எதுவுமில்லை எனும் கோட்பாட்டைப் பகிரங்கமாகவே வலியுறுத்தினார். பகவத் கீதையும் இக் கூற்றையே அடிப்படையாகக் கொண்டிருப்பதை நாம் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். சரியாகச் செயல்புரியவேண்டுமெனில் சரியாகச் சிந்திப்பது அவசியம் எனும் கருத்தை பகவத் கீதை வலியுறுத்தும். அர்த்தமற்ற வார்த்தை ஜாலத்தால் உண்மையைக் கண்டறிய முடியாது என்பதில் சோக்கிரட்டிஸ் உறுதியாக நின்றார். இப் பிரபஞ்சத்தினது இயற்கையான குணநலன்கள் என்ன? இப் பிரபஞ்சம் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டது? எப்படிப்பட்ட சக்திகளினால் இப்பிரபஞ்சம் இயங்குகின்றது? என்பன பற்றியெல்லாம் சிந்தித்துக்கொண்டிருப்பது உண்மையிலேயே வடிகட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டாள்தனம் என்பதே பிரபஞ்சம் தொடர்பில் சோக்கிரட்டிசின் போதனையாக இருந்தது.

பிளாட்டோ (கி.மு 421 - 341) கடவுளை ஒரு சிற்பியாக வெளிப்படுத்துகின்றார். எண்ண உலகில் நிலவும் முன்மாதிரிகளின் படி உலோகாயாத உலகத்தை கடவுள் உருவாக்கினார். இருந்தும் உலகத்தில் ஏதாவது குறை தென்பட்டால் அதற்காக அதன் சிருஷ்டிகர்த்தாவான கடவுளைக் குறை கூறுவது தவறானதாகும். ஏனென்றால் பௌதிக சக்திகளைச் சார்ந்தேதான் கடவுள் பணி நிகழமுடியும். பௌதிக சக்திகளைப் பொறுத்தவரையில் கடவுளின் சிருஷ்டிக்கும் செயற்பாட்டில் அவைகளால் தடைகளை ஏற்படுத்த முடியும். பிளாட்டோவின் இத் தத்துவத்தை பார்க்கும்போது கடவுள் என்பவர் ஒரு தந்தையின் நிலையில் இல்லாமல் ஒரு தொழில்நுட்பவியலாளர் நிலையிலேயே வெளிப்படுவதைக் காணமுடிகின்றதல்லவா? உண்மையில் சொல்லப் போனால் கடவுள் கொள்கையோ அன்றேல் கடவுள் கோட்பாடோ தொடர்ந்தும் ஒரு புரியாத புதிராகவேதான் இருக்கப்போகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04.
# மனிதனும் மனமும்

ஆதிமனிதன் தனது சூழலை வெற்றிகொள்வதிலே அக்கறை காட்டினான். இதுவே அவனது தேவையாகவும் இருந்தது. உணவு தேடுவது, வாழிடத்தைக் கண்டுபிடிப்பது, கொடிய விலங்குகளிலிருந்து தப்பிப்பது, எதிரிகளிலிருந்து தன்னைப் பாதுகாப்பது போன்றவையே அவனின் முக்கிய வேலையாகவிருந்தது. இதனால் அம்மூதாதையர்கள் அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள நேரமுமில்லாது ஆர்வமுமில்லாதிருந்தார்கள்

இன்று மனிதன் மிகப் பாரிய அளவில் முன்னேறியிருக்கின்றான் என்பதில் எந்தக் கருத்துவேறுபாடும் இருக்கமுடியாது. நாகரிகம்மிக்க நவீன வாழ்க்கையும் இலகுவழியில் பொருளீட்டலும் அவனை சுதந்திரம்மிக்கவனாக மாற்றியிருக்கின்றது. எனினும் மன நிலையைப் பொறுத்தமட்டில் பெரும்பாலான மனிதர்கள் குழப்பமடைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அறிவாற்றலினால் மனிதன் எவ்வளவோ விஞ்ஞான உண்மைகளைக் கண்டறிந்துள்ள நிலையில் தன்னைப்பற்றி அவன் தெரிந்துவைத்திருப்பதைவிட தெரியாதிருப்பதே அதிகமாகவுள்ளது. மனிதனைப்பற்றி மனிதனுக்குள்ள அறியாமையே இது. சுருக்கமாகச் சொல்வதாயின் புறநாகரிகம் வளர்ந்த அளவிற்கு அகநாகரிகம் வளரவில்லையென்றே கூறவேண்டும். மனிதன் உருவாக்கிய உலகத்தில் அவனே அன்னியனாகத் தோன்றும் அளவிற்கு புறச்சூழ்நிலைகள் வளர்ந்துகொண்டுசெல்வதையே நம்மால் அவதானிக்க முடிகின்றது. மனதின் தன்மையினையும் ஆத்மாவின் இயல்புகளையும் ஆன்மீக வாழ்வின் பொருளையும் உணரும்போதுதான் மனிதனால் இன்றைய பிரச்சனைகளிலிருந்து விடுபடமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியைப் பொறுத்தவரையில் அது தனது அச்சின்மீது தானே சுழன்றுகொண்டிருக்கின்றது. இதனால் அதன் மேற்பரப்பு ஒளியாகவும் இருளாகவும் மாறிமாறி வருகின்றது. இதன்போது காலையில் சூரியன் உதயமாகி மாலையில் மறைகின்றான். இதனை ஒரு கால அளவாகக்கொண்டு நமது வாழ்க்கையினை ஒழுங்குபடுத்த நம்மால் முடிகின்றது. சந்திரனும்கூட இதில் பயன்படுவதை நம்மால் காணமுடிகின்றது. சந்திரப் பிறையைவைத்து காலக்கணிப்பைச் செய்வதையும் நாம் குறிப்பிடலாம். எனினும் மனம்மட்டுமே கணித்து உணரக்கூடிய காலம் ஒன்று இருப்பதைப் பலர் உணர்வதில்லை. நமது வாழ்நாளில் நமது உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் உடலின் செயல்பாடுகளையும் இந்தக் காலப் பரிமாணத்திற்குள் கொண்டுவரலாம். இதில் உடலும் இணைவுறுவதைக் காணமுடியும். நமது மனமானது நிகழ்காலத்தில் பதிவுசெய்கின்ற தகவல்கள் எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் தன்மைமிக்கனவாக அமைவதைப்போன்றே கடந்தகால மனப்பதிவுகள் நிகழ்காலத்திலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. இதில் நமது வரலாற்றின் நீளம் என்பது நாம் வாழுகின்ற வருடங்களின் எண்ணிக்கையோடு மட்டும் அமைந்துவிடுவதில்லை. நமது மனச் சேகரிப்பையும் கொண்டதாகவே அமைகின்றது.

நோபல் பரிசுபெற்ற உடற்கூற்று விஞ்ஞானியான அலக்சி கெரல் எழுதிய மிக அற்புதமான நூல் "அறியப்படாத மனிதன்" ஆகும். விஞ்ஞானம் மனித உடலைப்பற்றி ஆராய்ந்த அளவிற்கு மனித உணர்வுகள் பற்றி ஆராயவில்லையென்பது கெரலின் வாதமாகும். மனித உடலைவிட மனித மனம் மிகவும் முக்கியமானது என்பது அவரது உறுதியான நம்பிக்கை. இயற்கையின் பௌதிக விதிகளைவிட கண்ணுக்குப் புலனாகாத வேறுபல விதிகள் மனித வாழ்வில் ஆதிக்கம் செலுத்துவதை அவர் உணர்ந்தார். உடல், மனம், பிரபஞ்சம் ஆகிய மூன்றுக்கும் உள்ள தொடர்பினை விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வுகளில் கண்டறிந்து மனித சமூகத்திற்கு உணர்த்தவேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

உண்மையில் மனிதனைப்பற்றி மனிதனுக்குள்ள அறியாமை மிகவும் மகத்துவம் மிக்கதாகவேயுள்ளது. அவனைப்பற்றி அவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பப்படுகின்ற கேள்விகளுக்கு இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை. இதுதொடர்பில் அலக்சி கெரல் பல கேள்விகளை எழுப்புகின்றார்.

01. கருவில் உருவாகும் ஒவ்வொரு குழந்தையும் எவ்வாறு தனித்தன்மை கொண்டதாக வளர்ச்சியடைகின்றது?

02. கரு பல செல்களாகப் பிரிந்து வெவ்வேறு உறுப்புகளை உருவாக்குகின்றது. எந்த வேலையை எந்தச் செல் செய்யவேண்டுமோ அந்த வேலையை அது தானாகவே செய்யத் தொடங்கிவிடுகின்றது. அவ்வாறு செயல்படவைப்பது எது? அதனை இயக்கும் கர்த்தா யார்?

03. நமது நினைவு உணர்வுக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பு என்ன?

04. உடலின் தன்மை மனதை எவ்வாறு பாதிக்கின்றது?

05. மனதின் தன்மை உடலை எவ்வாறு பாதிக்கின்றது?

06. ஒவ்வொரு மனிதனும் பாரம்பரியமாக சில இயல்புகளைப் பெறுவதாயின் அதில் மாற்றங்களை உண்டாக்கிக்கொள்வது எப்போது சாத்தியமாகின்றது? எப்படிச் சாத்தியமாகின்றது?

07. நோய்களுக்கான தடுப்பு உடலில் எவ்வாறு உருவாகின்றது?

08. உடல் நிலையும் மன நிலையும் நமது மகிழ்ச்சிக்கும் துயரத்திற்கும் - வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமாக அமைவதை எவ்வறு நம்மால் புரிந்துகொள்ளமுடிகின்றது?

இக்கேள்விகளுக்கு சரியான பதிலை நம்மால் நிச்சயப்படுத்த முடிகின்றதா? இதில் ஒன்றுமட்டும் நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. விஞ்ஞானம் எவ்வளவோ வளர்ச்சியடைந்த நிலையிலும் மனிதனைப் பற்றிய அறிவானது இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ளது என்பதுவே அது. பிரபஞ்ச இயக்கம் பற்றி அறிவதில் மனிதனுக்கிருந்த ஆர்வம் சிக்கலான நிலையிலுள்ள தன்னைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவதில் இல்லாமல் போனதற்கு காரணம், மனம் எப்போதும் சிக்கலான விடையங்களில் ஈடுபாடுகொள்ளத் தயங்குவதேயாகும்.

விஞ்ஞானிகள் தங்களது அறிவாற்றலினால் புதியபுதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்கின்றனர். அவர்களது ஆர்வம் சாதனைகளின்பால் சென்றதேதவிர அத்தனை கண்டுபிடிப்புகளும் சமுதாய நோக்கம் கொண்டவை எனக்கருதமுடியாது. சாதனை ஒருவருக்கு மன நிறைவைத்தருகின்றபோது அதன் நன்மை தீமையான விளைவுகள்பற்றி அவர் கவலைப்படுவதில்லை. மேலும் அவரது நோக்கம் நன்மை பயப்பதாக இருந்தாலும் மற்றவர்கள் அதனை மனித குலத்திற்கு பாதகமான வழியில் பயன்படுத்தும் தன்மையில் அதற்கு எதுவித கட்டுப்பாட்டினையும் அவரால் விதிக்கமுடியாதுள்ளது. இங்கே விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் விளைந்த நாகரிகம் சரியான திசையில்தான் செல்கின்றது எனக்கூற முடியுமா?

சிந்தனையாளர்களில் சிலர் தத்துவக் கோட்பாடுகளும் விஞ்ஞான அமைப்பியலும் மனித அறிவைத் தொடர்ந்தும் அடிமைப்படுத்தி வருவதாகக் கூறுகின்றனர். அத்தோடுகூட அரசியல் கோட்பாடுகள், பொருளாதாரக் கோட்பாடுகள், மதக் கோட்பாடுகள் என்பவையும் இதில் உள்ளடக்கத் தக்கவையாகின்றன. நடைமுறையிலுள்ள விஞ்ஞான விதிகளின் மூலம் ஏதேனும் ஒன்றுக்கு விளக்கம் சொல்ல முடியாதபோது அப்படியான ஒன்று இருக்கமுடியாது என்ற முடிவிற்கு அது வந்துவிடுகின்றது. பௌதிக விதிகளைத்தாண்டி நிகழுகின்ற சம்பவங்கள் வெறும் கற்பனையென்று ஒதுக்கவே அது முயற்சிக்கின்றது. இதனால் மனிதனோடு தொடர்புபட்ட அல்லது அவனது ஆற்றலால் ஏற்படத்தக்க விளைவுகள் ஆராய்ச்சி செய்யப்படாமலேயே ஒதுக்கப்பட்டுவிடுகின்றன. இவை மனதில் தோன்றி மறையும் உண்மைகளாகிவிடுகின்றன. கலைஞர்கள், ஞானிகள், அதீத சக்திபடைத்த மனிதர்கள் ஆகியோரின் எண்ணங்களும் இவ்வாறே தோன்றிமறையும் எண்ணங்களே என்பதை நாம் மறுக்கமுடியாது. மனிதன் உடலாகமட்டும் இருப்பதில்லை. அவனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்டதாகவே மனமும் இருக்கின்றது. எனினும் அது எந்தவித பிடிக்குள்ளும் சிக்கிவிடாமல் நழுவிவிடுகின்றது.

பொதுவாகப் பார்க்குமிடத்து நாமனைவரும் இருவேறு நிலைகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதே உண்மையாகும். விஞ்ஞானிகள் தாங்கள் பார்க்கின்ற பல்வேறு விடயங்களின் தன்மையில் பொதுக்கோட்பாடுகளை உருவாக்கவே ஆர்வம்கொள்கின்றார்கள். எனினும் மனித சமூகம் பற்றிய பொதுக் கோட்பாட்டுக்குள் தனி மனிதனைப்பற்றி வரையறைசெய்வது இயலாத காரியமாகவே அமையும். ஏனெனில் ஒவ்வொரு தனி மனிதனும் ஏதோ ஒருவகையில் தனித்தன்மைக்கு உள்ளாக்கப்பட்டவனாகவேயுள்ளான். இத்தன்மையே ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்து பிரித்துணர நம்மால் முடிகின்றது. தோற்றம், நடையுடை பாவனைகள், அறிவாற்றல், பேச்சு மற்றும் செயல்பாடுகள், ஒழுக்க நெறிமுறைகள் போன்றவற்றைக் கொண்டு இதனை அறியமுடிகின்றது. விரல்நுனிக் கோடுகள், கைரேகைகள் என்பனவும் இதில் மாறுபட்டேயுள்ளன. உடல்கூறு நிலையில் ஏற்படும் மாற்றங்கள் இதில் ஒரு காரணமாயமையினும் மனோநிலை மாற்றங்களும் இதில் பெருமளவு பங்குகொள்வதாக ஆய்வுகள் புலப்படுத்தகின்றன.

மனித உடலமைப்பின் எல்லைக்குள் உறுப்புக்கள் இருக்கலாம். எனினும் மனிதனின் மனதின் பரிமாணத்தை அம்மனித உருவத்தால் வெளிப்படுத்தல் சாத்தியமற்றதாகவேயிருக்கும். மனதில் உருவாகும் எண்ணங்கள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு மின்காந்த அலைகளைப்போல பயணிக்கின்றன. அதன்வேகம் அளவிடமுடியாத தாகவும் உள்ளது. இங்கே மனோதத்துவம் என்பது கணித மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்டதாகவே தெரிகின்றது. இதில் ஒன்றைப் புரிந்துகொள்ளமுடிகின்றது. மனிதனை வெறும் உடல்கூறுகளால் மட்டும் தீர்மானிக்க முடியாது. மனமும் சேர்ந்ததாகவே மனிதன் உள்ளான் என்பதுவே அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05.
# இயற்கையும் மனித சமூகமும்

உயிரினத் தோற்றம் குறித்து எழுப்பப்படும் ஒவ்வொரு கேள்வியும் இன்னும் கேள்விகளாகவே தொடர்கின்றன. இவற்றிற்கு அளிக்கப்படும் ஒவ்வொரு பதிலும் மீண்டும் மீண்டும் கேள்விகளை நோக்கியே திரும்புகின்றன. பிரபஞ்சக் கோட்பாடு தொடர்பான ஆன்மீகக் கருத்துக்களை விஞ்ஞான லோகாயத வாதம் உடைக்க முற்படுகின்ற போது இதன் எழுவாய் என்கின்ற தோற்றப்பாட்டை இனங்காணுவதில் கேள்விக்குறியே மீண்டும் தொக்கிநிற்கின்றது. எனினும் அதில் அறிவுபூர்வமாக வியாபித்து நிற்கும் உள்ளடக்கமும் உறுதிப்பாடுமிக்க முடிவு நிலையும் முழுக்க முழுக்க நம்பிக்கை கொண்டதாகவே அமைந்துவிடுவதைக் காணமுடியும்.

ஆன்மீக வாதம் என்பது பிரபஞ்சத் தோற்றப்பாட்டின் கருப்பொருளாக கடவுளையே வைத்திருப்பதால் தொடக்கம் முதலே எழுப்பப்படுகின்ற ஒவ்வொரு கேள்வியையும் அது இலகுவில் புறம்தள்ளிவிடுகின்றது. நம்பிக்கை என்னும் அதன் அடித்தளம் மிகவும் வலுவாக நிலைபெற்றுவிட்டதால் நீண்டகால உறுதிமிக்க அக் கட்டுமானத்தை புத்திக் கூர்மை கொண்ட விஞ்ஞான லோகாயத வாதத்தால் இன்னும் உடைத்தெறிய முடியாமலேயே உள்ளது.

இயற்கைச் சூழலே மனிதனைப் படைத்தது என்பது ஒருபக்கக் கருத்தாகவும் கடவுளே மனிதனைப் படைத்தான் என்பது மறுபக்கக் கருத்தாகவும் இன்று தோற்றம் பெற்றிருப்பதைப் பார்க்கின்றோம். இது இருபக்க வாதமாகவும் அமைகின்றது. இங்கே காணப்படும் இரண்டாவது கருத்துக்கு முற்றும் முழுதான வலு நம்பிக்கையின்பால் தென்படுவதைப் போல முதலாவது கருத்தான இயற்கைச் சூழலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனைப் படைத்தது என்பதற்குப் போதிய வலுவையும் விளக்கத்தையும் தர விஞ்ஞானத்தால் முடியாதுள்ளது. எனினும் இதில் ஒரு உண்மையை நாம் உணர்ந்துகொள்ளவேண்டியுள்ளது. இரண்டு விதமான கருத்துக்களுக்கும் மறுபக்கவாதக் கருத்துக்கள் தென்படுவதேயது. தன்னைப் படைத்த இயற்கைச் சூழலை இன்று மனிதன் மாற்றியமைக்க முற்பட்டிருப்பதைப் போன்றே தன்னைப் படைத்ததாக நம்பப்படுகின்ற கடவுளையும் கடவுள் தத்துவத்தையும் இன்று மனிதன் மாற்றியமைக்க முற்பட்டிருக்கின்றான். அன்று கடவுளர் இப்பூவுலகில் தோன்றி மனிதனாகச் சஞ்சரித்ததைப் போன்றே இன்று மனிதர்கள் கடவுளராகச் சஞ்சரிப்பதைப் பார்க்கின்றோம். ஆழ்ந்து பார்த்தோமானால் இவை இரண்டுமே ஒரு நிலைப்பட்டதே. இதை வைத்துக் கொண்டுதான் விஞ்ஞான வாதம் "மனிதனே கடவுள், கடவுளே மனிதன்" என்ற கோட்பாட்டுக்குள் நம்மைக் கொண்டுவந்து இணைத்துவிடுகின்றது.

எந்தவொரு கோட்பாடும் காரண காரியம் சார்ந்ததாகவே அமையும். தன்னில் அல்லது மற்றவற்றில் எதுவித மாறுதலையும் தோற்றுவிக்காது ஒரு செயல் நிகழமாட்டாது. ஒரே காரணத்தால் பிறிதொரு காரணத்தையோ அன்றேல் வேறு பல காரண காரியங்களையோ வெளிக்கொணரமுடியும். ஒரு தந்தையைப் பொறுத்தவரை அவர் இன்னொருவரின் மகனாகவே இருக்கின்றார். அது போன்றே அவரது தந்தையும் இன்னொருவரின் மகனாகவே இருக்கச்செய்வார். இங்கே இயற்கையின் இயல்புநிலை என்பது சமுதாயத் தன்மையையே நிலைப்படுத்துவது தெளிவாகின்றது. இதனை வைத்துப் பார்க்கின்றபோது காரண காரியங்கள் ஊடாக ஒரு புதிய விதி தோற்றம் பெறுவதைக் காணலாம். அதாவது "எது நடக்கவிருக் கின்றதோ அது நடந்தே தீரும்" என்னும் சார்பு விதியே அது. அதுவே தலைவிதித் தத்துவம் என்றாகின்றது. இதிலிருந்து ஒன்றை நம்மால் புரிந்துகொள்ள முடியும். இந்த விதியின் ஊடாகத்தான் விஞ்ஞானமும் வேதாந்தமும் ஒன்றுபடும் நிலைக்கு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இயற்கையின் நிகழ்ச்சிப் பிரவாகத்தைக் கவனிப்போமானால் நமது சுற்றுச் சூழல் குறித்தும் சமுதாய வாழ்வு குறித்தும் நம்மால் சிந்திக்கமுடியும். இப்பிரபஞ்ச அமைப்பில் பெரிய கோள் தொடக்கம் மிகச் சிறிய அணு வரையும் ஒரு விதிமுறை அல்லது கட்டுப்பாட்டுக்குள் செயற்படுவது தெரியும். இதுவே இயற்கை விதி அல்லது காரண காரிய விதிகளாகும். கடந்த காலத்தை எதிர் காலத்துடன் தொடர்புபடுத்தும் இவ்விதிகளால்தான் உலகியல் செயல்பாடுகள் மீள மீள நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை இப்போது நாம் கவனித்தோமானால் இருபக்கச் சார்பு விதியானது அதாவது விஞ்ஞானமும் வேதாந்தமும் ஒன்றுபடும் நிலையைப் பிரதிபலிக்கும் தலைவிதியானது அர்த்தமற்றதாகிவிடுகின்றது.

இவையனைத்தையும் உற்று நோக்குகின்றபோது வோல்டேரின் கருத்தானது மிகுந்த முக்கியத்துவம் பெறுவதையும் நமது கவனத்தை ஈர்ப்பதையும் காணலாம். "மதங்களில் சொல்லப்படுவதைப் போல இயற்கையால் நம்முள் கடவுள் அறிவு புகுத்தப்படுவதில்லை. அப்படிப் புகுத்தப்பட்டிருந்தால் உலகின் எல்லா மனிதர்களுக்கும் ஒரே சமயத்தில் கடவுள் அறிவு ஏற்பட்டிருக்கவேண்டும். இவ்வுலகில் பிறக்கும் எவருமே கடவுள் பற்றிய அறிவோடு பிறப்பதில்லை." இவ்வாறு வோல்டேர் மிகவும் உறுதிபடக் கூறுகின்றார். எனினும் கார்ல்மார்க்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் இதற்கும் ஒரு படி மேலே சென்று "மதம் என்பது ஆபத்தில் சிக்கிய உயிரின் பெருமூச்சும் இதயமற்ற உலகத்தின் எண்ணமுமாகும். அது ஆத்மாவற்ற சூழ்நிலைகளின் ஆத்மாவைப் போன்றது. குறித்துச் சொல்வதாயின் மதம் மக்களுக்கு அபினியாகும்". என்பது அவரது வலுவான கருத்தாகும். உண்மையில் பார்க்கப்போனால் மதங்களைக் குத்தகைக்கு எடுப்போர்களிடமிருந்து நீண்டகாலமாக இதையேதான் காணவும் எதிர்பார்க்கவும் முடிகின்றது. பெரும்பாலான நாடுகளில் இயற்கையின் பெரும் கொடையான மானிட சமூகம் கூறுபட்டு வீழ்ந்து கிடப்பதற்கு மதவாதிகளே பெரும் பங்காளர்களாக இருந்து வருகின்றார்கள்.

மனிதனே கடவுளைப் படைத்தான் என்பதுவும் · கடவுளே மனிதனைப் படைத்தார் என்பதுவும் வாதப் பிரதிவாதங்களாக உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் மனித சமுதாயத்தைக் கடவுளும் உண்டாக்கவில்லை - மனிதனும் உண்டாக்கவில்லை என்பதுவே உண்மை நிலையாகும். பார்க்கப் போனால் ஆதி மனிதனை இயற்கையின் நிர்ப்பந்தமே சமூகநிலைக்கு வலிந்து இழுத்து வந்திருக்கின்றது. தனிமனிதனாக இல்லாமல் சமூகமாக இருந்து கொண்டுதான் அவனால் இயற்கையின் சவால்களுக்கு ஈடுகொடுக்க முடியும் என்பதனை அது அவனுக்கு அனுபவ போதனையாகக் கற்பித்திருக்கின்றது. உண்மையில் பார்த்தால் வெளிப்புறச் சூழ்நிலைக் கட்டாயமே மனிதனது கூட்டு உழைப்பின் ஊடாக சமுதாய தோற்றத்திற்கு வித்திட்டது எனலாம். தொடக்க காலத்தே விலங்கு வாழ்க்கைக்குள் அறியப்பட்ட மனிதனை மனித வாழ்க்கைக்குள் நிலைபெற வைத்தது இயற்கையின் கொடையாக அவனுக்குக் கிட்டிய சமுதாய வாழ்க்கையே.

அன்றைய மனிதனின் தனிமனித வாழ்க்கையில் புரியாமலும் மறைவாகவும் தென்பட்ட இயற்கையின் ரகசியங்கள் படிப்படியாகக் குறைந்துகொண்டு வந்த நிலையில் - காலப்போக்கில் - நிலையாகக் கால்பதிக்கவும் அவனால் முடிந்திருக்கின்றது. இயற்கையுடனான முரண்படாத சமூகச் செயல்களும் எதிர்ச் செயல்களும் பரிணாம குணாம்ச அம்சங்களும் மனித சமூகத்தை நெறிமுறை அமைப்புக் குள்ளான வளர்ச்சிக்கு இட்டுச்செல்ல வழிகோலியது. இன்று மனிதன் சமுதாயத்தின் பெரும் கொடையான மொழியையும் அதன்மூலம் தனது எண்ண வெளிப்பாடுகளையும் - சமுதாயத் தாலாட்டுத் தொடக்கம் பகுத்தறிவுவரைக்கான வளர்ச்சி நெறிமுறைகள் அனைத்தையும் கொண்ட நிலையில் இயற்கையின் புத்திரன் *(Son of Nature)* என்பதிலும் சமுதாயத்தின் புத்திரன் *(Son of Community)* என்ற நிலையிலேயே உயர்ந்து நிற்கின்றான். விலங்குமனிதன் சமுதாய மனிதனாக மாறிய பின்னரேயே இவ்வுயர்ந்த தன்மையை அவனால் எட்டமுடிந்தது. இதற்கு நிரூபணமாக 1920ல் இந்தியாவில் நிகழ்ந்த ஒரு உண்மைச் சம்பவத்தை நாமிங்கு உற்று நோக்கலாம்.

மேற்கு வங்காளத்தின் மேதினிப்பூரில் ஜே.ஏ.எல். சிங் என்ற கிறிஸ்தவ மதகுரு அக்கால கட்டத்தே மதகுருவாக அங்கே கடமையாற்றிக்கொண்டிருந்தார். மேதினிப்பூரின் அடர்ந்த காட்டுப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தே ஒரு பெண்ஓநாயுடன் இரண்டு அழகிய சிறுமிகள் நிர்வாணத்துடன் சுற்றித் திரிவதை அப்பிரதேசத்தே மதம் பரப்பச் சென்ற அவரிடம் அக் காட்டுவாசிகள் சிலர் எடுத்துக் கூறினர். தனது உதவியாளர் சகிதம் சிலநாட்கள் அப்பகுதியில் தீவிர தேடுதலை மேற்கொண்ட அவருக்கு பெரும் ஆச்சரியம் காத்திருந்தது. சுமார் எட்டு வயது மதிக்கத்தக்க இரண்டு பெண்குழந்தைகள் நிருவாணக் கோலத்தில் ஒரு ஓநாயின் பின்னால் கையாலும் காலாலும் நடந்து செல்வதை மறைவிலிருந்து கவனிக்கலானார். பின்னர் அவற்றை மீட்டெடுக்கும் முயற்சியினை மேற்கொள்ளலானார். அவரது முயற்சிக்கு ஓநாய் பெரும் தடையாக இருந்தமையால் அதனை சுட்டுக்கொல்லவேண்டிய கட்டாயம் சிங்குக்கு ஏற்பட்டது. பின்னர் சிறு சிறு காயங்களுடன் அச்சிறுமிகளை அவர் மீட்டெடுத்து வந்தபோது ஓநாயின் பழக்க வழக்கங்களே அச்சிறுமிகளிடம் முற்று முழுதாகத் தென்பட்டது. அமலா, கமலா என அச் சிறுமிகளுக்குப் பெயர் சூட்டிய அவர் தொடக்கத்தே அவர்களுக்கு குளிப்பாட்டவும், உணவூட்டவும், உடை உடுத்தவும், பராபரிக்கவும் மிகவும் சிரமப்படலானார். ஒரு வருடத்தின் பின்னர் நோயால் பீடிக்கப்பட்ட அமலா இறந்துவிடவே கமலாவை வைத்தியர்களின் துணைகொண்டு மிகவும் கவனமாக வளர்த்தெடுக்கலானார். ஆரம்பத்தில் உடுத்தும் ஆடைகளை பல்லால் கடித்து நார் நாராய் கிழித்தெறியும் அவள் படிப்படியாக பின்னர் அதனை ஏற்றுக்கொள்ளலானாள். பத்து வயதானபோது தானாகவே அவள் எழுந்து நிற்கவும் தத்தித் தத்தி நடக்கவும் கைகளால் தம்ளரை எடுத்துத் தண்ணீர் அருந்தவும் பழக்கப்பட்டுக்கொண்டாள். இவ்வாறு படிப்படியாக மாறிவந்த அவள் அவளது பதினைந்தாவது வயதில் ஒரு அழகிய பெண்ணாகக் காட்சிதரலானாள். மேலும் அவளால் வங்காள மொழியில் பேச முடிந்ததுடன் ஓரளவு எழுதவும் பழகிக்கொண்டாள். துர்ரதிஷ்ட வசமாக கமலா 1929ல் தனது பதினேழாவது வயதில் நோயால் பீடிக்கப்பட்டு இறந்துபோனாள். அதுவரையில் மேதினிப்பூர் காணாத பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட சோக நிகழ்வாக அவளது இறுதி ஊர்வலம் அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது மரணத்தின் பின்னர் அதுபற்றி அறிந்துகொண்ட பல மானிடவியலாளர்களும் மருத்துவ நிபுணர்களும் தங்களது அதிர்ச்சியையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தலாயினர். இது சார்ந்த நிபுணர்களின் துணையுடன் கமலா வளர்க்கப்படாமையால் மனித உடற்கூற்று வளர்ச்சி மற்றும் பரிணாம வளர்ச்சி குறித்த பல தகவல்களைப் பெறக்கூடிய அரிய வாய்ப்பு பறிபோய்விட்டதாக இது பற்றிய தகவல்களை உள்ளடக்கிய *(Wolf Child and Human Child (Culcutta Statesman)* என்ற நூல் குறிப்பிட்டுள்ளது. மேலும் "மனித உடலின் பரிணாம வளர்ச்சி என்பது முழுக்க முழுக்க சமுதாயத்தின் பங்களிப்பைச் சார்ந்ததேயன்றி வேறு எதனையும் அது சார்ந்திருக்கவில்லை" என்பதனை ஆய்வாளர்களது கருத்தாக அந்நூல் முன்வைப்பதைப் பார்க்கலாம். இக்கருத்து எதனை வெளிப்படுத்துகின்றது என்றால் மதம், கடவுள் நம்பிக்கை, சம்பிரதாயங்கள் அனைத்துமே பரிணாம வளர்ச்சிக்கு அப்பாற்பட்டவை என்பதனையே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06.
# நாம் யார்

சந்தேகிக்கப்படத்தக்கதான யாவற்றையும் சந்தேகிக்கும் நாம் நம்மை நாமே ஏன் சந்தேகிப்பதில்லை. நான் இருக்கிறேன் என்பதை ஏற்றுக்கொள்ளும் என்னால் எப்படி என்னையே சந்தேகிப்பது. நான் இருக்கிறேன் என்றால் என்னைப் படைத்தவர் ஒருவர் நிச்சயம் இருந்துதானே ஆகவேண்டும். அப்படியானால் எதற்கும் ஒரு படைப்பாளி தேவைப்படுவது நியாயம்தானே. இதையேதான் மதங்கள் தமக்குச் சாதகமாக்கிக்கொள்கின்றன. எனினும் இதற்கு இடையில் நம்மால் ஒரு கேள்வியினை எழுப்பிப்பார்க்கவும் முடிகின்றது. நான் இருக்கிறேன் என்றால் நான் யாராக இருக்கிறேன் என்பதுவே அது.

இப்படிச் சிந்திப்பது நம்மை ஒரு சரியான விசாரணைக்கு இட்டுச்செல்கின்றது. இது ஒரு தத்துவக் கேள்வியல்ல. உண்மையில் இது இருத்தலியல் கேள்வி. இதற்கு வேறு யாராலும் பதில் தேட முடியாது. இதற்கான பதிலினை நாமே தேடியாகவேண்டும். சொல்லப்போனால் ஒரு வித்தியாசமான பயணமே இது. அதுவும் ஒரு உள்நோக்கிய தேடல். புறவழிப் பயணங்களால் இறுகியிறுகிக் கல்லாகிப்போய்விட்ட நாம் முதலில் அதனை உடைத்தெறிந்துவிட்டு வெளியில் வரவேண்டியுள்ளது. ரமண மகரிஷி தனது போதனைகளில் இந்த உத்தியைத்தான் கையாண்டார். தனது சீடர்களுக்கு இதையேதான் அவர் போதித்தார்.

மௌனமாக அமருங்கள். உங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள். இப்போது நான் யார்? நான் யார்? என்று உங்கள் மனதுக்குள் கேட்டுக் கொண்டே இருங்கள். உங்கள் மனம் பலவாறு சிந்திக்கும். பலவாறு பதிலளிக்கும். இதில் எதையும் நீங்கள் பொருட்படுத்தாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு காலமானாலும் ஆகட்டும். அதையிட்டு கவலைகொள்ளாது தொடர்ந்துகொண்டேயிருங்கள். ஒருநாள் உங்களது உள் உயிர்ப்பிலிருந்து - உள்ளார்ந்த மையத்திலிருந்து அதற்கான பதில் வரும். அப்படிப் பதில் வருகின்றபோதுதான் உங்களது முழு வாழ்வும் அர்த்தமுள்ளதாக உங்களுக்குத் தெரியவரும். நீங்கள் யாரென்பதையும் உங்களால் புரிந்துகொள்ளமுடியும்" இதுவே ரமணரின் போதனையாகும்.

ஞானிகள் எப்போதுமே விடைகளைத் தரமாட்டார்கள். உத்திகளை மட்டுமே கூறுவார்கள். நமது சிந்தனைகள் மூலம் நாமே நமக்குள்ளிருந்து நமக்கான விடைகளைப் பெறவேண்டியுள்ளது. மேற்பரப்பில் தோணுகின்ற எளிமையான விடயங்கள் எல்லாமே அடியாளத்தில் சிக்கலான விடயங்களில் வேர்கொண்டுள்ளன. இவை எல்லாமே ஒன்றுக்கொன்று உறவும்கொண்டுள்ளன. ஒரு கருத்தினை நாம் மாற்றிக்கொண்டால் மட்டும் எதையும் மாற்றிவிட முடியாது. உள்ளே நுளைந்து அங்கு தென்படுகின்ற சிக்கல்களைக் களைந்து அதனைச் சீராக்கினால் மட்டுமே அதில் உண்மையான தெளிவினைப் பெறமுடியும். இதற்கு மிக முக்கியமாத் தேவைப்படுவது பயிற்சியாகும். அதுவும் மன நிலைப் பயிற்சி. மனதை ஒரு நிலைப்படுத்தும் பயிற்சி. பக்திநிலை, யோகநிலை ஆகிய இரண்டுமே இதனுள் அடக்கம். எனினும் இவையிரண்டும் வெவ்வேறுபட்ட மார்க்கங்களே.

பக்திநிலையானது நம்பிக்கையை உள்வாங்கிய வண்ணம் செல்லக்கூடியது. யோகநிலையோ ஒவ்வொன்றையும் படிப்படியாக அனுபவித்தவண்ணம் செல்லுவதாகும். எதனையும் எதிர்த்து நின்று வெற்றிகொள்ளும் தன்மையில்லாமல் அவற்றோடு இசைந்துசென்று வெற்றிகொள்ளும் நிலையே அது. சொல்லப்போனால் உண்மையில் தெளிவோடுகூடிய பாதையில்தான் யோகநிலை செல்லும்.

பக்தி நிலையிலும் உரிய குறிக்கோளை எட்டமுடியும் என்பதும் ஒரு தோற்றப்பாடாகத் தென்படுவதை மறுக்கமுடியாது. எனினும் அது அர்த்தமுள்ளதாக அமையவேண்டும். இல்லையென்றால் இறுதியில் அது ஒரு வீணான முடிவையே தெளிவாக்கிநிற்கும். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று விரிவாகப் பார்ப்போம். உதாரணத்துக்கு நாம் வழிபாடு இயற்றுகின்ற ஒரு கோவிலை எடுத்துக்கொள்ளலாம். அங்கு ஒரு குருக்கள் கூலிக்காக அமர்த்தப்பட்டிருப்பார். அவர் அங்கு ஆண்டுக் கணக்கில் பிரார்த்தனை செய்பவராகத்தானிருப்பார். உண்மையில் அதில் எந்தப் பயனுமோ அன்றேல் எந்த நிறைவுமோ இருக்கப்போவதில்லை. வேண்டுமானால் இதன்மூலம் நம் மனதில் ஒரு நம்பிக்கையை மாத்திரம் உருவாக்கிக்கொள்ளமுடியும். இதுகுறித்து நாம் சற்று சிந்தித்துபார்க்கவேண்டியுள்ளது. அந்தக் குருக்கள் எப்போதுமே ஒரு விதிமுறையின் கீழ்த்தான் செயல்பட்டுக் கொண்டிருப்பார். அவர் அதற்கென நியமிக்கப்பட்ட ஒரு நெறியாளர் மாத்திரமே. நம்மைத் திருப்திப்படுத்துவதற்காகவே நம்முன் அவர் ஒரு பக்தனைப்போல நடிப்பார். ஆனால் அச் செயலில் உண்மையான பக்தியிருக்கப்போவதில்லை. சொல்லப்போனால் கொடுக்கின்ற ஊதியத்தில்தான் பொதுவாக அவருக்கு அக்கறையிருக்குமே தவிர அங்கு இடம்பெறுகின்ற பிரார்த்தனைகளிலோ பூசைகளிலோ சடங்குகளிலோ அல்ல. இதில் அந்தக் குருவானவர் தனது கடமையைத்தான் செய்கின்றார். எனினும் இதன்மூலம் யாருக்கும் எந்த நன்மையும் நிச்சயமாக கிட்டப்போவதில்லை. தனக்குக்கூட வழிபாடு இயற்றமுடியாத மனிதராகவே அவரின் செயல்பாடு அமையும்.

இதனைக் காரணப்படுத்தும் தன்மையில்தான் சுவாமி விவேகானந்தர் "எதிலும் ஒரு அர்த்தப்பாடு இருக்கவேண்டும். நமக்கான தேடலை இன்னொருத்தரால் நிச்சயமாக நிலைநிறுத்த முடியாது. ஞானிகளும் மகான்களும் அதற்கான உத்திகளையும் வழிமுறைகளையும்தான் தருவார்கள். அதற்கான முழுமையைத்தேடிப் பயணிப்பது நாமாகத்தானிருக்கவேண்டும்" என வலியுறுத்துகின்றார்.

எதற்கும் திட்டமிடுங்கள் என்றுதான் பொதுவாகச் சொல்லப்படுகின்றது. திட்டமிடுவதாகவிருந்தால் அதற்கான வழிமுறைகளும் இருந்தாகவேண்டும். அப்படியிருந்தால் மாத்திரமே அத்திட்டத்தை நம்மால் செயல்படுத்தமுடியும். செயல்படுத்தமுடியாத திட்டத்தை உருவாக்கிக்கொண்டு பின்னர் அதற்கான வழிமுறைகளைத் தேடி அலைவதில் என்ன பயன் இருக்கப்போகின்றது. பெரும்பாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியல் தத்துவங்கள் ஏற்படுத்தித் தந்த திட்டங்களும் கொள்கைகளும் இத்தன்மை வாய்ந்தவையாகவே இன்றும் உள்ளன.

உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம். இந்தப் பிரபஞ்சத்தை உண்டாக்கியது யார் என்ற கேள்வியை முதலில் எழுப்புவோம். இன்று இது உண்மையில் ஒரு தேவையற்ற கேள்வியாகவே உள்ளது. என்றாலும்கூட இதற்காகப் பல புத்திஜீவிகள், தத்துவ ஞானிகள், மதவாதிகள் என பலதிறப்பட்டோரும் தங்கள் தங்கள் சக்திகளைத் தொடர்ந்தும் வீணடித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். பல்லாயிரம் வருடங்களாக இக்கேள்வி பின்னாலிருந்து அவர்களைத் துரத்திக்கொண்டுதானிருக்கின்றது. இதற்கு பதிலளிக்கப்படும் போதெல்லலாம் சற்று வளைந்து கொடுப்பதைப்போல் தோன்றும் இக் கேள்வி பின்னர் திடீரென நிமிர்ந்துகொள்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07.
# மதமும் மனிதனும் மாற்றங்களும்

நாம் இப்போது எதைப்பற்றியும் விரிவாக அறிந்துகொள்ளவே மிகவும் ஆவலாகவுள்ளோம். இதற்கான காரணம் நாம் எல்லாவற்றையும் அறிவுக்கண்கொண்டு பார்க்கும் நிலைக்கு வளர்ந்துள்ளமைதான். மதங்களின் பழமைமிக்க கொள்கைகள், கோட்பாடுகள், சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் நம்பிக்கைகள் போன்றவை அர்த்தமற்றவைபோல் நமக்குத் தெரியவருகின்றன. எனினும் நீண்டகாலமாகத் திணிக்கப்பட்டிருந்த இவைகளை உடனடியாக ஒதுக்கிவிட மனமின்றி பெரியவர்களால் சொல்லப்பட்டது- பெரியவர்களால் வகுக்கப்பட்டது என ஒரு பொய்யான மன ஆறுதலுடன் தொடர்ந்தும் அவற்றைப் பின்பற்றவே செய்கின்றோம்.

இன்று கடவுள் கொள்கைகள் மற்றும் மத நம்பிக்கைகள் குறித்து இருவேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. மனித சமூகத்தை ஒழுங்குபடுத்தும் போர்வையில் பாவம், புண்ணியம் என மிரட்டியும் தலைவிதி, முற்பிறவிப் பயன் எனச் சமாதானம் கூறியும் மோட்சம், நரகம் எனப் பேராசை காட்டியும் பயமுறுத்தியும் இல்லாத நம்பிக்கைகளையும் மூடக்கொள்கைகளையும் புகுத்தி மனிதனைக் கட்டுப்படுத்தத் தோன்றியவைகளே இவை என்பது ஒரு பக்கத்துக் கருத்தாகவுள்ளது.

இதன் மறுபக்கக் கருத்தாக மத நம்பிக்கைகள் அனைத்தும் மனிதனின் சக்தியை நல்லபல ஆக்கபூர்வமான காரியங்களில் ஈடுபடுத்த வைத்தமையினாலேதான் மனுக்குலம் செழிப்படைய முடிந்தது எனவும் இல்லாவிட்டால் இன்னும்கூட மனிதன் காட்டுமிராண்டியாகவே வாழ்ந்துகொண்டிருப்பான் எனவும் வாதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்படுகின்றன. எனினும், எதிலும் நன்மை தீமை என இருபக்கச் சார்புநிலை தென்படுவதைப்போல மனித சமூகம் தம்முள் அடித்துக்கொண்டு அல்லல் படவும் மதங்களே தொடர்ந்தாற்போல் வழிவகுத்து வந்திருப்பதை நாம் கவனத்தில்கொள்ளவேண்டும்.

கடவுளை யாரும் உண்டாக்கவில்லையென்றால் இந்தப் பிரபஞ்சத்தையும் அதன் உயிர்த்தன்மையினையும் யாருமே உண்டாக்கவில்லை என்பதே தெளிவாகும். எனினும் இது உண்மையில் நமது அறிவுக்கு எட்டாதது என்பதுவே சரியான விடையாக அமையும். இவர்கள் ஏன் இந்த விடையோடு திருப்திப் படாதுள்ளார்கள் என்பதுவே இன்றும் புரியாத புதிராகவுள்ளது.

இன்றைய விழிப்புணர்வு பெற்ற காலத்தில் கடவுள் என்பது ஒரு நபருமல்ல- பெயர்ச் சொல்லுமல்ல. அது ஒரு சுயமான இயக்கம் என்பதே தெளிவுபடுத்தப்படுகின்றது. ஜென் போன்ற மதங்கள் இதனைக் கடவுள் தன்மை என்றே கூறுகின்றன. அன்றும்சரி இன்றும்சரி மதங்கள் தங்களை நிலை நிறுத்தவேண்டி பல்வேறு வழிமுறைகளையும் யுக்திகளையும் வளர்த்துக்கொண்டே வந்துள்ளன. நல்ல காரியங்களையும் தான தருமங்களையும் செய்யும் ஒருவனா லேயே சுவர்க்கத்தை அடையமுடியும் என ஒரு மதம் கூறுமேயானால் அந்த மதம் மனித குலத்திற்கு ஏதோ ஒரு வழியில் உதவிபுரிவதாகக் கருதமுடியும். அதை விடுத்து நமது மதத்தைப் பரப்பவும் நிலை நிறுத்தவும் போரிடுங்கள். அதனை எதிர்ப்போரை யாராகவிருப்பினும் விட்டுவையாதீர்கள். அவர்களை அழித்தொழியுங்கள். அதில் நீங்கள் மரணமடைய நேரிட்டாலும் சொர்க்க வாசல் உங்களுக்காக திறந்தேயிருக்கும் என மதங்கள் கூறுமாயின் அவற்றை என்னவென்பது. அன்றுதொடக்கம் இன்றுவரை மதம் என்ற போர்வையில் எத்தனையோ செயல்பாடுகள் மனித சமூகத்தைக் கூறுபோட்டும் சீரழித்தும் வந்த காரணத்தினாலேயே மதம் மதம்கொண்டது என்ற மறுகருத்துக்கும் பொருளாகி நிற்கின்றது. கார்ல்மாக்ஸ் தொடக்கம் ராகுல் சாங்கிருத்யாயன் வரையான பல்வேறு தத்துவஞானிகளும் அறிஞர்களும் மதங்களை மாற்றுக் கண்கொண்டு பார்க்கவும் இதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுத்துக் கொடுத்தது. வர்க்க நலன்களைக் காப்பதற்காகவே மதங்கள் கற்பனை செய்யப்பட்டன என்பதுவே இவர்கள் கருத்தாகும்.

புகழ்பெற்ற கவிஞரான சோவ் போகல் மதம் அழிந்துவிட்டால் சுரண்டும் கூட்டமே இல்லாது போய்விடும் என மனக் கொதிப்புடன் கூறுகின்றார். உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்ட நிலையிலும் மதத்தின் பெயரால் கோடிக்கணக்கான மக்கள் இன்னும் சுரண்டப் பட்டுக்கொண்டிருப்பதுவும் கொலைகளும் கற்பழிப்புகளும் இன்னும் பல பாவச் செயல்களும் நிகழ்ந்துகொண்டிருப்பதுவும் மதங்களுக்கு எதிரான அவரது ஆக்கிரோசமான பாடல்களுக்குக் காரணமாக அமையலாம். இந்துமத தத்துவங்களின் உய்வினால் உலகின் முதல்தர ஆன்மீக பூமி என ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரத தேசத்தில் மதத்தின் பேரால் இன்னும் கொடுமைகள் நிகழ்ந்துகொண்டுதானே இருக்கின்றன. இன்றைய இலங்கையின் நிலைதான் என்ன? சாந்தியையும் சமத்துவத்தையும் சமாதானத்தையும் உலகத்துக்கு வெளிப்படுத்திய பௌத்த மதம் விசாலித்த மண்ணில் கால்நூற்றாண்டுகளுக்கும் மேலாகக் குருதி ஆறு ஓடத்தானே செய்தது.

உலகத்தின் கண்களுக்கு கொடியவனாகச் சித்தரிக்கப்பட்ட ஹிட்லர் தனது பாசிசச் செயல்பற்றிக் கூறியது என்ன? நான் நாஸ்திகர்களான போல்சிவிகளுக்கு எதிராக வாளை எடுத்திருப்பதால் தர்மயுத்தமே புரிந்துகொண்டிருக்கிறேன் என்றுதானே கூறினான். இங்கே ஹிட்லர் தன்னை ஒரு மத வாதியாக அடையாளப் படுத்துவதின் அர்த்தப்பாடே தனது பாவச்செயலை நியாயப்படுத்தத்தானே.

மதங்களைப் பாராமல் அறிவுபூர்வமாகக் கடவுளைப் பார்க்கின்ற ஒரு பிரிவினரான அறிஞர்களும் காலத்துக்குக் காலம் இவ்வுலகில் தோன்றவே செய்கின்றனர். கி.பி 984ல் தோன்றிய உதயணர் இது குறித்த சில கருத்துக்களை முன் வைத்தார். ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் இருப்பதைப்போல இப் பிரபஞ்ச காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும். அடிப்படைப் பராமணுக்களை ( *Para Atoms)* ஒன்று படுத்தாமல் ஸ்தூலமான உலகை உருவாக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே ஒன்றுபடுத்துபவர் என ஒருவர் இருந்துதான் ஆகவேண்டும். இப்பிரபஞ்சத்தை தாங்கிக்கொள்ள ஒரு சக்தி வேண்டும். ஆகவே சுமப்பவன் என்ற நிலையில் ஒன்று இருக்கவே செய்யும். இது குறித்த சந்தேகத்தை தெளிவுபடுத்த தனது வாழ்வியல் தத்துவத்தின் அடிப்படையில் மகாத்மாகாந்தி சில கருத்துக்களை முன்வைக் கின்றார். நாம் வாழுகின்றோம் எனும்போது நமது பெற்றோர்களும் அவர்களது பெற்றோர்களும் வாழ்ந்தேயிருக்கின்றார்கள். இதைத் தொடர்ந்தாற்போல் பின்னோக்கிச் செல்கின்றபோது இவ்வுலகை ஒரு படைப்பாளி படைத்திருக்கவேண்டுமல்லவா? அவனேதான் கடவுள் ஆகின்றான். அவன் இல்லையென்றால் இன்று நாம் இருக்கமுடியாது. இதுவே மகாத்மா காந்தியின் தீர்க்கமான முடிவாகின்றது.

இதில் பகுத்தறிவைவிட நம்பிக்கையே முக்கியத்துவம் பெறுவது தெரிகின்றது. எனினும் "ஆதிமுதல்" என்ற படைப்பாளியை யார் படைத்தார் என்ற கேள்வி எழுகின்றபோது அப்புதிர் விடையற்ற தாகிவிடுகின்றது. இதையேதான் நாஸ்தீக வாதமாக வெளிப்படுத்த முற்படுகின்றனர். எனினும் இங்கு நாஸ்தீக வாதமே வெல்லப்படுவதை நாம் கவனத்தில்கொள்ளவேண்டும். இங்கே உள்ளுணர்வுகளுக்கும் அப்பாற்பட்ட தன்மையின் வெளிப்பாடே முன்வைக்கப்பட வேண்டியதாகிவிடுகின்றது.

கி.பி 600ல் வாழ்ந்த பௌத்த தத்துவ வாதியான தர்மகீர்த்தி (போதி தர்மர்) என்பவர் நிலைபெற்ற கடவுள் கொள்கையொன்றை ஏற்றுக்கொண்டவரல்ல. அவரது கருத்துப்படி அழியாத ஒருவர் எதற்குமே காரணகர்த்தாவாக இருக்கமுடியாதென்பதே. உண்மையில் காரணகர்த்தா என்பவர் செயல்படுபவராகவே இருக்கவேண்டும். அப்படிச் செயல்படும் ஒருவர் தன்னிலும் தனது செயல்பாடுகளிலும் மாற்றமுள்ளவராகவே இருக்கச்செய்வார். அப்படிப் பார்க்கின்ற பொழுது கடவுள் எனக் கொள்ளப்படுபவர் எவ்வாறு நிலைபெற்ற ஒருவராக இருக்கமுடியும். இதுவே இவரது வாதமாகும். இவரால் முன்மொழியப்பட்ட இக் கேள்வியானது இன்றுவரை விடையைத் தேடியதாகவேயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் பார்க்கப்போனால் அன்றுதொடக்கம் இன்றுவரை ஆன்மீக அறிவைச் சந்தேகிப்பதில் விஞ்ஞான அறிவும் விஞ்ஞான அறிவைச் சந்தேகிப்பதில் ஆன்மீக அறிவும் தங்களுக்குள் விதண்டாவாதம் செய்தே வந்துள்ளன. பொதுவாகப் பார்த்தால் இந்தியத் தத்துவவியலாளர்கள் காலம் காலமாக ஆன்மீகத்தின் ஊற்றுக் கண்களாகவே விளங்கிவந்துள்ளனர். அதே நேரத்தில் உலகின் தத்துவவியலாளர்கள் அனைவருமே இந்தியத் தத்துவவியலுள் புகுந்து வந்தவர்களாகவேயுள்ளனர். பெரும் சமுத்திரத்தைப் போல் பரந்து கிடந்த அதனுள் எதனைத் தங்களுக்கு வாய்ப்புள்ளதாகக் கருதி எடுத்துக்கொள்ள முடிந்ததோ அதனை மட்டுமே அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். அவர்களது பார்வையின் தன்மையைப் பொறுத்ததாகவே அது அமைந்திருந்தது.

"சர்வ சத்துவம்" என்னும் தத்துவத்தைப் புத்தர் பிரம்மத்தையோ அன்றேல் ஆத்மாவையோ குறிக்கப் பயன்படுத்தவில்லை. அனாத்ம வாதத்தையும் வினாடிக்கு வினாடி மாறும் தத்துவத்தையும் புத்தர் உபதேசித்தார். சங்கரரின் பிரம்மம் - ஆத்மா பற்றிய உபதேசம் புத்தருடைய கருத்துகளுக்கு மாறுபட்டுச் செல்வதை நம்மால் அவதானிக்கமுடியும். டாக்டர் ராதாகிருக்ஷ்னன் இப்பிரபஞ்சத்தின் பின்னால் ஒரு சிரஞ்சீவித் தன்மை உண்டென்பதை இந்தத் தத்துவங்களின் ஊடாக நிலைநாட்ட முற்படுகின்றார். இங்கிலாந்தின் தத்துவமேதை பார்க்லே (கி.பி 1740) இத்தத்துவங்களை ஆதாரப்படுத்தி பூமியிலும் சரி சொர்க்கத்திலும் சரி எல்லாமே மனதிலிருந்தே தோற்றம் பெற்றவை எனவும் மனமே நிரந்தர ஆத்மாவின் அடக்கம் எனவும் வெளிப்படுத்துகின்றார். இக்கருத் தானது ஐரோப்பிய தத்துவவியலைத் சார்ந்ததாகவே கொள்ளப் படுகின்றது. ஐரோப்பிய தத்துவவியலாளர்கள் விஞ்ஞானம் என்பது மனிதனைச் சமமான வழியில் கொண்டுசெல்லும் தன்மையைக் கொண்டதல்ல என்னும் வாதத்தை நிலைநிறுத்து பவர்களாகவேயுள்ளனர்.

பொதுவாகப் பார்த்தால் நாம் இவ்வுலகை நிகழ்வுகளின் பிரவாகம் எனக்கருதாமல் பொருள்களின் குவிப்பு எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கருவையே பெரும்பாலும் கொண்டிருக்கின்றோம். நாம் பேசுகின்ற மொழிகள் கூட இதற்கான சரியான பதத்தினைக் கொண்டிருக்கவில்லை. பல தத்துவவியலாளர்களின் கருத்துப்படி பிரபஞ்ச இயக்கத்தையும் மாற்றத்தையும் "இருக்கின்றது" என்பதிலும் "இருந்துகொண்டிருக்கின்றது" எனக்குறிப்பிடுவதே உண்மையில் பொருத்தமானதாக இருக்கமுடியும். இயக்க இயலுக்குக்கூட சரியான அர்த்தப்பாட்டைக்கொண்டதாக அது அமையும். வினாடிக்கு வினாடி மாறும் உலகியல் தத்துவத்திற்கு விஞ்ஞான உருவை வழங்கியதில் மார்க்சிஸத்திற்கு பெருமளவு பங்குண்டு. என்றாலும் இத்தத்துவமானது மிகப் பழமைவாய்ந்ததொன்றாகவே கொள்ளப்படுகின்றது. புத்தரும் கிரேக்கத்து அறிஞர் ஹெராகிலித்தும் கி.மு 500 லேயே இதனை அறிந்துகொண்டுள்ளனர். இருப்பது எதுவுமே வினாடிக்கு வினாடி மாறிக்கொண்டேயிருக்கும். அதேபோல் அந்த ஒவ்வோர் வினாடியும் மாறாமலிருப்பதில்லை. இதுவே பௌத்தத்தின் கோட்பாடு.

உண்மையில் பார்த்தால் உலகத்தின் படைப்பே அழிவாகவும் அவ்வழிவே உலகத்தின் படைப்பாகவும் மாறிமாறி வருவது தெரியும். எந்தக் குணாம்சத்தை உற்று நோக்கினாலும் முரண்பாடுகளின் இணைப்பாகவே அது இருக்கும். வினாடிக்கு வினாடி மாறிக் கொண்டிருக்கும் விதியினை யாருமே செய்யவில்லை. அது எப்பொழுதும் இருந்துதான் இருக்கின்றது. இனி எப்பொழுதுமே அது இருந்துகொண்டுதான் இருக்கும். இதனை இயற்கைக் கோட்பாடு எனக் கருதினாலும் அன்றேல் கடவுட் கோட்பாடு எனக்கொண்டாலும் அது அவரவர் விருப்பமே.

நிலையானதாக நமது கண்களுக்குப் புலப்படும் எவையுமே உண்மையில் நிலையானவையல்ல. அவை எப்போதுமே மாறிக்கொண்டுதானிருக்கின்றன. மரத்திலிருந்து ஒரு இலையினைப் பறித்தெடுத்து நாம் பார்க்கின்றபொழுது அது நிலையாயிருப்பதாக நமது கண்களுக்குப் புலப்படும். அது சிறு சிறு அணுக்களின் மொத்தத் தன்மையினைக் கொண்டிருப்பது நமது கண்களுக்குப் புலப்படமாட்டாது. அதனை ஒரு உருப்பெருக்கிக் கண்ணாடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துப் பார்ப்போமானால் அவ்விலையிலுள்ள அணுக்கள் அதன் குறிப்பிட்ட எல்லைக்குள் மாறிக்கொண்டிருப்பதைக் காணமுடியும்.

மாற்றம் என்பது அனைத்திலுமே நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது. உயிருள்ளவை உயிரற்றவை அனைத்துமே இவ்விதியினுக்கு கட்டுப்பட்டேயுள்ளன. பொதுவாக நமது சிந்தனைகள், கருத்துக்கள், கணிப்பீடுகள், விருப்பு வெறுப்புக்கள், அறிவு, சுபாவம் அனைத்துமே மாறிக்கொண்டுதான் இருக்கும். சொல்லப்போனால் சூழ்நிலைக்கு ஏற்றவாறு புத்தம் புதியவர்களாக நாம் மாறிக்கொண்டுதானிருக்கின்றோம்.

எந்தவொரு ஆக்கமும் முரண்பாடுகளின் வெளிப்பாடாகத்தான் அமையமுடியும். இணை நிலை *(Positive)* எதிர் நிலை *(Negative)* என்பவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட தன்மையைக் கொண்டிருக்கின்றன. இவை இணையும்போது பிறப்பிக்கப்படும் பொதுநிலை *(Nutral)* இதில் ஒரு பொதுத் தன்மையைத் தோற்றுவித்துவிடும். இதுவே யாவுக்குமான ஒரு பொது விதியாகும். ஒவ்வாத இரண்டின் இணைவுகளில் ஒவ்வும் தன்மை வெளிப்படுவதையே இவ்விதி விளக்கும். இது குணாம்ச மாறுதலிலும் வெளிப்பாடான தன்மையையே கொண்டிருக்கும்.

உதாரணத்திற்கு ஒன்றைப் பார்க்கலாம். சோடியம் என்பது ஆபத்தான ஒரு பொருள். இதனை நீரின்மேல் போட்டோமானால் அது தீப்பிடிப்பதைக் காணமுடியும். குளோரினோ ஒரு நச்சு வாயு. போரின்போதுகூட உயிர்களை அழிக்க இதனைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். சோடியமும் குளோரினும் இணையும் நிலையில் அங்கே சோடியம் குளோரைட்டு எனப்படும் உப்பு வெளிப்படுகின்றது. இதனுடைய குணாம்ச மாறுதலின் தன்மையானது சமயலுக்குகந்த கறியுப்பாக மாறியிருக்கின்றது. இதனுடைய வெளிப்பாடென்பது முரண்பாடுகளின் இணைவானது பொதுநிலை ஒன்றினைத் தோற்றுவிக்கும் தன்மையைக் கொண்டிருப்பதைப் புலப்படுத்துவதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயற்பாடுகளால் மனிதன் கடவுளுக்கோ அல்லது கடவுள் கோட்பாட்டுக்கோ எதிரியாகவோ அல்லது நாத்திகனாகவோ மாறவேண்டும் என்பதில்லை. உண்மையில் சொல்லப்போனால் கடவுளை நம்புகின்றவர்களும் சரி நம்பாதவர்களும் சரி அன்றேல் இடை நடுவில் நிற்பவர்களும் சரி இவர்கள் எல்லோருமே ஒரே நிலையில் தான் இருக்கிறார்கள் என்பதே. பொதுவாகப் பார்த்தால் மனிதனுக்கு வெளியே இருக்கும் எந்தச் சக்தியும் உள்ளேயும் இருக்கும். அதேபோல் உள்ளேயிருப்பதுதான் வெளியேயும் இருக்கும்.


நமது வாழ்வு நமக்குத் தெரிந்தது முதலாக நம்மை நமக்குத் தெரிகின்றது. நாம் இருக்கின்றோம் என்பதால் நமக்கு நிலையான ஒரு உணர்வும் இருக்கவே செய்கின்றது. இதனை நிலைநிறுத்து வதற்காகவே நமது மனம் இறப்பிற்கு பின்னதான ஒரு வாழ்வைப்பற்றி கற்பனைசெய்து பார்க்கின்றது. சொர்க்கம், மறுபிறப்பு, ஆன்மாவின் இடப்பெயர்ச்சி இவையனைத்தும் உண்மையில் நம்மால் அறியப்பட்டவையல்ல. பொதுவாகப் பார்ப்போமானால் மரணத்தைப் பற்றி எழுப்பப்படுகின்ற எல்லாக் கேள்விகளுமே அர்த்தமற்றதாகவே அமையும். நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் எனும் உண்மை நிலையில் மரணத்தைப் பற்றியும் அதன் பின்னிலை பற்றியும் ஏன் நாம் ஆர்வம் கொள்ளவேண்டும். நமது உடலுக்கு மரணம் என்பதில்லை. வேண்டுமெனில் அவ்வுடல் சிதைவடைந்து போவதாக வைத்துக்கொள்ளலாம். உடலை எரிக்கும் நிலையில் அது சாம்பராகி மண்ணுடன் கலந்துவிடும். புதைப்பதானால் புழு பூச்சிகளுக்கு உணவாகிவிடும். வாழ்க்கை என்றால் என்னவென்று தெரியாதிருக்கும் நிலையில் மரணத்தைப்பற்றி எதற்காக நாம் விவாதிக்கவேண்டும்.

மிருகத்திலிருந்து மனிதன் வேறுபட்டவனல்ல என்ற உண்மையை முதலில் நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும். சிந்திப்பதில் வித்தியாசமிருக்கலாம். எனினும் மிருகத்திலும் பார்க்க அது மனிதனில்தான் சிக்கலாகி நிற்கின்றது. இதன் அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் சிந்தனையும் வாழ்வும் நமக்கு இருவேறுபட்டதாகவே தெரிகின்றது. இதன் காரணமாகவேதான் நாம் எப்போதும் எதையும் தேடிக் கொண்டேயிருக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08.

# சிந்தனையும் செயல்பாடும்

மனிதனின் செயல்பாடுகளை நிர்ணயம் செய்வது எது? எனும் கேள்வி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பிரபஞ்சத்தின் செயல்பாடுகளின் பின்னால் இருப்பது எது என்பதைச் சரியாகக் கண்டறியமுடியாத மானிட அறிவின் தளம்பல் தன்மையே இங்கும் வியாபிக்கின்றது. ஒரு முடிவிலியாகவே இதுவும் இருக்கப்போகின்றது. நுண்ணறிவினதோ அன்றேல் ஆயத்த அறிவினதோ தேடல் இங்கும் பலனளிக்கப்போவதில்லை. விஞ்ஞான அறிவினூடாக இதற்கான தேடலும் ஒன்றையொன்று அல்லது ஒன்றிலொன்று தொட்டுக் கொண்டுதான் செல்லும். சொல்லப்போனால் முடிவில் ஒரு கற்பனை வாதத்துக்குள்தான் நாம் போய் நிற்போம்.

பிரபஞ்சத் தேடலுக்கு எவ்வாறு தர்க்க அறிவும் ஊக அறிவும் இசைந்து வருகின்றனவோ அதுபோல மனிதச் செயல்பாடுகளின் நிர்ணயம் தொடர்பான தேடலுக்கும் இவற்றால் உதவமுடியும். இங்கே ஒரு வெளிப்பாடு தென்படுவது நமக்குப் புலனாகின்றது. அதுதான் பிரபஞ்சச் செயல்பாட்டிற்கும் மனிதச் செயல்பாட்டிற்கும் இடையேயான ஒத்திசைவு. கவனமாகப் பார்த்தால் இன்றைய சிந்தனை மரபின் செல்வாக்கு அமைப்பியல் வாதத்தையும் அதைத் தொடர்ந்தாற்போல் நவீனத்துவக் கோட்பாட்டினையும் இதற்குள் இணைத்துப் பார்க்கின்றது.

பின்நவீனத்துவமானது பிரபஞ்சக் கோட்பாட்டுத் தன்மையிலும் மனிதச் செயல்பாட்டு நிர்ணயத் தத்துவக் கோட்பாட்டிலும் கடந்தகால அமைப்பியல் வாதங்களை மூன்றாக உடைத்தெறிவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனப் பாங்கில் முற்றுமுழுதாக அவற்றைத் தலைகீழாகப் புரட்டிவிடுவதிலும் தீவிரத் தன்மை மிக்கதாகவே விளங்குகின்றது. இதன்படிப் பார்த்தால் இச் சிந்தனைமுறை தொடர்பில் எழுகின்ற வாதப் பிரதிவாதங்கள் இன்னும் தொடரவே செய்கின்றன.

ஐரோப்பிய பெரும் சிந்தனையாளர்களுள் ஒருவராகக் கொள்ளப்படுகின்ற மிசெயில் பூக்கோ எல்லாச் செயல்பாடுகளுக்கும் பின்னணியில் ஆதிக்க வலுவே முன்னணியில் இருப்பதாகக் கருதுகின்றார். இத்தன்மையில்தான் பிரபஞ்சச் செயல்பாடுகளும் மானிடச் செயல்பாடுகளும் அமைவதாகவும் அதன்மூலம் மனித உடலின் செயல்பாடுகளுக்கு மாத்திரமன்றி சமூகத் தன்மையிலும் இக் கோட்பாட்டினைப் பொருத்திப்பார்க்கமுடியும் என்பதையும் அவர் முன்வைக்கின்றார். இந்த வகையில் இன்னொரு சிந்தனையாளரான ஜோக்ஸ் தெரிக்தா என்பவருடைய கருத்தும் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகின்றது. எந்தவொரு கட்டமைப்பின் புறப்பார்வையும் தெளிவை உண்டுபண்ணமாட்டாது என்பதே அவரது வாதமாகும். கட்டமைப்பின் புறத்தன்மை என்பது ஒரு பிரதிமையே. அதன் மூலவுருவான ஆசிரியனைத் தேடிக் கண்டறிதலே மிக மிக முக்கியமானதாகும். பிரதிமையின் தோற்றப்பாடாகக் காட்சிதரும் கட்டமைப்பை உடைத்துக்கொண்டு அதன் அகத் தன்மையை முதலில் தேடியாகவேண்டும். அதில்தான் முழுமையே தென்படும்.

பிரபஞ்சக் கோட்பாடு அல்லது உலகியல் தத்துவங்கள் ஒரு பிரம்மையாக மட்டுமே இருக்கும்வரை இதில் வெற்றிபெறமுடியுமா? நமது சிந்தனைகளும் செயல்பாடுகளும் இந்தப் பிரபஞ்சக் கட்டமைப்பினை இன்னும் சரியாக விளங்கிக் கொள்ளமுடியாது தத்தளித்துக் கொண்டிருக்கும்போது அதனைக் கட்டுடைத்துவிட்டு அதனுள்ளேயிருக்கின்ற மூலவுருவைக் கண்டறியவும் அதன் வினைத்திறனை எடைபோடவும் இயலுமா?

இங்கே உருவாகும் சிந்தனைகளால் சரியான செயல்பாட்டுக்கு இட்டுச்செல்ல முடிவதில்லை என்பதே உண்மையாகும். நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் அவநம்பிக்கை என்ற முரண்பட்ட கருத்துக்களையே இவை மாறி மாறிப் பிரதிபலிக்கச் செய்யும். முரண்பாடுகளின் அடிப்படையில்தான் எல்லாமே தோற்றம்பெறும் என்பது ஒரு பொதுவான நிலைப்பாடாவேயுள்ளது. இரண்டு சக்திகளின் மோதல் தன்மையில் ஏற்படுகின்ற அவற்றின் கூறுகளது அழிவுச் சக்தியானது மூன்றாவது சக்தியொன்றினை உருவாக்கும். இவ்வாறு தோற்றம் பெறுகின்ற புதிய சக்தி மாபெரும் ஆக்கச் சக்தியாக பரிணாமம் பெறுவதால் வலுத்திறன் மிக்க இயக்கச் சக்தியாக அது செயல்படத் தொடங்கும். பிரபஞ்சச் செயல்பாடுகள் அனைத்துமே அதனுள் அடங்கும். இதனாலான வெளிக்காட்டல்கள் யாவுமே பாரியவையாகவே தென்படும். சித்தாந்த தத்துவவியலின் பராசக்திக் கோட்பாடும் *(Para- energic Policy)* இதனையே மையப்படுத்துவதாகும்.

சிந்தனையாளர்கள் பொதுவாக இருவேறு கருத்துக்களின் சார்பாளர்களாகவே வெளிவருகின்றனர். கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களையே பெரும் சிந்தனையாளர்களாக சித்தரிக்கப் பகுத்தறிவு வாதமும் விஞ்ஞான வாதமும் முயல்கின்றன. டார்வினின் கோட்பாடு பெரும்பாலும் இதன் சாதகத் தன்மையின் வெளிப்பாடாக அமையினும் பிரபஞ்ச உயிர்த் தோற்றப்பாடு குறித்த சர்ச்சை சரியான தீர்வை வெளிக்கொணர்ந்ததா என்பதில் இன்றும் முரண்பாடுகள் நிலவவே செய்கின்றன. உயிர்த் தோற்றப்பாட்டுத் தன்மையில் டார்வினின் கோட்பாடானது ஒரு இடைநிலைச் சிந்தனையாகவே தோற்றம் பெறுகின்றது.


சிந்தனைகளின் தோற்றப்பாட்டுக்கு மனிதனின் வாழ்நிலையைக் காரணப்படுத்தும் தன்மையில் இவ்வுலகை விளக்கிய சிந்தனையாளர்களால்தான் இவ்வுலகினை மாற்றியமைக்கவும் முடியும் என்ற கருத்திலே கார்ல்மாக்ஸ் உறுதியாக நின்றார். எனினும் இதற்கு மாறான கருத்துக்களும் எழவே செய்தன. தனி மனிதனைப் புறக்கணிக்கும் மார்க்ஸிஸம் பிரபஞ்சச் செயல்பாடுகளில் ஒரு இயந்திரத் தன்மைவாய்ந்த சிந்தனா முறையை முன்வைப்பதாக சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையாளர்கள் கொதிப்புற்றனர். பகுத்தறிவு வாதத்தினூடான முரண்பாடுகளில் ஒரு சிந்தனைப் போராட்டம் இங்கு தோற்றம் பெற்றது. மார்க்சிஸமும் அதற்கு எதிரான சிந்தனைகளின் மோதலும் இருத்தலியல் வாதத்திற்கு தளமமைத்துக் கொடுத்தன. இதன் பிரதிபலிப்பானது ஒரு முதன்மைவாய்ந்த இருத்தலியலுக்குத் தள்ளப்பட்டபோது பிரபஞ்சக் கட்டமைப்புக்குள் தோற்றம்பெறாத அகப்பொருள் *(Nucleus)* ஒன்றினது இருத்தலை வலியுறுத்துவதாக அது அமைந்தது.

இதனை ஆழமாக நோக்கும்போது நமக்கு ஒன்று தெரியவரும். சிந்தனையும் செயல்பாடும் எப்பொழுதும் ஒன்றையொன்று தொட்டதாகவே செல்லும் என்பதேயது. புதிய சிந்தனை என்பது எப்பொழுதும் தான்தோன்றியாகவே தோற்றம்பெறுவதில்லை. பழைய சிந்தனை வேர்களின் கிளைவிடும் நிலைகளிலிருந்தே அவற்றின் அத்திவாரம் ஆரம்பிக்கும். இதன் அடிப்படையில் பார்த்தால் பிரபஞ்சத் தத்துவத்தின் மூலத்தளமே அனைத்திற்குமான மூலாதனம் என்பதே உண்மையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09.
# நம்பிக்கையும் அவநம்பிக்கையும்

இப்பிரபஞ்சத்தில் மனிதன் உயிர்வாழ அவனுக்கு கனவுகள் தேவைப்படுகின்றது - பொய் தேவைப்படுகின்றது. உண்மையுடன் ஒன்றிவாழ அவனால் முடிவதில்லை. நிகழ்காலம் மனிதனுக்கு நிம்மதியளிப்பதில்லை. அதன் காரணமாகத்தான் வருங்காலம் பற்றிய கனவுகள் அவனுக்கு நம்பிக்கை ஊட்டுகின்றது. நாளை என்பதில் அவனுக்கு இருக்கின்ற நம்பிக்கையால்தான் இன்றைக்கும் அவனால் வாழமுடிகின்றது. உண்மையில் நேற்று இனிமேல் வரப்போவதில்லை. நாளை என்பதும் நிச்சயமற்ற ஒன்றே.

நம்பிக்கையைக் கொண்டவையே மதங்கள். மனிதனை நம்பவைக்கவே மதங்கள் முயன்று கொண்டிருக்கின்றன. விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை எதையும் உடனடியாக நம்பவைக்க அது முயலாது. அதனது ஆரம்பமே சந்தேகத்தின் அடிப்படையிலே தான் எழுகின்றது. ஆராய்ந்து ஆராய்ந்து முடிவுசெய்வதிலேயே அது வழியமைத்துச் செல்கின்றது.

நம்பிக்கையைப் போன்றே அவநம்பிக்கை எனப்படுவதும் ஒருவித நம்பிக்கை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இதனடிப்படையில் எழுவதுதான் கடவுள் இருக்கின்றார் என்பதுவும் கடவுள் இல்லை என்பதுவும். இதில் கடவுள் இருக்கின்றார் என்பதை நம்பமுடிவதைப் போன்றே கடவுள் இல்லை என்பதையும் நம்பமுடிகின்றது. ஆத்திகனாயினும் சரி நாத்திகனாயினும் சரி உண்மையில் இருவருமே நம்பிக்கைவாதிகள்தான். நம்பிக்கை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகூடாமலும் போகலாம் அல்லது அது பொய்த்தும் விடலாம். என்றாலும் நம்புவது என்பது என்றும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கப்போகின்றது.

உடலும் மனமும் ஒரே நிகழ்வைத்தான் தொடர்ந்தும் செய்துகொண்டிருக்கின்றன. உடலினுள் நிகழ்வது எதுவோ அதுவே மனதிலும் நிகழ்கின்றது. மனதில் நிகழ்வது எதுவோ அதுவே உடலிலும் நிகழ்கின்றது. இரண்டுமே கொஞ்சக் காலத்திற்குத்தான் ஓடிக்கொண்டிருக்கும். வயிறு பசியாக இருக்கின்றபோது அந்தப் பசியை அது உணர்கின்றது. அந்த எண்ணம் மனதில் பதிகின்றது. இப்போது இரண்டுமே பசியுடன் ஒன்றிவிடுகின்றன. இதனைப் போக்கியாகவேண்டும் எனும்நிலை ஏற்படுகின்றபோது நம்மிடம் நம்பிக்கை எழுகின்றது. எந்த நிலையிலும் மனமானது நம்பிக்கை கொள்ளவே செய்கின்றது.

நம்பிக்கை வாதமும் அவநம்பிக்கை வாதமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். அவநம்பிக்கைவாதி முன்னர் நம்பிக்கைவாதியாகவே இருந்திருப்பான். நம்பிக்கை வாதியோ அவநம்பிக்கைவாதியாக மாறத்தக்கவன். ஒவ்வொரு நம்பிக்கையும் அவநம்பிக்கைக்கே இட்டுச்செல்லும் என்பது பொதுவான ஒன்று. எதிர்பார்ப்பே ஏமாற்றத்தையும் தருகின்றது. எதையும் எதிர்பாராத ஒருவனுக்கு ஏமாற்றம் எப்படி வரமுடியும்.

பார்க்கப்போனால் நாம் இப்போது இருப்பதிலும் பார்க்க இன்னும் அதிகம் சிறப்பாக வாழவே ஆசைப்படுகின்றோம். இது ஒரு நீண்டகால மரபாக இருந்துவருவதே உண்மைநிலையாகும். மனிதனைச் சரியான பாதையில் இட்டுச்செல்ல காலத்துக்குக் காலம் பல ஞானிகள் முயன்றிருக்கின்றார்கள். புத்தர், இயேசு, முகம்மது நபி, மகாவீரர், கிருஷ்னர், சங்கரர், ராமகிருஷ்னர், விவேகானந்தர், ரமணர், ஸ்ரீ சத்யசாயிபாபா, அரவிந்தர், ஓசோ என எல்லோருமே பாதையின் பகுதியாகவே இருந்துள்ளார்கள். இந்தப் பகுதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையானது நமக்காகவே அவர்களால் மேற்கொள்ளப் பட்டவையாகும். நம்மீது அவர்கள் கொண்ட ஆழமான கருத்தும் அன்பான கருணையும் அதற்குக் காரணமாக அமையலாம்.

பொதுவாக ஞானிகள் அவர்களது பாதையே சரியென்றும் ஏனையவர்களின் பாதைகள் அனைத்துமே தவறானவை என்றும் வாதிடுவதையே பார்க்கின்றோம். இதனை யாருமே தவறான கண்ணோட்டத்தில் அர்த்தப்படுத்தமுடியாது. சொல்லப்போனால் நமது விசுவாசத்தைக் கட்டியெழுப்பவே உண்மையில் அவர்கள் முயன்றுள்ளார்கள். எல்லாப் பாதைகளுமே சரியானவையென்றும் அவை மனிதனை உண்மை நிலைக்கே இட்டுச்செல்லத் தக்கவையென்றும் அவர்களுக்குத் தெரியாமலில்லை. அவற்றையே அவர்கள் நம்மிடம் கூறுவார்களேயானால் எந்தப் பாதையினையும் தேர்ந்தெடுக்க முடியாதவர்களாகவே நாம் இருப்போம். நமது நிச்சயமற்ற தன்மையைப் போக்கும் யுக்தியையே அவர்கள் கையாண்டுள்ளனர்.

தத்துவவாதிகள் பல்வேறு கதைகளை ஜோடித்திருப்பதன் நோக்கம் இலகுவில் நமக்குத் தெளிவினை ஏற்படுத்தவேண்டும் எனும் நல்லநோக்கமேயன்றி வேறல்ல. ஓசோ தனது போதனைகளின்போது அடிக்கடி ஒரு கதையினைக் கூறுவார். "போல் ஷெம் எனப் பெயர்கொண்ட ஒரு ராபி இருந்தார். ராபி என்பது யூதர்களின் மத போதகரை குறிப்பதாக அமையும். ஊருக்குள் ஏதேனும் பிரச்சனை ஏற்படுமிடத்து அம்மக்கள் அதனை ராபியிடம் சென்று எடுத்துரைப்பார்கள். ராபி பக்கத்திலுள்ள ஒரு காட்டுக்குள் சென்று அங்குள்ள ஒரு மரத்தடியிலிருந்துகொண்டு கடவுளுக்கான சடங்குகளைச் செய்த பின்னர் அவ்வூராரின் பிரச்சனை தீரவேண்டி தனிமையிலிருந்து அவர்களுக்கான வேண்டுதலை மேற்கொள்வார். அதன்பின்னர் அவ்வூராரின் கஷ்டமெல்லாம் தீர்ந்துவிடும். சில ஆண்டுகளின் பின்னர் ராபி இறந்துவிடவே அவரின் வாரிசு ஒருவரை ஊரவர்கள் ஒன்றுகூடி ராபியாக நியமித்தனர். மீண்டும் அவ்வூரில் ஒரு பிரச்சனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. ராபிக்கு அதுகுறித்து உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவருக்கோ கடவுளை வேண்டுதல் செய்யும் குறித்த காடு தெரியுமே தவிர அந்த மரம் எங்கு இருக்கின்றதென்றே தெரியாது. எனினும் அவர் இதுபற்றி யாரிடமும் பேசாமல் அக்காட்டிற்குள் சென்று ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்துகொண்டு சடங்கினை மேற்கொண்டார். ஆண்டவரே எல்லாமே உனக்குத் தெரியும், நீ எங்கும் நிறைந்தவர். எல்லாம் அறிந்தவர். எனது ஊரின் பிரசச்னையை நீயே உடனடியாகத் தீர்த்துவைக்கவேண்டும் என மன்றாடினார். ஊரின் பிரச்சனையும் தீர்ந்துபோனது. சில வருடங்களில் அந்த ராபியும் இறந்துவிடவே அவரின் வாரிசுகளில் ஒருவர் ராபியாக நியமனம் பெற்றார். இப்போது மீண்டும் அவ்வூருக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டுவிட்டது. புதிய ராபியிடம் அதுபற்றி அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த ராபியோ காட்டுக்குச் செல்லவில்லை. அவர் தனது வீட்டிலேயே கதிரையில் இருந்துகொண்டு ஆண்டவரை வேண்டினார். கடவுளே நான் எங்கும் செல்ல விரும்பவில்லை. எனக்குச் சடங்கு சம்பிரதாயங்கள் எதுவுமே தெரியாது. அவற்றில் எனக்கு நம்பிக்கைகூட இல்லை. யாவும் அறிந்தவனும் யாவையும் செய்பவனும் நீயாகவே உள்ளாய். எனவே இவ்வூரில் ஏற்பட்டிருக்கின்ற இப்பிரச்சனையை நீயே தீர்த்தருள வேண்டும். என மன்றாடினார். இவரது வேண்டுதலை வெகுவாக ரசித்த ஆண்டவர் அவ்வூர்ப் பிரச்சனையையும் உடனடியாகத் தீர்த்துவைத்துவிட்டார்" இதுவே ஓசோ கூறும் கதை.

இதே போல் வேறு ஒரு கதையினை பகவான் சத்திய சாயி பாபாவும் கூறுவார். "ஒரு நாள் உமாதேவியார் சிவபெருமானிடம் சுவாமி, நீங்கள் இவ்வுலகில் படைக்கப்பட்ட ஜீவராசிகளுக்கு அருள்புரிவதை நான் அவதானித்துக் கொண்டிருக்கின்றேன். சில வேளைகளில் உங்கள் செயல்பாடுகள் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இதனை நான் தங்களிடம் கேட்பதை தாங்கள் பொறுத்தருளவேண்டும். இச்சந்தேகம் எனக்கு ஏற்பட்டதைப்போல இப்பூவுலகில் உள்ளவர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படக்கூடுமல்லவா? இதனைத் தாங்கள் தீர்த்துவைக்கவேண்டும். இன்று நீங்கள் ஒரு நல்லவனுக்கு அருள் புரிந்ததைப் போலவே ஒரு கொடியவனுக்கும் அருள்புரிந்தீர்களே. அதன் காரணம்தான் என்ன? என வினவினார். இதனைக் கேட்டு புன்முறுவல் பூத்த சிவபெருமான், தேவி உனது சந்தேகம் நியாயமானதே. அதனை தீர்த்து வைக்கவேண்டியது எனது கடமையாகவே உள்ளது. இதற்காக நாம் இருவரும் காசிக்கு சென்றுவரலாம் எனக்கூறி பெரும்திரளாக மக்கள் கூடும் சிவராத்திரி நாளில் உமா தேவியாரையும் அழைத்துக்கொண்டு காசிக்குப் புறப்பட்டார்.

வயது சென்ற அழகிய கிழவன் கிழவியாக மாறிய சிவனும் உமாதேவியும் காசி விசுவநாதர் ஆலயத்தின் கங்கைக் கரை முகப்புவழி வாசலில் கூட்டத்தோடு கூட்டமாக உட்கார்ந்து கொண்டனர். அவர்களது பக்கத்தில் பட்டுத்துணியால் சுற்றப்பட்ட மூட்டைமுடிச்சு ஒன்றும் இருந்தது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் அன்று லிங்க அபிஷேகம் செய்வதற்காக கையில் செம்பு குடங்கள் சகிதம் கங்கையில் புனித நீராடிவிட்டு கங்கை நீரை எடுத்துக்கொண்டு ஆலயத்தினுள் சென்று லிங்கத்தை நீராட்டுவதும் 108 தடவைகள் இதனை நிறைவேற்றுவதற்காக பின்னர் கங்கைக்கு வருவதும் போவதுமாக இருந்தார்கள். இவ்வாறு அபிஷேகம் செய்வது பெரும் புண்ணியம் என்பதோடு சொர்க்கம் செல்லலாம் என்பதும் ஐதீகம். இதே நேரத்தில் நீண்ட காலமாக கடவுள் நம்பிக்கையின்றியும் பாவபுண்ணியம் பற்றி அக்கறை கொள்ளாமலும் காசியில் வாழ்ந்து களவுத் தொழிலை மேற்கொண்டுவரும் கள்வனொருவன் சிவனும் உமாதேவியாரும் வைத்திருந்த மூட்டைமுடிச்சு பட்டுத்துணியால் சுற்றப்பட்டிருப்பதைக் கண்டு அதில் ஏதோ விலையுயர்ந்த ஆபரணங்கள் இருக்கலாம் என நினைத்து அதனைப் பொலிசாரின் கண்களில் படாமல் திருடிக்கொண்டு செல்வதற்காக சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து அவர்களுக்கு எதிர்ப்பக்கம் சரியாக முன்புறத்தே உட்காந்திருந்தான். இதனை அவதானிக்குமாறு உமாதேவியாரிடம் கூறிய சிவபெருமான் திடிரென நிலத்தில் விழுந்து சுருண்டவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ அம்மா தண்ணீர் தண்ணீர் என சத்தமிடத் தொடங்கினார். கையில் கங்கா ஜலத்துடன் கூட்டம் கூட்டமாகச் செல்லும் யாருமே இதனைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் தங்கள் வேண்டுதல் பாழாகிவிடுமோ என்ற பயத்தினால் கிழவரைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் வழியில் கிடந்து சுருண்டுகொண்டிருக்கும் அவரைக் கடந்துகொண்டும் சிலர் அவரது கை காலை மிதித்துக்கொண்டும் போவதும் வருவதுமாக இருந்தார்கள். யாருமே கிழவரின் தாகத்தைத் தீர்த்து உயிரைக் காப்பாற்ற முன்வராத நிலையைக் கண்டு அதிர்ச்சியுற்ற கள்வன் கண்களில் நீர்கசிய தன்னிலை மறந்தவனாக ஓடிச்சென்று ஒருவரின் கையிலிருந்த தண்ணீர்ச் செம்பைப் பறித்து வந்து கிழவரைத் தூக்கி நிமிர்த்தி நீரை ஊட்டத் தொடங்கினான். பின்னர் கிழவரைத் தடவிக்கொடுத்துவிட்டு மெதுவாக அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றான். அதனைப் பார்த்துக்கொண்டிருந்த உமாதேவியாரின் கண்கள் பனித்தன. அன்றைய தினம் அங்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தருக்குள் அந்தக் கள்வனே இறையருளுக்கு உட்படுத்தப்பட்டான்.


இவ்விரு ஞானிகளதும் வேறுபட்ட இக்கதைகளின் வெளிப்பாடு என்ன? இதன் மூலம் நாம் தெரிந்துகொள்வது யாது? இதனையிட்டு நாம் ஆழமாக சிந்திக்கவேண்டிய நிலையிலுள்ளோம். ஆத்திகம் என்பதும் நாத்திகம் என்பதும் இருநிலைப்பட்ட விளையாட்டுக்கள். உண்மையில் இவை எதுவுமே வெளிப்படுத்தத்தக்க உண்மையல்ல. சொல்லப்போனால் மனதின் உள்ளடக்கம் என்பதுவே பொருத்தமானதாகும். இங்கே உண்மையானது மனதின் உள்ளடக்கமாக ஒருகாலும் இருப்பதில்லை. மனதுக்குப் பின்னால் அதற்கும் அப்பால் வெகு தொலைவில் இருப்பதே உண்மையாகும்.

சொர்க்கமும் நரகமும் இரு வேறுபட்ட நிலப்பரப்புகளோ அன்றேல் இருவேறுபட்ட உலகங்களோ அல்ல. இவை இரண்டும் மன நிலைகளே. நம்மில் யாருமே நரகத்தின் உள்ளேயோ அன்றேல் சொர்க்கத்தின் உள்ளேயோ நுழையப்போவதில்லை. நம்மோடுதான் அவற்றை வைத்துக்கொண்டு செயல்படுகின்றோம். எங்கு சென்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கும் இத்தன்மைகளை உருவாக்கும் திறனை நாமே கொண்டுசெல்கின்றோம். தவறான அறிவுத் திறனும் தவறாக அறியும் திறனும் நம்மோடு கூடவே இருப்பதால்தான் இருப்பதை இல்லாததாகவும் இல்லாததை இருப்பதாகவும் நம்மால் கற்பனைபண்ணவும் முடிகின்றது - காணவும் முடிகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10.
# அறிவும் சிந்தனையும்

அறிவும் சிந்தனையும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவை. சிந்தனை ஊற்றுக்கண்ணென்றால் அறிவு அதில் பிரவாகிக்கும் ஊற்று. இதனை மறுபக்கத்திற்கு மாற்றியும் பார்க்கலாம். சிந்தனை அகப்புற நிலைகளில் மாறுபட்டுத் தோற்றமளிப்பதைப்போல அறிவானது நுண்ணறிவு, ஆயத்த அறிவு என வேறுபடும். நுண்ணறிவானது ஆயத்த அறிவுக்குள் முடங்குகின்றபோது அதன் உண்மைத் தன்மையின் வெளிப்பாட்டினை நம்மால் எளிதில் புரிந்துகொள்ள முடியாமலும் போகும். சொல்லப்போனால் நம்மில் வளர்ந்தவர்களைவிடச் சின்னக் குழந்தைகளே உண்மையோடு மிகவும் நெருங்கியிருக்கின்றார்கள். அதற்கான காரணம் இயல்பாகவே அவர்களிடம் காணப்படுகின்ற நுண்ணறிவாகும். அவர்களது மனக்கண்கள் எப்பொழுதும் களங்கமற்றவைகளாகவே இருக்கும். அவர்களது பார்வையில் எந்தக் கருத்துகளும் இருக்கமாட்டாது. பெரியவர்களாகிய நம்மிடம் காணப்படுகின்ற அவசரம்தான் அவர்களைப் பாதிக்கவைக்கின்றது. அவர்களுக்கு வேண்டாத ஆயத்த அறிவை அவர்களது மனதில் தகவல் திரட்டுக்களாக நாம்தான் வலிந்து வலிந்து திணித்துக்கொண்டிருக்கின்றோம்.

பொதுவாக ஒரு குழந்தையினுடைய ஏழு வயதுக்குள் அதற்குத் தேவையான ஐம்பது வீதமான அறிவை அக்குழந்தை பெற்றுவிடுவதாகவும் அதனது வாழ்நாளின் தேடுதலில் கிடைக்கும் மிகுதி ஐம்பது வீதமான அறிவும்கூட ஏழு வயதினுள் சேகரிக்கப்பட்ட அறிவின் அடித்தளத்திலேயே கட்டியெழுப்பப் படுவதாகவும் உலகின் தலைசிறந்த உளவியலாளர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்ணறிவினை விளங்கிக்கொள்ள பின்வரும் கதையினை நாம் உதாரணமாகக்கொள்ளலாம்.

ஒரு நாட்டில் ஒரு மன்னனிருந்தான். வாரத்திற்கு ஒருதடவை அதிகாலை வேளையில் அவன் நாட்டுவளப்பம் பார்க்கச் செல்வது வழக்கம். அரண்மனைச் சோதிடரும் அதற்கான சுபநேரத்தைக் கணித்துக் கொடுப்பார். ஒருநாள் அதிகாலை மன்னன் தனது உலாவை முடித்துக்கொண்டு காலை உணவை உண்ணத் தொடங்கினான். அப்போது மாம்பழம் ஒன்றினைக் கையில் எடுத்து அதனை கூரிய கத்தியொன்றினால் வெட்டினான். திடீரென அவனது இடதுகைச் சுட்டுவிரலின் நுனியைக் கத்தி துண்டாடிவிடவே ரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. உடனடியாக அரண்மனை வைத்தியர் அழைக்கப் பட்டு வைத்தியம் செய்யப்பட்ட பின்னர் மன்னன் சோதிடரை அழைத்து தனது விரல் துண்டாடப்பட்டதற்கான காரணத்தை வினவினான்.

சோதிடரோ மன்னவா, நீங்கள் இன்று காலையில் வெளியில் செல்லும்போது இன்ன இடத்தில் ஒரு சிறுவன் உங்களில் விழித்திருக்கின்றான். அதுவே தோசமாக உங்களுக்கு அமைந்து விட்டது. இனிமேலும் அச்சிறுவன் உங்கள் கண்களில் விழிப்பானாகில் இன்னும் பெரிய ஆபத்தை அது உண்டுபண்ணலாம் என எச்சரித்தான். உடனே மன்னன் அரண்மனைக் காவலர்களை அழைத்து அச்சிறுவனைப் பிடித்துவருமாறு கட்டளையிட்டான். காவலர்களோ சிறுவனைக் கையோடு பிடித்துவந்து மன்னன்முன் நிறுத்தினார்கள். ஏழ்மைத் தோற்றத்தில் காட்சிதந்த அச்சிறுவனைப் பார்த்து சினம்கொண்ட மன்னன் இன்று காலை உன்னில் விழித்ததால் என் விரல் போய்விட்டது. இனிமேலும் உன்னில் விழிக்க நேர்ந்தால் எனக்கு அது பேராபத்தில் முடியும். உனக்கு மரணதண்டனை அளிப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. ஏதேனும் சொல்ல விரும்புகின்றாயா? என மன்னன் கேட்டான். அதற்கு அச் சிறுவன் நிதானத்துடன் மன்னனின் முகத்தை உற்றுநோக்கியவாறு, அரசே இன்று காலை நீங்கள் என் முகத்தில் விழித்ததால் உங்கள் விரல் காயப்பட்டுவிட்டது. ஆனால் எங்களது மன்னவனின் முகத்தில் விழித்தால் எமது கஷ்டம் போய்விடும் என்று நம்பி நான் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாக உங்களது முகத்தில் விழித்தேன். இப்போது என் உயிர் போகப்போகிறதே. நான் என்ன செய்வேன். எனத் தேம்பித் தேம்பி அழத்தொடங்கினான். அதிர்ச்சியுற்ற மன்னன் உடனே சிம்மாசனத்தை விட்டு கீழே இறங்கிவந்து சிறுவனை அணைத்துக்கொண்டு அவனது புத்தி சாதுரியத்தைப் பாராட்டி அவனுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பிவைத்தான்.

இக்கதையின் மூலம் நாம் தெரிந்துகொள்வது என்ன? சோதிடரால் மன்னனுக்கு ஊட்டப்பட்ட ஆயத்த அறிவினை சிறுவனின் நுண்ணறிவு வெற்றிகொண்டு விட்ட தல்லவா? அறியாத ஒன்றினை அறிந்துகொள்ளவும் நிலைமைக்கேற்ப தெளிவினை எட்டவும் நுண்ணறிவால் மட்டுமே முடியும்.

வெளிப்படையாக அறிய முடியாததும் அளவுகடந்ததுமான ஒன்று நமது மனதுக்கு அப்பாற்பட்டு நிற்கின்றது. வரம்புக்கு உட்படாத அதன் நிகழ்வு வரம்புக்கு உட்பட்டு நிற்கும் மனதுக்குள் எவ்வாறு அடங்க முடியும்? இதற்கு ஒரு தர்க்கவாதம் நமக்குத் தேவைப்படுகின்றது. மேலே பரந்து விரிந்த வானத்தைப் பார்க்கின்றோம். அது எல்லையற்றதாகவே தெரிகின்றது. ஆனால் அந்த வானம் ஒரு குட்டைக்குள் பிரதிபலிப்பதை நம்மால் அவதானிக்க முடிகின்ற தல்லவா? குட்டைக்குள் பிரதிபலிப்பது பரந்த வானின் ஒரு சிறிய பகுதிதான் என்றாலும் அது முழுமையின் பகுதியாகவே இருக்கின்றது. முழுமையின் பகுதி என்பதால் இதுவும் முழுமைதானே?


பதஞ்சலி முனிவர் ஒரு கருத்தைக் கூறுவார். மனித மனம் கண்ணாடியைப் போன்றது. அது உண்மையை உணர்ந்துகொள்ளும் தெளிவினைப் அடைகின்றபோது எல்லையற்ற அந்த உண்மையானது அம் மனதில் பிரதிபலிக்கவேசெய்யும். ஆனால் அந்தப் பிரதிபலிப்பு உண்மையில் எல்லையற்றதல்ல. அது அதில் ஒரு சிறு பகுதியாகவோ அன்றேல் கீற்றாகவோதான் இருக்கும். அதனை ஒரு வாயிலாகக் கொண்டு படிப்படியாக மனதிலிருந்து விடுபட்டு பிரதிபலிப்பையும் தாண்டி எல்லையற்ற அந்த நிஜத்துக்குள் யாராலும் புகமுடியும். அதனோடு முழுமையையும் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே ஒரு கேள்வி எழுவது நியாயமாகவே தெரிகின்றது. ஒரு அர்ப்பமான மனதுக்கு எல்லையற்றதும் இறுதியற்றதும் நித்தியமானதுமான பரம்பொருளுடன் இணையமுடியுமா? என்பதே அக் கேள்வி. உண்மையில் மனம் என்பது எல்லையற்ற ஒன்றுதான். நாமே இதனை நமது எண்ணத்திற்கு ஏற்றாற்போல் பொய்யான கோடுகளால் எல்லைப்படுத்தி அர்ப்பமானதாக ஆக்கிவிட்டிருக்கின்றோம். மனமானது பரம்பொருளின் ஒரு சிறு பகுதியையே தொடர்புபடுத்தும் தன்மையைக் கொண்டிருப்பதால் முழுமையான அப்பரம்பொருளினை எவ்வாறு நம்மால் அடையமுடியும் என்ற சந்தேகம் நம்முள் எழச்செய்கின்றது. புறப்பார்வைக்கு இது நியாயமாகவும் படுகின்றது.

எனினும் இதற்கு ஈசாவாசிய உபநிடதம் தருகின்ற விளக்கம் சாலவும் பொருத்தமானதாகவே அமைகின்றது. "முழுமையிலிருந்து முழுமையைக் கழித்தால் முழுமையே மிஞ்சும். முழுமையுடன் முழுமையைக் கூட்டினாலும் அதே அளவிலேயே முழுமையிருக்கும்" இது எதைக் காட்டுகின்றது. ஒரு துளியே சமுத்திரம் என்பதுவும் சமுத்திரமும் ஒரு துளியே என்பதுவும்தானே அது. இதில் "பகுதியும் முழுமையும் ஒன்றுக்கொன்று சமனானது" எனும் தத்துவம் வெளிப்படுவது தெரியும். இப்போது பார்த்தால் கனவுத்தன்மையான எல்லைக் கோடுகள் அகலவும் முழுமையுடன் ஒன்றாகிவிடவும் மனதால் முடிகின்றதல்லவா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11.
# மனதும் புத்தியும்

இந்தப் பிரபஞ்சப் படைப்பில் எதுவுமே மனிதனுக்கு எதிரானதல்ல. நமது செயல்பாடுகளால்தான் ஆக்க பூர்வமானதாகவோ அன்றேல் அழிவுபூர்வமானதாகவோ அவை மாறுகின்றன. நமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு அவையாவும் அமையவேண்டும் எனும் எண்ணமே நம்மைப் பலவீனப்படுத்து கின்றது. கிடைத்ததை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலை வருகின்றபோது தவிப்பும் வந்துவிடுகின்றது. அதனை எதிர்க்கவேண்டும் என்ற எண்ணமும் வருகின்றது. நமது விருப்பப்படியே எல்லாம் அமையவேண்டும் எனும் நமது நிலைப்பாடானது மற்றவர்கள் தங்களைத் தாங்களே ஏய்த்துக்கொள்ளவேண்டும் எனும் போக்கில் நம்மால் உருவாக்கப்படுபவை எனும் உண்மையை நாம் உணர மறுக்கின்றோம். இது ஒரு விதமான அகங்காரம் இல்லையா? அகங்காரம் என்பது எவ்வாறு தோற்றம் பெற்றாலும் முடிவில் அது அடிவாங்கியே தீரும். அப்போது நாம் கொண்டிருக்கின்ற தவறான நம்பிக்கைகளெல்லாம் தகர்ந்துபோய்விடும். இதனால் ஏற்படுகின்ற உளப்பாதிப்பு உள்ளிருந்தவாறே நம்மைக் கீறிக்கிழித்து முடிவில் நாம் உபயோகமில்லாதவர்களாகவே ஆகிவிடுவோம்.

எதிர்பார்ப்புக்கள் என்பவை மிகுந்த ஆபத்தானவை. அவற்றை நாம் நமது மனத்தில் வளர்த்துக்கொண்டே செல்லச் செல்ல ஏமாற்றங்களும் எதிர்பார்ப்புகளுடன் கூடவே வந்துகொண்டுதான் இருக்கும். சிறி அரவிந்தர் ஒரு கருத்தை வலியுறுத்திக் கூறுவார். நம்மில் யாரும் நமது விருப்பம்போல் செயல்படுவதற்கோ அன்றேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பம்போல் செயல்படத்தக்க ஒரு உலகை உருவாக்கவோ இங்கு வரவில்லை. மனிதனது அஞ்ஞானப் போக்கினால் இப்பிரபஞ்சம் உருச்சிதையாமலும் பிராண ஆசையினால் அது வக்கரித்துப் போய்விடாமலும் இறைவனது சித்தப்பிரகாரம் உண்மையை வெளிப்படுத்தக்கூடிய உலகினைச் சிருக்ஷ்டிக்கவே நாம் இங்கு பிறவி எடுத்துள்ளோம்.

இப்பிரபஞ்சமானது உண்மையில் பரிணாமத்தின் பௌதீகக் களமாகும் மனம், பிராணன், அதிமனம், சச்சிதானந்தம் ஆகிய எல்லாத் தத்துவங்களும் புவி உணர்வில் உள்ளடங்கிக் கிடக்கின்றன. சொல்லப்போனால் முதலில் சடப்பொருளே நல்ல அமைவோடு விளக்கம் பெறுகின்றது. அதன்பின் பிராணன் பிராண லோகத்திலிருந்து கீழிறங்கி சடத்திலடங்கி பிராண தத்துவ வடிவும் அமைப்பும் செயலும் கொடுக்கின்றது. செடி கொடிகள், விலங்குகள் என்பவற்றின் சிருக்ஷ்டிக்குப் பின்னர் மனித சிருக்ஷ்டிப்பானது நிகழ்கின்றது.

மனித சிருக்ஷ்டிக்கு மிக முக்கியமாக மனோ லோகத்திலிருந்து மனமானது இறங்கிவரவேண்டியதாகின்றது. அரவிந்தரின் இக்கூற்றின் அர்த்தப்பாடு யாதெனில் மனம் என்பதுவே ஏனைய சிருக்ஷ்டிப்பு களிலிருந்து மனிதனை வேறாக்கிக் காட்டுகின்றது என்பதாகும்.


பொதுவாக நாம் நம்மைப் பற்றி அறியாதவர்களாகவே இருக்கின் றோம். நமது ஜீவனின் பகுதிகளை வேறுபடுத்தி அறிந்துகொள்ளவும் நமக்குத் தெரியவில்லை. மனமும் புத்தியும் வெவ்வேறானவை என்பதை நம்மால் உணரமுடிவதில்லை. இரண்டையும் மனமென்றே குழம்பிப்போய்விடுகின்றோம். நம்மைச் சூழவுள்ள இயற்கையின் பகுதிகளை உணரவும் அவற்றினை இயக்குகின்ற சக்திகளை அடையாளம் கண்டுகொள்ளவும் நமது அறிவு முயலாமைக்கு இதுவே மூலகாரணமாகி விடுகின்றது.

புத்தியென்பது வெளியிலிருந்து சேகரிக்கப்படுவதே. அது எந்தத் தரத்தில் நமக்குக் கிடைக்கின்றதோ அந்தத் தரத்தில்தான் அதனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பாடும் அமையும். எனினும் நமது உள்ளுணர்வு என்பது புத்தியைப் போன்ற ஒன்றல்ல. புத்தியைவிட உயர்வாகவும் தூய்மையோடும் அதன் வெளிப்பாடு அமையும். அதன்போது அது வெளி அழுக்குகளால் என்றும் அசிங்கப்படமாட்டாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12.
# போக வாழ்வும் காம நெறிமுறைகளும்

மனிதன் முழுமையை நோக்கிப் பயணிப்பதற்கு யோக முறைகள்தான் உரிய மார்க்கம் என்றில்லை. இயற்கையோடு இயைந்த போக வாழ்வும் ஒரு முக்கிய நெறிமுறைதான். இக்கருத்து இன்று நேற்று தோன்றியதல்ல. தந்திர மார்க்கம் என்று சொல்லப்படுகின்ற வழிமுறைகளும் அதற்கான மார்க்கமேயென அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். வாழ்க்கை குறித்த தந்திர நிலைப்பாடானது துறவறத்துக்கு எதிரானதாகவும் கற்பிதங்கள் எனப்படும் ஊகங்களுக்கு மாறுபட்டும் இப்போக வாழ்வின் நிறைவில் - வாழ்வியலில் விடுதலையை எட்டவும் அதன் பின்னால் முழுமையை அடையவும் உகந்த மார்க்கம் எனவும் போதிக்கின்றது.

வாழ்க்கையைத் துறப்பதற்குப் பதிலாக வாழுகின்ற நிலையில் மனிதனுக்கு ஏற்படும் பற்றுக்கள், அபிலாசைகள், உணர்வு நிலைகள் அனைத்தையுமே ஏற்றுக்கொண்டு செயல்படும் ஒரு மார்க்கமாகவும் இதனைக் குறிப்பிடலாம். காணமுடியாத ஒன்றைக் கண்டறிவதற்குப் பதிலாக ஏலவே அறியப்பட்டதை - உணர்வுபூர்வமாக அனுபவிப்பதை இலக்காகக்கொண்டு அதனைக் கண்டறியத் தந்திர மார்க்கம் வழி விடுகின்றது. எனவேதான் "மனிதனின் போகத் துய்ப்பிற்கு இப்பிரபஞ்சத்தில் தரப்பட்டது எதுவோ அதுவேதான் எங்கும் உள்ளது. இங்கு எது தரப்படவில்லையோ அது எவ்விடத்திலுமே இல்லை" என விஸ்வசார தந்திரம் குறிப்பிடுகின்றது.

தந்திர மார்க்கத்தை ஆழ்ந்து பார்க்கின்றபோது அது போக வாழ்வின் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவாகவும் பரிசோதனை முறைகளைக்கொண்ட களமாகவும் மனிதனது பிரக்ஞைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல்களையும் அகல்வித்து அதனூடாக உயிர்ப்பாற்றலை உணர்ந்து செயல்படத்தூண்டும் பேராற்றலைக் கொண்டதாக விளங்குகின்றது. பிரபஞ்சத்தின் பரிணாமமும் அதன் வெளிப்பாடும் பிரபஞ்ச ஒடுக்கம், இறை நம்பிக்கை, வாழ்வின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் நெறிமுறைகள், அதனோடு கூடிய தியானங்கள் என்பவற்றின் முடிவாக "முழுமையை அடைதல்" எனும் உள்ளடக்கத் தன்மையைக் கொண்டுள்ளமையால் இயற்கையான கருவள வழிபாட்டின் *(Fertility Cult)* முழுத்தன்மையும் வெளிப்படவே செய்கின்றது.

இதில் சொல்லப் போனால் உண்மை என்பது முற்றொருமை யுடையது என்பதே இப் போதனையின் தன்மையாகத் தெரிகின்றது. சிவன் - சக்தி என்ற பிரபஞ்சப் பிரக்ஞையாக அதன் வெளிப்பாடு தோற்றம் பெறுவதால் இது இயற்கை நிலையின் மறுவடிவாகவும் பார்க்கப்படுகின்றது. சார்பு நிலையில் மாத்திரமே பிரித்தறியப்படத்தக்கதான ஆணும் பெண்ணுமான சிவனும் சக்தியும் அதன் முற்றொருமை நிலையில் "ஒன்றே" என்பதையும் உயர்நிலைத் தத்துவத்திலும் இதுவே அடக்கம் என்பதையும் முதலில் நாம் உணர்ந்துகொள்ளவேண்டியுள்ளது.[*] விஞ்ஞானக் கோட்பாடுகள்கூட இதனை வேறுபடுத்திப் பார்க்கவில்லை. பிரபஞ்சப் படைப்பாகிய அனைத்து உயிர்களுமே ஈரினத் தன்மை உடையவையே என்பதையே அவை விளக்கிநிற்கின்றன.

தந்திர மார்க்கத்தின் வெளிப்பாட்டினை யந்திரங்கள் கொண்டுள்ளமையை நாம் பார்க்கின்றோம். உண்மையில் இவை அதற்கான கருவியாகவே தென்படுகின்றன. கணித சாஸ்திரத்திற் குள்ளும் இதனை நாம் பொருத்திப்பார்க்கமுடியும். இந்த இயந்திரங்கள் பொதுவாகக் கேத்திரகணித உருவரைகளையே கொண்டுள்ளன. அரூப வரைகள் எனக் கருதப்படும் புள்ளி, நேர்கோடு, சதுரம், முக்கோணம், வட்டம் என்பனவற்றின் பொருத்தமான இசைவிணக்கச் சமநிலை வெளிப்பாட்டினை இவை தருகின்றன. ஆழ்ந்து நோக்கினால் இவை உண்மையில் பிரபஞ்சப் பிரக்ஞையின் வெளிப்பாடே என்பதை உணரமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட வரைவைக்கொண்ட யந்திரம் இறை தத்துவத்தின் ஒன்றுபட்ட நிலையை வெளிப்படச் செய்கின்றது. இருநிலை ஒன்றிய தத்துவத்தின் அடையாளத்தை இரு முக்கோண வரைவுகள் சுட்டி நிற்கின்றன. இதில் மேல் நோக்கிய முக்கோணம் ஆண் தத்துவத்தையம் *(Male Principle)* கீழ் நோக்கிய முக்கோணம் பெண் தத்துவத்தையும் *(Female Principle)* குறிப்பதாக அமையும். யந்திரத்தின் தொடக்கப் புள்ளி பூச்சியம் என்ற மகா பிந்துவாகும். யந்திரத்தின் நடுவில் காணப்படுகின்ற நேர்வரைவிலான புள்ளிகள் அண்ட வெளியினையும் காலத்தையும் *(Space and Time)* குறிப்பதாக அமையும். முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் நடுநிலை *(Neutral)*, இணைநிலை *(Positive)*, எதிர்நிலை *(Negative)* என்பவற்றை விளக்கும்.

இரு முக்கோணங்களது பிணைப்பும் பிரபஞ்சப் படைப்பிற்கான சிவன் - சக்தி சேர்க்கையை சுட்டிநிற்கின்றன. தந்திர ராஜதந்திரம் என்ற நூல் தரும் விளக்கத்தின்படி 960 வகையான யந்திரங்கள் பிரபஞ்ச தத்துவங்களை வெளிக்கொணர்வதோடு போக வாழ்க்கையினூடே இறையென்ற முழுமையுடன் கலக்கவேண்டிய மார்க்கத்தைப் போதிப்பதாக அமையும்.

போக வாழ்வும் காம நெறிமுறைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டேயுள்ளன. போக வாழ்வை தந்திர மார்க்கமானது தத்துவார்த்த நிலை நிறுத்தலுக்குள் வைத்துப் பார்க்கும் தன்மையைக் காமசூத்திரம் கொண்டிருக்காவிட்டாலும் இரண்டினதும் இறுதிக் கோட்பாட்டினை நாம் ஆராய்ந்துபார்க்கின்றபோது அவை ஒன்றுக்குள்ளேயே அடக்கமாகிவிடுவது தெரியவரும்.

உயிரினத் தோற்றத்தின் அடிப்படைத் தன்மை என்னும் தூண்டுதல் உணர்வின் ஊற்றுக்கண்ணே காம நெறிமுறையின் தோற்றப்பாடாகவும் அமையும். ஆரம்பகால மனிதனின் இத்தன்மையில் விலங்கினத் தன்மையின் ஒத்திசைவே அமைந்திருந்தது. வரையறைகளும் கற்பு நெறிமுறைகளும் ஒழுக்கக் கோட்பாடும் காலத்தின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே எழுந்தவை. அவ்வளர்ச்சித் தன்மையிலும்கூட ஒரு பொதுத் தன்மையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதகுலம் இதுவரை எட்டவில்லை. இடத்துக்கு இடம் சமூகத்திற்குச் சமூகம் என மாறுபட்ட தன்மையினையே இவை கொண்டிருக்கின்றன.

மகா பாரதம், இராமாயணம் போன்றவை நாம் பெருமைப்பட்டுக்கொள்ளும் மகா காவியங்களாகும். உடலுறவு, திருமண உறவு தொடர்பான பல தகவல்களை மகா பாரதம் திரட்டுக்களாகக் கொண்டிருக்கின்றது. நெறி முறைகள் சரியாக வளர்ச்சியடையாத காலத்தின் வெளிப்பாடாக அவற்றைக் கருதமுடியும். பராசர முனிவர் ஆற்றைக் கடக்கும் போது படகோட்டியின் மகள் சத்தியவதியுடன் உடலுறவு கொள்கின்றார். பின்னர் சத்தியவதி சந்தனுவை மணம் செய்து அவனின் ராணியாகின்றாள். அக்காலத்தே ஒரு பெண் தனது மாதவிடாய் நிலையில் தனக்கு விருப்பமான ஆடவனைத் தொடர்புகொள்ளல் என்பது ஒரு ஒழுக்க நெறியாகவே அமைந்திருந்திருக்கிறது. இதை மறுக்கும் எந்த ஆண்மகனும் கருக்கலைப்பு என்னும் மகா பாவத்தினைப் புரிந்தவனாகவே கருதப்படுவான். சூர்மிஷ்டா யயாதியையும் உலூபி அர்ச்சுனனையும் உடலுறவுக்கு அழைப்பது இத்தன்மையானதே. உத்தங்கன் தனது குருவின் மனைவியையும் சந்திரன் பிரகஸ்பதியின் மனைவி தாராவதியுடன் உறவுகொள்வதும் மகாபாரதத்திலே வருகின்ற நிகழ்வுகள். அகலிகையினது கதையும் இத்தன்மையானதே. அக்காலகட்டத்தின் திருமண நெறிமுறைகளின் சீரழிவினை மகா பாரதத்தினைப்போல் தெளிவுபடச் சொல்வது எதுவுமில்லை என்றே சொல்லவேண்டும். கன்னிப் பெண்ணான குந்திதேவி கர்ணனைப் பெற்றெடுத்ததுவும் கங்கைக்கும் சந்தனுவுக்கும் பீஷ்மர் பிறந்ததுவும் திரௌபதை ஐவரை மணம்புரிந்ததுவும் மந்ர தேசத்திலே கட்டுப்பாடற்ற உடலுறவுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தமையும் மகாபாரதம் காட்டும். பிரம்மா தனது மகனின் மகளைத் திருமணம் செய்வதையும் இங்கு பார்க்கின்றோம்.

ஆரம்பத்தில் எழுந்த தசரத யாதகக் கதையில் இராமனுக்குச் சகோதரியாகச் சொல்லப்படுகின்ற சீதை பின்னர் வந்த வால்மீகியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணக் கதையில் மனைவியாகக் சித்தரிக்கப்படுகின்றாள். பிற்பட்ட காலத்தே இக்காவியம் கம்பரால் எழுதப்பட்டபோது கற்பொழுக்க நெறிமுறைகளுக்கும் சமூக வளர்ச்சித் தன்மைக்கும் ஏற்றவாறு நெறிப்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம். உடன் பிறந்த சகோதரர்களின் திருமண பந்தத்தால் சாக்கிய வம்சம் உருவானதை புத்தசர்யா என்ற நூல் கூறுகின்றது. இதையேதான் மகாவம்சம் போன்ற சிங்கள நூல்களும் சிங்கள இனத்தின் தோற்றுவாயாகக் கொள்கின்றது.

இன்றும் கூட இந்திய நாட்டுக்குள்ளேயே திருமண நெறிமுறைகள் மாறுபட்டுள்ளமையை அவதானிக்கமுடியும். வட இந்தியாவில் மாமன் மகளையும் அத்தை மகளையும் சகோதரியாகக் கொள்ளும் நிலையில் தென்னிந்திய மரபு திருமணம் புரிவதில் இவர்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றது. தமிழ் நாட்டுத் தமிழரிடையே மாமன் - மருமகள் திருமண உறவு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் ஈழத்தில் அது மறுக்கப்படுகின்றது. ஒரே நாட்டுக்குள் மாத்திரமன்றி ஒரே இனத்துக்குள்ளும் இத்தகைய வேறுபாடுகள் தோற்றம்பெற்றுள்ளமை நம்மை ஆச்சரியப்படுத்தவே செய்யும்.

பொதுவாகக் காலத்துக்குக் காலம் நாட்டுக்கு நாடு நெறிமுறைகள் மாறுபட்டிருக்கும் நிலையில் மதவாதிகளின் பண்பாட்டு ஒழுக்க நெறிமுறைகளைக்கொண்ட ஆன்மீகக் கருத்துக்களால் இவற்றை நிலையான விதிமுறைகளின்கீழ் வரையறை செய்யமுடியாமல் போனது ஏன் என்ற கேள்வி எழுவது நியாயமாகவே தென்படுகின்றது. மறுபக்கத்தே விஞ்ஞானக் கோட்பாடு சமூக ஒழுக்க நெறிமுறைகளுக்கு அப்பால் விலகிச் செல்வதாகப் பொதுவான கருத்து முன்வைக்கப்பட்டும் ஏற்றக்கொள்ளப்பட்டும் உள்ளமையால் இது குறித்த கேள்வி எழ வாயப்பில்லாமலே போய்விடுகின்றது.

உண்மையில் இவையாவும் எதனைக் காட்டுகின்றன. நாம் உண்மை - பொய் குறித்துப் போதுமான வளர்ச்சியை எட்டவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனையும் நல்லது கெட்டது குறித்து சரியான தெளிவினைப் பெறவில்லை என்பதையுமே. காம நெறிமுறைகள் பற்றிய தன்மை அல்லது எண்ணம் நேர் எதிராகவும் இருந்திருக்கின்றது என்பதே இதன் தெளிவு. பொதுவாகப் பார்த்தால் அன்றும்சரி இன்றும்சரி இவ்வுணர்வானது இயற்கையின் நெறிமுறைகளோடு ஒன்றுபட்டதும் வேண்டப்பட்டதுமாகவே இருந்து வந்திருக்கின்றது.

நமக்குள் எப்போதுமேயிருக்கும் அற்புதமான எண்ணங்களை நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவை நமது அமைதியான ஒழுக்க விதிகளுக்கு எதிரானவையாய் ஆகிவிடுமோ என்று நாம் பயந்துவிடுகின்றோம். இதற்கு மாறாக ஏதேனும் முறைகள் அல்லது பயிற்சிகள் என்ற முரண்பட்ட நெறிமுறைகளால் அமைதியை உண்டாக்க முயல்வதுதான் தொந்தரவுகளை நமக்குள் தோற்று விக்கின்றது. நாம் அமைதியைப் பற்றிப் பேசலாம். மனதில் ஒரு கட்டுப்பாட்டு நிலையை வலிந்து உருவாக்கி நமக்கு நாமே அமைதியாக இருப்பதுபோல் செர்ல்லிக்கொள்ளலாம். உண்மையில் இது அமைதியில்லை. நமது எண்ணங்களுக்கு எதிரான ஒரு வன்முறை. உதாரணத்திற்கு நாம் பின்பற்றும் இந்துமத வழிபாட்டில் முக்கியப்படுத்தப்படுகின்ற லிங்க வழிபாட்டுத் தத்துவமும் சரி பலிபீட வழிபாட்டுத் தத்துவமும் சரி பிரபஞ்சப் படைப்புக் கோட்பாட்டுக்கு முன்னுரிமையளித்தே செல்லுவதை நாம் கவனத்தில்கொள்ளவேண்டும்.

இந்தியத் தத்துவஞானி யு.ஜி. கிருஷ்ணமூர்த்தி இதுகுறித்து ஒரு கருத்தினை முன்வைக்கின்றார். மதவாதிகள் நினைப்பதுபோல் மனமானது இறந்த நிலையில் என்றுமே இருப்பதில்லை. நான் அமைதியாக இருக்கிறேன் என்றோ ஆழமான மௌனத்தில் இருக்கிறேன் என்றோ அது ஒருபோதுமே சொல்லிக்கொள்வதில்லை. மனது எரிமலை போன்ற இயல்புடையது. அது எப்பொழுதும் கொப்பளித்துக்கொண்டே இருக்கும். ஆகவே இயல்பான நமது எண்ணங்களுக்கு கடிவாளம்போட முற்படுவது நம்மை நாமே அழித்துக்கொள்வதற்கு ஏதுவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13.
# வெற்றியும் தோல்வியும்

வெற்றியென்று ஒன்று இருக்கும்போது அங்கே தோல்வியும் இருக்கும். எதிர்பார்ப்பு உள்ளபோதுதான் ஏமாற்றம் தெரியவரும். ஏமாற்றமே எரிச்சலையும் தோற்றுவிக்கும். இதுவே வாழ்வினுக்கு வேகத்தடையாகவும் அமைந்துவிடும். காத்திருக்கும் பொறுமை நமக்கு இல்லையென்றால் பதட்டப்பட்டவர்களாகத் தோல்விக்குள் தொடர்ந்தும் தள்ளப்பட்டுக்கொண்டேயிருப்போம்.

உண்மையில் சொல்லப்போனால் வெற்றியால் நாம் வசீகரிக்கப்படும்போதெல்லாம் தோல்வி என்னும் மனப்பயம் பிரேமை வடிவில் பின்னாலிருந்து உறுத்திக்கொண்டுதா னிருக்கும். இதனை ஆழ்ந்து நோக்கினால் ஒரு நாணயத்தின் இருவேறு பக்கங்கள்தான் வெற்றியும் தோல்வியும் என்பது தெரியவரும். ஏதேனும் ஒரு பந்தயத்தின்போது ஒரு நாணயத்தை மேல்நோக்கிச் சுண்டிவிடும் நாம் அது நிலத்தினில் விழுவதற்கான ஒருசில வினாடிகளில் எத்தனை தடவை ஆடிப்போய்விடுகின்றோம். நம்மோடு போட்டியிடப்போகின்றவர் எவ்வளவுதான் நம்மோடு நெருக்கமானவராக இருந்தாலும் நம்நெஞ்சில் ஏற்படும் படபடப்பு உடனடியாக நம்மைவிட்டு அகலமாட்டாது. ஏனெனில் இங்கே ஒரு எதிர்பார்ப்பை நமது மனமானது நிலைநிறுத்தி வைத்திருப்பதுவே. நாம் ஒருவருடன் நிலையான அன்பைப் பேணவேண்டுமானால் நமக்கு வேண்டிய நெருக்கமானவர்களிடம் எந்தவொரு எதிர்பார்ப்பினையும் உண்மையில் வளர்த்துக்கொள்ளக்கூடாது. நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இல்லாமல் நமது வாழ்க்கையைக் கொண்டுசெல்வது நம்மால் முடியக்கூடிய காரியமா? இது எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் சாத்தியமாகும்? இவ்வாறெல்லாம் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழலாம். இக்கேள்விகள் உண்மையில் நியாயமாகவே தென்படுகின்றது. எனினும் இங்கே ஒரு தாய்க்கும் அவள் பிள்ளைக்கும் உள்ள உண்மையான பிரியமே இதற்கு விடையாக அமையும். தாயினது உண்மையான அன்பில் தீவிரம் இருக்குமே தவிர எதிர்பார்ப்பு என்பது இருக்கவேமாட்டாது. இதற்குப் பல கதைகளை உதாரணப்படுத்தலாம். அதில் ஒன்று தாயினது எந்தவித எதிர்பார்ப்புமற்ற உணர்வுகளையும் மகனின் முற்றுமுழுதான எதிர்பார்ப்பினையும் தெளிவுபடுத்தும்.

ஒரு தாய்க்கு ஒரு மகனிருந்தான். அவனது சிறுவயதில் தந்தை இறந்துவிட அவனுக்கு எந்தக் குறையுமில்லாமல் அத்தாய் அவனை வளர்த்துவந்தாள். அவன் எது கேட்டாலும் அத்தாய் எப்படியோ அதனைப் பெற்றுக் கொடுத்துவிடுவாள். அவன் பெரியவனானபின்னும் அவனைப்பற்றிய சிந்தனையிலேயே அத்தாய் தொடர்ந்துமிருந்தாள். இப்போது அவன் ஒரு பெண்ணைக் காதலிக்கத்தொடங்கினான். அவனது காதலி எதைக்கேட்டாலும் தாயிடம் அதனைக்கூறி அவள்மூலம் அவன் அதனை நிறைவேற்றிவிடுவான். தனது தாய் தான் எதைக்கேட்டாலும் தவறாமல் அதனை நிறைவேற்றி வைத்துவிடுவதாக தனது தாயைப்பற்றித் தன் காதலியிடம் ஒருநாள் அவன் பெருமையாகக் கூறினான். அதற்கு அவனது காதலி, " ஓ அப்படியா சரி எனக்கு உங்களது அம்மாவின் இருதயம் வேண்டும். எடுத்துக்கொண்டு தருவீர்களா" என விளையாட்டாகக் கேட்டுவிட்டாள். அதைக்கேட்ட அவனோ ஓடோடிச் சென்று தனது தாயிடம் அவளது இதயத்தை தருமாறு கேட்டுவிட்டான். எதையும் பற்றிக் கவலைப்படாத அத்தாய் மறுவார்த்தை பேசாமல் தனது இதயத்தைப் பிடுங்கியெடுத்து அவன் கையில் வைத்ததும் அவளது உயிரும் பிரிந்துபோனது. தாயின் இதயத்தை கையில் தாங்கியபடியே அவன் காதலியின் வீடு நோக்கி ஓடத்தொடங்கினான். நடுவீதியில் அவன் கால்தடுக்கி விழுந்தபோது அவ்விதயமும் வீதியில் விழுந்து உருண்டது. அந்த நிலையிலும் அது ஒலித்த வார்த்தைகள் "மகனே இப்போது நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வேன். வீதியில் விழுந்துகிடக்கும் உன்னைத் தூக்கிவிட முடியாத பாவியாகிவிட்டேனே" என்பதுதான். இதில் தாய்மையின் பெருமையூடாக ஒரு பெரும் தத்துவமே வெளிப்படுவது தெரிகின்றதல்லவா?

மேற்சொன்ன கதை ஒரு கற்பனை வடிவமாகத் தென்படும் நிலையில் ஹிட்லரின் ஆட்சியின்போது நிகழ்ந்த ஒரு உண்மைச் சம்பவம் நம்மை அதிசயிக்க வைக்கின்றது. ஹிட்லரின் ஆட்சியில் அவனது கருத்துக்கும் செயல்பாட்டிற்கும் எதிரானவர்கள் ஆயிரமாயிரமாக ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கப்பட்டார்கள். கைதிகளாகப் பிடித்து அடைக்கப்பட்டவர்களில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் பகுதி பகுதியாக குறிப்பிடப்படும் திகதிகளில் கொலைசெய்யப்படுவதும் வழமையாகவிருந்தது. குறித்த திகதியில் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒரு இளைஞன் , றிச்சட் எனும் பாதிரியாருடன் அடைக்கப்பட்டிருந்தான். பாதிரியாரை முதன்முதலில் சந்தித்தபோது அவன் தனது குடும்பத்தின் ஏழ்மை நிலை குறித்தும் எதுவும் செய்யமுடியாத தனது பெற்றோரையும் தனது சகோதரர்களையும் தானே உழைத்துக் காப்பாற்றி வந்ததாகவும் இதனால் ஹிட்லரின் படையில் சேர தான் மறுத்துவிட்டதாகவும் இதன் காரணமாக தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட தாகவும் பாதிரியாரின் கரங்களைப் பற்றிக்கொண்டு அழத்தொடங்கினான். எதையோ பறிகொடுத்தவனைப்போல தனிமையிலிருந்து சிந்தித்துக் கொண்டிருக்கும் அவனுக்காக நாளாந்தம் பாதிரியார் ஆண்டவரிடத்தில் மன்றாடுவதையும் அவனுக்கு ஆறுதல் கூறுவதையும் வாடிக்கையாகக்கொண்டிருந்தார். ஒரு சில நாட்களின் பின்னர் ஒவ்வொரு அறையாக வந்த சிறைக் காவலர்கள் அன்றைய தினம் மரணதண்டனை நிறைவேற்றப்படு பவர்களின் பெயர்ப் பட்டியலைப் படிதத்போது அதில் அவ்விளைஞனின் பெயரும் இடம்பெற்றிருந்தது. அதில் தனது பெயர் இல்லாதிருப்பதைக்கண்டு மகிழ்ச்சிகொண்ட பாதிரியார் சிறைக்காவலர்கள் அறையைவிட்டு வெளியேறியதும் அவ்விளைஞ னைக் கட்டியணைத்ததோடு உடனடியாக தனது கைதி அங்கியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழட்டி அவ்விளைஞனின் உடலில் அணிவித்துவிட்டு அவனது அங்கியைத் தானணிந்துகொண்டு தனது வலக்கரத்தை அவனின் தலையில் வைத்து "எதற்கும் கவலைப்படாதே கர்த்தர் உன்னைக் காப்பாற்றுவார்" எனக்கூறிவிட்டு மரணதண்டனை நிறைவேற்றப்படும் இடம்நோக்கி நடக்கத்தொடங்கினார். அந்த இளைஞனின் பெயரில் அவர் மரண தண்டனையையும் ஏற்றுக் கொண்டார். சிலநாட்கள் கழிந்தன. என்ன ஆச்சரியம். போர்முனையில் நாஜிப்படை தோல்வியடைய ஹிட்லரும் தற்கொலை செய்யவேண்டியதாயிற்று. இதில் உயிர்தப்பிய அவ்விளைஞன் வாழ்நாளெல்லாம் பாதிரியாரின் நினைவிலேயே மூழ்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது. இங்கே எவ்வித எதிர்பார்ப்புமற்ற ஒரு தாயின் நிலையில் பாதிரியாரின் செயல்பாடு தென்படுகின்றதல்லவா?

எதிர்பார்ப்பு எதுவுமின்றி தீவிரமாக ஒன்றினைச் செயல்படுத்தவேண்டுமெனில் அதிலே நாம் பிரியமாயிருக்க வேண்டும். உண்மையில் தோல்வியென்று எதுவுமே இருப்பதில்லை. நமது எதிர்பார்ப்பின் தவறுதல் தோல்வியென்றால் வாழ்வே அர்த்தமற்ற ஒன்றாகிவிடும். நமது முயற்சிக்கேற்ற முடிவுதான் நமக்கான பெறுபேறாக அமையும். தோல்விநிலையென்று நமது மனம் ஒன்றைக் கருதும்போது அங்கே நமது அறிவும் பற்றாக்குறையுடன் இருப்பதாகவே பொருள்கொள்ளவேண்டும். நமது மன எல்லைகளை விரிவுபடுத்தவே நாம் முடிந்தவரை முனைய வேண்டும். அவ்வாறு அவை விரிவுபடும் நிலையில் இதுகுறித்து நாம் கவலையடையவேண்டிய அவசியம் எழ வாய்ப்பில்லாது போய்விடும். தத்துவஞானி எமர்சன் என்பவர் இது குறித்த கருத்தொன்றினை முன்வைக்கின்றார்.

ஒவ்வொரு மிகுதியான நிலையும் ஏதாவது ஒரு குறைபாட்டினையே தோற்றுவிக்கும். எந்தவொரு இனிமையும் தன்னுள் கசப்பையும் கொண்டதாகவேயிருக்கும். இதனை மறுபக்க மாகவும் திருப்பிப் பார்க்கலாம். அறிவானது விரிவடைகின்றபோது அறிவீனமும் அதன் பக்கத்தில் அமர்ந்துதான் இருக்கும். அதனால்தான் அறிவினை நம்மால் புரிந்துகொள்ளமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை என்றுமே சமநிலைப் பேணலையே கொண்டிருக்கின்றது. மேலதிக சேர்வினங்கள் எதனையும் அது சேர்த்துக் கொள்வதை ஏற்காது புறம் தள்ளிவிடும். விதிவிலக்குகளையும் பிரத்தியேக உரிமைகளையும் இயற்கை என்றுமே விரும்புவதில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகும்போதெல்லாம் அதனைச் சீர்செய்யவே இயற்கை முற்படும்.

நமது மனம் சமநிலையிலிருந்தால் தேவையற்ற எந்த எதிர்பார்ப்புமே வரப்போவதில்லை. வெற்றியை நாம் எதிர்பார்க்காதவிடத்து தோல்வி பற்றிய பயமும் வரப்போவதில்லை. பதற்றம் இல்லாத நிலையில் நிற்கும்போது நமது கவனமும் சிதறடிக்கப்படப்போவதில்லை. கவனம் சிதறடிக்கப்படவில்லை யென்றால் செயல்பாட்டில் மகிழ்ச்சி தானாகவே எழும். அதில் முழுத்திறமையும் வெளிப்படுதல் தெரியவரும். அவ்வாறு முழுத்திறமையும் வெளிவருகின்ற நிலையில் அதுவே நமது வெற்றியாக அமைந்துவிடும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14.
# ஆவிபற்றிய சிந்தனைகள்

இப்பிரபஞ்சத்திலே உயிர்கள் தோன்றுவதும் மறைவதும் இயற்கை நியதிக்குட்பட்ட செயலாகும். பிறந்தவர் இறப்பதுபோல் இறப்பவர் பிறப்பதையும் ஒரு சாதாரண நிகழ்வாகக் கருதுகின்ற நிலையில் ஆவிபற்றிய சிந்தனைகள் எழவே செய்யும். இது பற்றிய ஆராய்ச்சி மிக நீண்ட காலமாகவே இவ்வுலகில் நிலவிவருகின்றது. உடலை இயக்குவது ஆவியுடன் கூடிய உயிர் எனவும் உயிர் நீங்கினால் உடல் கட்டையாக அசைவற்ற தன்மையை அடைவதோடு உடலைவிட்டுப் பிரிந்து செல்லும் ஆவி மீண்டும் பிறவி எடுப்பதாகவோ அன்றேல் இறைவனுடன் சங்கமிப்பதாகவோ நம்பப்படுகின்றது.

ஆவியானது சாதாரண கண்களுக்குப் புலப்படாது என்பதால் ஆவி உண்டா? இல்லையா? என்ற ஐயப்பாடும் நீண்டகாலமாக இருந்தேவந்துள்ளது. எனினும் ஆன்மீகவாதிகளைப் பொறுத்தமட்டில் பொதுவாக ஆவிபற்றிய நம்பிக்கையாளர்களாகவே அவர்கள் இருந்துவந்துள்ளனர். பெரும்பாலான மதங்களும் இதே கருத்தினையே கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். உண்மையில் இவ்வுலக மக்களிலும் எண்ணிக்கையில் மிக அதிகமானவர்கள் இதே கருத்தையுடையவர்களாகவே உள்ளனர். ஆவிபற்றிய கருதுகோள் பன்னெடுங்காலமாக இருந்துவந்துள்ளமை சரியேயெனினும் அமரிக்காவின் எடன் என்ற பெண்மணியே 1852ல் இதனை முதன் முதலாக உலக அரங்கில் நிலைநிறுத்தியவராகின்றார். அதன்பின் இதற்கு விஞ்ஞான அணுகுமுறைகள் தேவையெனக் கருதிய சேர் வில்லியம் குருக்ஸ் என்ற பிரித்தானியர் 1869ல் அறிஞர்கள் பலரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துக்கொண்டு ஒரு அமைப்பினை உருவாக்கினார். *The London Dialectical Society* என்ற அவ்வமைப்பின் மூலம் ஆவி தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்தார். இந்த அமைப்பு மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் இறந்தவர்கள் ஆவியுருவில் இருப்பதாகவும் தெளிந்த அறிவோடு விளங்கும் அவர்கள் தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் மிகுந்த அன்பினைக் கொண்டுள்ளனர் எனவும் வெளிப்படுத்தினர்.

இந்திய நாட்டின் இராமகிருகூஷ்ன மிசனின் துறவி சுவாமி அபேதானந்தா இதனை நிலை நிறுத்தும் வகையில் "மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கை" என்ற நூலினையும் "இந்தியாவில் ஆவியுலக ஆராய்ச்சி" என்ற நூலினையும் வெளிக்கொணர்ந்தார். அதனைத் தொடர்ந்தாற்போல் மறைமலையடிகள் "மரணத்தின்பின் மனிதர் நிலை" என்ற நூலை வெளியிட்டார். இந்நூல்களில் சொல்லப்படு கின்ற கருத்துக்களை நியாயப்படுத்துவதும் நிலைநிறுத்துவதும் மிகவும் சிரமமான காரியமே. எனினும் நம்பிக்கைக்கு உரியனவாயுள்ளவற்றை புறம்தள்ளிவிடமுடியாது எனும் நிலையே இங்கும் தென்படுவதை நாம் அவதானிக்கலாம்.

தட்ப - வெப்ப - சமநிலை என எப்பேற்பட்ட சூழலிலும் வாழுகின்ற மனித உடல் 98.4 பாகை பரனைட் எனும் வெப்ப நிலையில் சீராக இயங்கும் தன்மையில் உயிரற்ற உடல் அவ்வாறு இயங்காமைக்கு காரணம் என்ன? வெளி வெப்ப நிலை -10 பாகை செல்சியஸ்சாக இருக்கும் தன்மையிலும் 40 பாகை செல்சியஸ்சாக இருக்கும் தன்மையிலும் ஆவியற்ற உடல் அந்தந்த வெப்பநிலைக்கு உள்ளாக்கப்படும்போது ஆவியுள்ள உடல் அவ்வாறு மாறுவதில்லையே ஏன்? இங்கே இதற்குப் பதிலளிக்க முற்படுகின்ற விஞ்ஞான அணுகுமுறைக் காரணங்கள் மென்மேலும் சந்தேகங்களைக் கேள்விகளாக்கிக்கொண்டே செல்லும். எனினும் ஆவிபற்றிய நம்பிக்கையாளர்களோ இங்கே ஒரே பதிலைக் கூறிவிட்டு அமைதியடைந்துவிடுகின்றனர். அதாவது வாழுகின்ற உடலின் சமச்சீர் வெப்பநிலையானது ஆவி உடலினால் ஸ்தூல உடலுக்கு உண்டானதே தவிர ஸ்தூல உடலுக்கு தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் அது கிடையவே கிடையாது. ஆவியுடல் ஸ்தூல உடலைவிட்டு நீங்கிவிட்டால் வெளிச் சூழலில் எவ்வாறு வெப்பநிலை நிலவுகின்றதோ அதையேதான் ஸ்தூல உடல் அடையும். எனினும் எப்பேற்பட்ட சூழலிலும் ஆவி உடலின் வெப்ப நிலையானது சமச்சீரான 98.4 பாகை பரனைட்டிலேயே தொடர்ந்தும் இருக்கும். சொல்லப்போனால் அகநிலைப்பட்டு நிற்கும் இக்காரணங்கள் தொடர் சிந்தனையின்பாற்பட்டதாகவே அமைகின்றன.

எனினும் விஞ்ஞானம் சார்ந்த ஒரு கருத்தும் ஆவி தொடர்பில் முன்வைக்கப்படவேசெய்கின்றது. உருக்களின் மூன்று நிலை பற்றிக் குறிப்பிடும் தன்மையில் திண்மம், திரவம், வாயு என்ற படிநிலைகளில் அவை வெளிக்காட்டப்படுகின்றன. நீர் அதன் விரிவுத் தன்மையில் திண்மம், திரவம், ஆவி என்றாகிப் பின்னர் அது ஒடுங்கும் தன்மையில் ஆவி, திரவம், திண்மம் எனப் பழைய நிலைக்குத் திரும்பும். திண்மமும் திரவமும் கண்ணுக்குப் புலப்படும் தன்மையில் ஆவி புலப்படாமை தத்துவார்த்த ரீதியாக வெளிக்கொணரப்படுகின்றது. எனினும் அதன் செயல்திறன் காரணமாக ஆவியின் உண்மைத் தன்மை உணரப்படுவதைப் பார்க்கின்றோம்.

உருவமோ வரையறுக்கப்பட்ட வடிவமோ உயிருக்கு இருப்பதில்லை. அதேபோல் அழியும் தன்மையும் அதற்குக் கிடையாது. உயிர் அதனது செயல்பாட்டு நிலையில் ஆவியுடலாக மாற்றம் பெறுகின்றபோது அதன் பழைய வடிவத்தை நோக்கிச் செல்வதாகவும் அதன்மூலம் இன்பதுன்பங்களை அனுபவிக்கவும் அரியபல செயல்களை நிகழ்த்திக்காட்டவும் ஆவியுடலால் முடியும் என்பது இது சார்பான பல ஆய்வாளர்களின் முடிவாகவுள்ளது. ஆவியுடல்கள் ஆயுதங்களாலோ அன்றேல் தீயினாலோ அல்லது வேறு ஏதேனும் காரணிகளாலோ சேதமுறாதவை என்றாலும் இதுவும் ஒருநாள் அழியும் தன்மைமிக்கதே என இதுதொடர்பான நம்பிக்கையாளர்கள் கருதுகின்றனர். ஒருவர் மறுபிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கும்வரை அவர் ஆவியுடலுடன் வாழ்வதாகவும் மறுபிறப்பு இல்லாத நிலையில் ஆவி உடலானது அழிந்து ஜீவாத்மா என்ற நிலையினை அடைந்து பரமாத்மாவோடு (இறைவனுடன்) ஐக்கியப்பட்டு விடுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுவாக ஆவியுடல் தொடர்பில் இருவேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுவதைப் பார்க்கின்றோம். ஒன்று இயற்கையால் நிகழும் மரணம் தொடர்பானது. மற்றையது அகால மரணம் சம்பந்தமானது. இதுபற்றி இவ்வாய்வாளர்கள் என்ன கூறுகின்றார்களெனில் "உயிர்கள் அனைத்தையும் இறைவனே படைக்கின்றான். ஒவ்வொரு உயிருக்குமான ஆயுளையும் அவனே நிர்ணயம் செய்கின்றான். ஆயுள் நிர்ணயம் என்பது ஆவி உடலுக்கும் ஸ்தூல உடலுக்கும் ஒன்றாகவே கணிக்கப்படுகின்றது. உதாரணமாக எண்பது வயதென நிர்ணயம் செய்யப்பட்ட ஒருவர் அதே வயதுவரை வாழ்ந்து இறந்துவிட்டால் அவர் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மறு பிறவியை அடைவார். இதே நபர் இயற்கையாக அறுபது வயதில் இறந்துவிட்டால் மீதமுள்ள இருபது ஆண்டுகள் ஆவி உலகிலேயே வாழவேண்டியவராகின்றார். இக்கால கட்டத்தில்தான் இவர் சொர்க்க பலனையோ அன்றேல் நரக பலனையோ அனுபவிக்கவேண்டியிருக்கும். இதன் பின்னர்தான் இவருக்கு மறுபிறவி கிட்டும். இது பூர்வ புண்ணிய பலனாக அமையும். இதே நபர் விபத்து அல்லது தற்கொலைமூலம் அகால மரணம் அடைந்துவிட்டால் அப்போது பிரிகின்ற உயிரானது ஆவி உலகைச் சேராது. ஆவி உடலையும் அது அடையாது. ஆவி உலகும் ஆவி உடலும் புனிதமானவை என்பதால் ஆயுள் நிர்ணயம் செய்யப்பட்ட குறித்த காலம் வரையும் அவ்வுயிரானது அதன் ஸ்தூல உடல் வாழ்ந்த இடத்தையே சுற்றிச் சுற்றி வட்டமிடும். இவையே பேய்பிசாசுகள் எனப்படுகின்றன. இக்காலத்தே அது தனது ஸ்தூல உடலால் அனுபவிக்க முடியாமல்போன அபிலாசைகளுக்காக ஏக்கமுற்ற நிலையில் அது தனது உற்றார், உறவினர், நண்பர்கள் என சுற்றிச் சுற்றி அலைகின்றது. பேய் பிசாசு எனப்படும் இவை உறவினர் மற்றும் நண்பர்களின் மனோ நிலையில் மிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனமானவர்களின் கண்களுக்குப் புலப்படத் தக்கவை எனவும் சிலவேளைகளில் அவர்களின் உடலுக்குள் புகுந்துகொண்டு தங்களது ஆசாபாசங்களை நிறைவேற்ற முற்படுவதாகவும் இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் பேய் பிடித்தவர்களாகின்றனர் எனவும் இவ்வாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். குறித்த ஆயுட்காலம் முடிவுற்றதும் இவ்வுயிரானது பேய் நிலையிலிருந்து விலகி ஆவியுலகையும் ஆவியுடலையும் அடைந்துவிடுகின்றது."

ஆவியுலக ஆராய்ச்சி எந்த அளவு நம்பகத்தன்மை மிக்கது என்ற ஐயப்பாடு ஒருபுறமிருந்தாலும் நீண்ட காலமாக ஆவிகளின் தொடர்புபற்றிய செய்திகள் பதிவுசெய்யப்பட்டே வருகின்றன. இந்து மதத்தில் மாத்திரமின்றி கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம், சமணம் என எல்லா மதங்களிலும் ஆவிபற்றிய கோட்பாடுகள் இருக்கவேசெய்கின்றன. நமது முன்னோர்களிடம் ஆவிபற்றிய நம்பிக்கைகள் தொடர்ந்தும் இருந்துவந்த காரணத்தினால்தான் மரணமானவர்களுக்காக 8ம் நாள், 16ம் நாள், 31ம் நாள் அல்லது 41ம் நாள் எனப் படையல்வைத்து வழிபாடியற்றிக் கடமை செய்வதும் அதுவரை இரவுபட்டதும் படலையில் இளநீர் மற்றும் தாம்பூலம் போன்றவற்றை வைப்பதுவும் இன்றுவரை தொடரவே செய்கின்றது. வருடம்தோறும் செய்யப்படுகின்ற பிதிர்கடன் வழிபாடும் காலம்தோறும் நினைவு கூரும் தன்மையினையே கொண்டிருக்கின்றது. ஆடி அமாவாசையை இறந்த ஆத்மாக்களுக்கு கடமைசெய்யும் விசேட நாளாக இந்துக்கள் கொண்டுள்ளனர்.

எகிப்தில் காணப்படும் பிரமிட்டுகளில் பழுதடையாது அடக்கம் செய்யப்பட்ட உடல்களுடன் ஆடை ஆபரணங்கள், உணவுப் பொருட்கள், தண்ணீர் என்பவற்றையும் சேர்த்து வைத்ததின் நோக்கம் இறந்தவர்களின் ஆவி மீண்டும் ஒருநாள் அந்த உடலுக்குள் வந்து புகும் என்ற நம்பிக்கையே. அக்கால சித்தர்களும் யோகிகளும் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையை தெரிந்துவைத்திருந்ததாக அறிகின்றோம். இறந்துபோன ஒருவரது உடலுக்குள் புகுந்து வேண்டியதைச் சாதிக்கும் வித்தையே அது. திருமூலர் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசங்கரர் போன்றோரது வரலாறுகளில் இதுபற்றி அறிந்துகொள்ளமுடிகின்றது.

வைபிள் இறைவனைப் பரிசுத்த ஆவி என்றே குறிப்பிடுகின்றது. இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்தபின்னர் மூன்றாம் நாள் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து நாற்பது நாட்கள்வரை உபதேசம் செய்தாரென்றால் அது அவரது ஆவியுடல் தன்மையின் வெளிப்பாடென்றே கொள்ளப்படுகின்றது. படிப்பு வாசனையற்றிருந்தும் கேள்வி ஞானத்தினூடாக மகா பாண்டித்தியம் பெற்ற நபிகள் பெருமானுக்கு ஆண்டவன் கட்டளைப்படி ஜிப்ரில் என்ற தேவதூதர் தோன்றி பெருமானார் வாயிலாகவே திருக்குர்ஆன் எனும் மிகத் தலைசிறந்த வேதநூலை இவ்வுலகு உய்ய ஒப்புவித்தார் என்றால் அங்கு ஜிப்ரில் என்பது ஆவியுடலாகவே கருதப்படத்தக்கதாகின்றது. உலகியல் தொடர்பில் மிகத் தெளிவான போதனைகளை இவ்வுலகுக்கு அளித்த சித்தார்த்தர் உறங்கிக் கொண்டிருந்தபோது ஆவியுடல் ஒன்று அவர் கனவில் தோன்றி அவர் ஞானம் பெறுவதற்கான அவசியத்தை அவருக்கு உணர்த்திய பின்னரே சித்தார்த்தரால் அரசைத் துறந்து ஞானம் பெற்று புத்தராக முடிந்திருப்பதை அவரது வரலாறு உணர்த்துகின்றது. சிலப்பதிகார காப்பியத்திலே தனது ஸ்தூல உடலினை மதுரை மாநகரிலே அழியவிட்ட கோவலனின் ஆவியுடலே வஞ்சியின் மலையடிவாரம் வந்து கண்ணகியை அழைத்துச் சென்றிருப்பதை பார்க்கின்றோம்.


மறைமலையடிகள் தான் எழுதிய "மரணத்தின் பின்னர் மனிதர் நிலை" என்ற நூலில் ஒருவர் ஸ்தூல உடலுடன் இருக்கும்போது என்னென்ன குணாதிசயங்களையும் அறிவுத் திறனையும் கொண்டிருந்தாரோ அவையேதான் ஆவியுடலிலும் இருக்கமுடியும் எனக்கூறுகின்றார். ஆவியுலகத்தில் அவர்கள் சஞ்சரிக்கும்போது தூயவர்கள் வெள்ளை ஆடையைக் கொண்டவர்களாகவும் தீயவர்கள் கரிய ஆடையைக் கொண்டவர்களாகவும் தென்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் 291ம் குருமகா சன்னிதானம் பரமாச்சாரிய சுவாமிகள் எழுதியுள்ள "இறந்தவர்கள் வாழும் நிலை" எனும் நூலில் ஆவிகள் பற்றி விரிவாக விளக்கியுள்ளார். ஆவியுலகில் இருள்நிறைந்த பகுதி மற்றும் ஒளிநிறைந்த பகுதி என இரு வேறுபட்ட பகுதிகள் உண்டெனவும் அதில் தாங்கள் வாழுகின்றபோது நல்ல காரியங்களில் ஈடுபட்டவர்கள் ஒளிநிறைந்த பகுதியிலும் தீய செயல்களைப் புரிந்தவர்கள் இருள்நிறைந்த பகுதிகளிலும் சஞ்சரிப்பதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அண்மையில் இணையத் தளங்களிலும் வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் வெளிவந்த தகவல்கள் நம்மிடையே பல கேள்விகளை எழுப்பவேசெய்கின்றன. மரணத்தின்பின்னர் என்ன நடக்கும் என்பது தொடர்பில் ஜேர்மன் பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறையினரும் உளவியலாளர்களும் மேற்கொண்ட ஆய்வுகளின் அறிக்கையை அப்படியே பதிவுசெய்வது இங்கு பொருத்தமானதாக அமையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரணத்தின்பின் என்ன நடக்கும் என நிரூபித்த ஜேர்மன் டாக்டர்கள்:**

*அதிர்ச்சித் தகவல்: 29.10.2016*

மனிதனின் மனதை உலுக்கியெடுக்கின்ற இந்தக் கேள்வி இன்றுவரை ஓயாமல் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. காலங்காலமாக நாகரீகமடைந்த ஒவ்வொரு சமுதாயத்திலுமுள்ள அறிவு மேதைகள் இந்தக் கேள்வியைக் குறித்து நிறையவே யோசித்திருக்கிறார்கள். ஆனால் மனித தத்துவங்களிலிருந்தும் விஞ்ஞான ஆராய்ச்சிகளிலிருந்தும் எண்ணிலடங்கா கோட்பாடுகளும் கட்டுக்கதைகளும்தான் மிஞ்சியிருக்கின்றன. மரணம்தான் இறுதியானது. மறுபிறவியென்பதோ சொர்க்கம் நரகம் என்பதோ கிடையாது. மூளை உயிருடன் இருக்கும்வரைதான் எல்லாமே. மரணத்திற்குப்பின் வாழ்க்கையில்லை. மரணத்திற்குப்பின்னரான வாழ்க்கையென்பது வெறும் கட்டுக்கதைகள். மரண பயத்தை போக்குவதற்காகப் புகுத்தப்பட்டவை என்று பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஸ்ரீபன் ஹாக்கிங் திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

இந்நிலையில் ஜேர்மன் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த உளவியலாளர்கள் மற்றும் மருத்துவர்கள் இணைந்த குழு மேற்கொண்ட மருத்துவ பரிசோதனைகள்மூலம் மரணத்திற்குப் பின்னரும் வாழ்க்கையுள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். இந்த வியப்பூட்டும் அறிவிப்பு என்பது மரணமடைந்தவரின் அருகிலிருந்து மரண அனுபவங்களை ஒரு புதியவகை தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மருத்துவக் கண்காணிப்புமூலம் எடுத்த ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

இந்த சர்ச்சைக்குரிய ஆய்வு கடந்த நான்கு ஆண்டுகளாக இறக்கும் தருவாயிலிருந்த 944 பேரிடம் முக்கிய மருந்துக் கலவைகளைக்கொண்டு நடத்தப்பட்டதாகும். எபிநெப்ரின் மற்றும் டைமெத்தில்டிரிப்டமைன் உள்ளிட்ட மருந்துகளின் கலவைகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணித்த உடலினை எந்தவித சேதமுமின்றி உயிர்ப்பிக்கச்செய்யும் ரீஅனிமேசன் முறை (உயிர்பிக்கும் முறை) தொடங்குகின்றது. அதனைத் தொடர்ந்து 18 நிமிடங்கள் கழித்து அந்த உடல் தற்காலிக நினைவு இழந்த நிலையில் வைக்கப்படுகின்றது. இதற்கு அந்த உடலின் இரத்தத்திலிருந்து மருந்துக் கலவைகளின் தூண்டுதலால் ஒசோன் பிரித்தெடுக்கப்படுகின்றது. டாக்டர் பெர்த்தோல்டு ஆக்கர்மென் மற்றும் அவரது குழுவினர் அதன் பின்னரான நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்கத் தொடங்குகின்றனர். அவற்றின் வாக்குமூலங்களையும் தொகுத்துவைத்துள்ளனர். இந்தப் பரிசோதனையின் நீண்ட அனுபவத்தின் முடிவுகளை அறிவதற்காக கார்டியோ பல்மோனரி ரிசைடேசன் (சி.பி.ஆர்) என்ற புதிய நவீன கருவி பயன்படுத்தப்பட்டது. அந்தக் கருவியின் உதவியுடனே இது சாத்தியமானது. கடந்த சில வருடங்களில் இவ்வகையிலான கருவி மரணித்த சிலரை உயிர்ப்பிக்கச்செய்யும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஆட்டோபல்ஸ் என்றும் அழைக்கப்படுகின்றது. அந்த ஆய்வில் அனைத்து வாக்குமூலங்களிலும் மரண நிலையிலுள்ள நினைவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் பொதுவாக உடலிலிருந்து பிரிவது போன்ற உணர்வுகொண்ட நினைவுகள் தெய்வீக ஆற்றலால் மிதத்தல் உணர்வு முழுவதும் அமைதி நிலை, பாதுகாப்பு, வெப்பமுடன் இருத்தல், மரண நிலையிலான முழு அனுபவம், மற்றும் அதிக அளவிலான ஒளி காணப்படுவது போன்றவை பெருமளவிலுள்ளன. பல்வேறு வாக்குமூலங்களில் மத நம்பிக்கைகள் சார்ந்த விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை.


தங்களது முடிவுகள் பலரையும் அதிர்ச்சியடையச் செய்யுமென இவ்வாய்வாளர்கள் கூறுகின்றனர். இவர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட மனிதர்கள் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், யூதர்கள், இந்துக்கள் மற்றும் பிற நம்பிக்கை கொண்டவர்களாகவுமுள்ளனர். ஆனாலும் மனிதகுல வரலாற்றில் பெரும் கேள்வியொன்றினுக்கு நாங்கள் பதிலளித்துள்ளோம். அதனால் மத நம்பிக்கைமிக்கவர்கள் எங்களை மன்னிப்பார்கள் என நாங்கள் நம்புகின்றோம். மரணத்தின் பின்னரும் வாழ்க்கையுள்ளது இது ஒவ்வொருவருக்குமுள்ளது என நாம் கருதுகின்றோம். இந்த ஆய்வுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவிலிடம்பெற்ற முக்கியஸ்தரான டாக்டர் பெர்த்தோல்ட் ஆக்கர்மென் என்பவரது கூற்று இது.

ஆவி பற்றிய சிந்தனைகளில் இதுவரை சொல்லப்பட்டவை தகவல்களாக எம்மால் பெறப்பட்டவையே. எனினும் ஆவியுடன் பேசமுடியும் எனும் கருத்துக்கள் இதுவரை வெளியிடப்பட்டிருந்தாலும் நேரிடையாகத் தொடர்புகொண்டு யாரும் பேசியுள்ளமையை உண்மையில் அறியமுடியவில்லை. இடையீட்டாளர்கள் ( *Media Person*) மூலமே இது சாத்தியப்படுவதாக இதுபற்றிய ஆய்வுகளில் தெரியவருகின்றது. ஆவிபற்றிய சிந்தனைகள் குறித்துப் பொதுவாகச் சொல்லப்போனால் கடவுள் கொள்கை அல்லது கடவுள் கோட்பாடு எவ்வாறு வெளிப்படையில் புரியாத புதிராகத் தொடர்ந்தும் இருக்குமோ அதுபோன்றேதான் இதுவும் அமையும் என நம்பலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15.
# முழுமையை நோக்கி நாம்

நாம் யார்? இதற்கான விடையைக் காண்பதற்குக் காலம் நமக்கு வேண்டியதாக அமையலாம். போதனைகளைப் படிப்பதால் மட்டும் நாம் யார் என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. அவை நமக்கு ஒரு அடிப்படை அறிவை மட்டுமே கொடுக்கும் தன்மையன. அதற்கும் மேலாக நாம் யார் என்பதைப்பற்றி அறிந்துகொள்ள நமக்கு ஒரு முழுநிலைப்பட்ட அனுபவ உணர்வு தேவையாகின்றது. நாமே நம்மைத் தேடிக்கொள்ளும் தேடலே அது. ஞானிகளின் கூற்றுப்படி ஆரம்பத்தில் ஒரு போதனையாளர் இதற்குத் தேவைப்படலாம். ஆனால் அது ஆற்றைக் கடக்க உதவும் படகின் தன்மையை ஒத்ததாகவே இருக்கவேண்டும். ஆற்றைக் கடந்ததும் படகை நாம் விட்டுவிடவேண்டும். தொடரும் பயணத்திற்கு அது தேவையற்றது. எனினும் நம்மிடத்தே அதற்கான குரு இருப்பதாக மனோநிலையில் ஒரு உறுதிப்பாட்டினை நாம் கொண்டிருக்கவேண்டும். அப்போதுதான் நமது இயக்கமானது சுதந்திரமானதாகவும் தெளிவுமிக்கதுவாகவும் அமைந்திருக்கும்.

நாம் பொதுவாக நமது உடலைத்தான் நாம் என்று கருதுகின்றோம். உண்மையில் சொல்லப்போனால் நாம் ஒரு செயல்பாட்டில் - இயக்கத்தில் இருக்கின்றோம். இதில் இருப்பு நிலையும் உண்டு, இழப்பு நிலையும் உண்டு. இருப்பு நிலை எப்பொழுதும் தன்னைத்தானே வெளிப்படுத்தும் தன்மையைக் கொண்டது. இதில் மௌனமாகவும் விழிப்பாகவும் நம்மை நாம் கவனித்துக்கொண்டோமானால் நம்மிடமுள்ள இழப்புநிலைச் செயல்பாட்டை நம்மால் உணரமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எப்பொழுதும் கனவு காண்பவர்களாகவே இருக்கின்றோம். கண்களை விழித்துக்கொண்டு நடக்கின்ற நிலையிலும் பல்வேறு யோசனைகளும் கனவுகளும் கூடவே நம்முடன் வருகின்றன. நமது எண்ணங்கள் என்றுமே நிகழ்காலத்தில் இருப்பதில்லை. எதிர்காலத்திலோ அன்றேல் இறந்தகாலத்திலோதான் அவை இருக்கும். சொல்லப்போனால் உண்மையில் இவையெல்லாம் கனவுகளே.

பொதுவாக நாம் கடவுளை வெளியில்தான் தேடிக்கொண்டிருக்கின்றோம். இதுதான் எம்மால் முடியக்கூடியது. நாம் யார் என்பதைப் புரிந்துகொள்ளும்வரை இந்த நிலை தொடரத்தான் செய்யும். பெரும்பாலும் நமது மதங்களும் இதைத்தான் செய்கின்றன. கடவுள் என்பதன் பொருள் கட - உள் ஆகும். உள்ளே கடந்து பார் என்பதாகத்தான் இதற்கு நாம் பொருள் கொள்ளவேண்டும். இது நமக்குள்ளாகவே கடவுளைத் தேடுதல் எனும் அர்த்தப்பாட்டையே வெளிக்கொணரும்.

முழுமை என்பது என்றும் பரிபூரணமானதாகவே நிலைநிறுத்தப்படும். கடவுள் என்பதற்கும் கடவுள் தன்மை என்பதற்கும் பாரிய வேறுபாடு உண்டு. கடவுள் என்பதற்கு முழுமை என்று வைத்துக்கொள்ளலாம். அப்படியானால் கடவுள் தன்மை எனப்படுகின்ற மாபெரும் பிரபஞ்ச இயக்கத்திற்கு இதனை எவ்வாறு பொருத்திப்பார்க்கமுடியும்?

நாம் பிறந்தது முதலே நமது பெற்றோர்களாலும் நாம் சார்ந்த மதங்களாலும் நமது சமூகப் பின்னணிகளாலும் நம்பிக்கை என்ற வித்து நம்மில் ஆழமாக ஊன்றப்பட்டுவிட்டது. இதன் காரணமாக பகுத்தறிவினையும் சுய சிந்தனையையும் பெருமளவில் நாம் இழந்துவிட்டோம். பொதுவாகச் சொல்லின் உண்மை என்பது உண்மையாகவே சார்பு - எதிர்ப்பு என்ற இரு அம்சங்களையுமே கொண்டிருக்கும். எனினும் ஒரே நேரத்தில் நம்மால் ஒன்றைப் பற்றி மட்டுமே பேசமுடிகின்றது. அதன் உண்மைத் தன்மை குறித்து ஒரே நேரத்தில் சார்பாகவும் எதிர்ப்பாகவும் நம்மால் பேசமுடியாமைக்கான காரணம்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய பிறப்பும் இறப்பும் நமது வாழ்வு என்ற நாணயத்தின் இரு பக்கங்கள். இதனை நாம் ஏற்றுக்கொண்டால் மரணபயமோ அல்லது வேறு துன்பங்களோ நம்மைத் தீண்டமுடியாது. நாம் பிறப்பதற்கு முன்னர் இப்பிரபஞ்சத்தோடுதான் ஒன்றியிருந்தோம். அப்போது நமக்கு எந்த உணர்வும் கிடையாது. அதிலிருந்து பிரிந்து நாம் பிறப்பை எடுத்தபோது உணர்வும் ஏற்பட்டுவிட்டது. மனிதன் பிறக்கும்போதும் அழுகின்றான் - இறக்கும்போதும் அழுகின்றான். இது மனிதனது பய உணர்வின் இயற்கையான வெளிப்பாடே. நாம் பிரபஞ்சத்தோடு ஒன்றியிருந்தபோது உணர்வும் இல்லை பயமும் இல்லை. நமக்கு பிறவியொன்று வந்தபோது உணர்வும் வந்தது பயமும் வந்தது.

உலகியல் என்பது நிலையாமைக் கொள்கையின் மொத்தச் செயல்பாடு என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ளவேண்டும். எல்லாமே மாறிக்கொண்டுதான் இருக்கும் என்பதுவே மாறாத உண்மை. இந்த உண்மையினை யாருமே மறுக்கமுடியாது. பற்றின்மைக்கும் இதுதான் ஆதாரம். இங்கேதான் அமைதி மையம்கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த அமைதி மௌனமானதல்ல. புயலின் மையத்தைப் போன்றது. நாம் இந்த நிலையாமை மாறுதலை ஒப்புக்கொள்ளாவிட்டால் மைய அமைதி நிலையை என்றுமே நம்மால் அறிந்துகொள்ளமுடியாது.

பொதுவாகப் பார்த்தால் பொய்யும் மெய்யும் எப்போதுமே ஒன்றையொன்று அனுசரித்தே செல்லும். அதாவது உண்மையில் லாமல் பொய்யில்லை, பொய்யில்லாமல் உண்மையில்லை என்பதே அது. பொய்யும் மெய்யும் கலந்ததுதான் வாழக்கை என்றாகின்றது. நாம் நமது நாளாந்த வாழ்வில் நம்மைச் சுற்றியே சதா நினைத்துக் கொண்டிருக்கின்றோம். இதுவே நமக்கு நிரந்தர துன்பத்தைத் தந்துகொண்டிருக்கின்றது. எதுவானாலும் அது வெறுமையிலிருந்தே தோற்றம் பெறுகின்றதென்பதை நாம் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். அவை நிறங்களாயினும்சரி அன்றேல் உருவங்க ளாயினும்சரி அவை அனைத்துமே வெறுமையின் வெளிப்பாடே. ஆகவே அந்த வெறுமையில் பற்றுவைத்தால் அதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவானதாகவும் சரியானதாகவும் அமையும். அதுதான் காலப்போக்கில் துன்பங்களிலிருந்து நமக்கு விடுதலையைத் தரவல்லது. அதனை விடுத்து மாறாகக் கடவுளரின் உருவங்களிலும் கொள்கைகளிலும் நாம் கொள்ளும் நம்பிக்கையானது சரியான தெளிவினுக்கு இட்டுச்செல்ல ஒரு நீண்ட காலத்துள் நம்மை அலைக்களிக்கும் என்பதே சிந்தனையாளர்களின் கருத்தாகவுள்ளது. உருவ வழிபாடானது பெரும் பின்னடைவுக்கே இட்டுச்செல்வதாக இவர்கள் உறுதிபடக் கூறுகின்றனர்.

உலகில் நன்மைகளும் தீமைகளும் பெரும்பாலும் சம அளவில் இருப்பதாகவே இராமகிருஷ்ன பரமஹம்சர் கூறுகின்றார். தீமையினால் ஏற்படும் வெளிப்பாட்டினைப் பெரிதுபடுத்தி வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் நாம் நன்மையினால் ஏற்படும் வெளிப்பாட்டினைச் சாதாரணமாகக் கருதி மறந்தும் விடுகின்றோம். புத்தர், மகாவீரர், கிருக்ஷ்னர், இயேசு, முகம்மது நபி என பெரும் மகான்களெல்லாம் இவ்வுலகில் தர்மம் நிலைநாட்டப்படவே பெரும் முயற்சியினை மேற்கொண்டார்கள். அதர்மங்கள் ஓங்கி தர்மங்கள் அழியும்போது நான் மீண்டும் அவதரிப்பேன் எனக் கீதையில் கிருக்ஷ்ன பரமாத்மா கூறுவார். மகா பாரதப் போருக்குப் பின்னர் இவ்வுலகில் அதர்மங்கள் தலையெடுக்கவில்லையா? போரின்றி ஒரு சமாதானப் பாதையிலா இவ்வுலகம் இன்று சென்றுகொண்டிருக்கின்றது? என ஒன்றன்பின் ஒன்றாக எழுப்பப்படும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிக்கமுடியும்?


பொதுவாகப் பார்த்தால் இவ்வாதங்களும் கருதுகோள்களும் அர்த்தமற்றவையே. இதில் ஒரு உண்மையினை நாம் மனதில்கொள்ளவேண்டும். இவ்வுலகில் பகல் இருக்கும்போதுதான் இரவும் இருக்கின்றது. இரண்டும் ஒன்றான தன்மையில்தான் அமைதியும் செயல்பாடும் இருக்கின்றது. ஒன்றே பலவாகவும் பலதே ஒன்றாகவும் இருப்பதுதான் பரிணாம தத்துவம். இங்கு யாவுமே முரண்பாட்டின் அடக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறும் தன்மைக்குள் மாறாத ஒன்று இருக்கும். அதனைப் புரிந்துகொள்வதுதான் நமக்குப் பெரும் சிரமமாயுள்ளது. அவ்வாறு புரிந்துகொள்ளும் தன்மைவருகின்றபோது நாம் தெளிவுபெற்று விட்டோம் என்பது உணரப்பட்டுவிடும். முடிவாக இதில் ஒன்றைநாம் தெரிந்து கொள்ளவேண்டும். சிந்தனையாளர்களின் கருத்துக்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தைவிட மறைந்தபின் வருகின்ற காலங்களிலேயே வலுவடைந்து வருகின்றது

உண்மையில் நம் எல்லோரிடத்திலுமே ஞானத்தன்மை இருக்கவே செய்கின்றது. ஆனால் அதுவோ ஒரு கருவின் நிலையிலேதான் உள்ளது. அக்கருவானது உருவாகி மலர்ந்து வெளிவருவதற்கு நமது மனதில் முழுமையான இடம் வேண்டும். அதாவது நமது மனமானது, தான் அடக்கிவைத்துள்ள அனைத்தையும் முதலில் உதறி எறிந்துவிட்டு வெறுமையடையவேண்டும். கடவுளை அடைவதற்கு கடவுள் பற்றிய எண்ணங்களே நமக்குத் தடங்கலாகிவிடக்கூடாது. அப்போதுதான் நமது பயணம் முழுமையை நோக்கியதாக அமையும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத் தகவல்களுடன் சிந்தனைக்கு துணைநின்ற நூல்கள்:

01. ஜென்னும் ஜென் தியானமும் : டாக்டர் சுவாமி ஆனந்த -பரமேக்ஷ்

02. விஞ்ஞான லோகாயத வாதம்: ராகுல் சங்கிருத்தயன்

03. இஸ்லாமிய தத்துவ இயல் : ராகுல் சங்கிருத்தயன்

04. ஐரோப்பிய தத்துவ இயல் : ராகுல் சங்கிருத்தயன்

05. இந்தியத் தத்துவ இயல் : டாக்டர் இராதாக்கிருக்ஷ்னன்

06. ஞானமடைதல் என்ற புதிர் : யூ. ஜி. கிருக்ஷ்னமூர்த்தி

07. மனம் ஒரு புனை கதை : யூ. ஜி. கிருக்ஷ்னமூர்த்தி

08. தனித்து நிற்கும் துணிவு : யூ. ஜி. கிருக்ஷ்னமூர்த்தி

09. ஏகாந்தப் பறவைகள் : இரவீந்திரநாத் தாகூர்

10. ஞானப் புதையல் : முனைவர் எம்.இரமலிங்கம்

11. சிந்தனைப் பொறிகள் : சிறி அரவிந்தர்

12. ஒளி பொருந்திய பாதை : சிறி அன்னை

13. மனம் மலரட்டும் : சுவாமி தயாநந்த சரஸ்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. எது இந்து தர்மம் : மகாத்மா காந்தி

15. ரமணரின் தெய்வ வாக்கு : தொகுப்பு ஏ.ஆர்.நடராஜன்

16. மன அமைதி : சுவாமி சிவாநந்தர்

17. பதஞ்சலி சூத்திரம் : ஓஷோ

18. ஞானத்திற்கு ஏழு படிகள் : ஓஷோ

19. ஸத் சங்கம் : சிறி ஆதி சங்கரர்

20. அறிவா ? உள்ளமா ? : சுவாமி விவேகாநந்தர்

21. இந்தியப் பிரசங்கங்கள் : சுவாமி விவேகாநந்தர்

22. ஞானயோகம் : சுவாமி விவேகானந்தர்

23. வேதாந்தச் சொற்பொழிவுகள் : சுவாமி விவேகாநந்தர்

24. ஒரு முண்டாசுக் கவிஞரின் முஸ்லிம் நேசம் : கலாபூசணம் மானா மக்கீன்

25. பஞ்ச பூதங்களும் புலன்களும் : சிறி சத்யசாயி பாபா

26. பிரேம வாசி : சிறி சத்யசாயி பாபா

27. பிரார்த்தனை என்பது என்ன ? : ஓஷோ

28. ஆவிகளுடன் தொடர்புகொள்ளுவதெப்படி : ரிஜிபாநந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. மரணத்தின் பின்
மனிதர் நிலை : மறைமலையடிகள்

30. மரணத்திற்குப்
பின்னுள்ள வாழ்க்கை : சுவாமி அபேதாநந்தா

31. இந்தியாவில்
ஆவியுலக ஆராய்ச்சி : சுவாமி அபேதாநந்தா

32. இந்துமத வேதத்தின் மகிமை : யாக்ஞ வல்கியப்ரியா

33. உபநிடதக் கோட்பாடுகள் : யாக்ஞ வல்கியப்ரியா

34. இறந்தவர்கள் வாழும்
நிலை : ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

35. விவேகாநந்தரின்
அறிவுரைகள் : இ.கி.மி. வெளியீடு

36. பகவான் ரஜனீஜின்
தியான முறைகள் : எம்.பி.சுவாமி

37. காம சூத்திரம்

38. அறியப்படாத மனிதன் : அலக்சி கெரல்

39. மனிதனைப்பற்றிய
அபூர்வ உண்மைகள் : பி.சி.கணேசன்

40. மனிதனும் பிரபஞ்சமும் : சுவாமி ராமகிருக்ஷ்னானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. மனம் நம்வசம் : சுவாமி புதானந்தர்

42. History of Philosophy : G.E.Lewis

43. Capital (03 Volumes) : Karl Marx

44. Poverty of Philosophy : Karl Marx

45. Philosophy and Living : Stapledon

46. The Universe and Man : Swamy Ramakrishnananda






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பிலக்கியத் துறையில் வழங்கப்பட்ட கௌரவம்:

01: இலங்கையின் தேசியக் கலைஞர் விருது (கலாசார அலுவல்கள் அமைச்சு) - 2013

02: கலாபூஷணம் விருது (இலக்கியம்) - 2010

03: கிழக்கு மாகாண முதல்வர் விருது (ஆய்வு) - 2009

04: கவிக்கோ விருது (தமிழகம்) - 2000

05: சிறந்த கலைஞர் கௌரவம் - திருச்சி நுண்கலைக் கல்லூரி (தமிழகம்) - 2002

06: அருள்நெறி விருது - இந்து கலாசார அமைச்சு -1995

07: இலங்கை சாகித்திய மண்டல விருது (மாணவர் பிரிவு) -1965

08: சிறந்த ஆய்வாளர் விருது (மட்-கலாசார பேரவை) -2006

09: மட்- மாநகர பௌர்ணமிக் கலைநிகழ்ச்சி அமைப்பாளர் சேவையின் பாராட்டு விழா ( மட்டக்களப்பு இலக்கிய அமைப்புகள்) - 1976

10: கவிதை இலக்கியத்திற்கான சாகித்திய விருது - 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11: ஆய்வு இலக்கியத்திற்கான சாகித்திய விருது - 2006

12: தேனகக் கலைச்சுடர் விருது (மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை) - 2010

13: சிறந்த வரலாற்று ஆய்வு நூலுக்கான விருது (கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு) -2017

14: சிறந்த ஆய்வுசார் படைப்புக்கான அரச இலக்கிய விருது - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










வாழ்வை ஆத்ம அளவில் நித்தியமானது எனும் நிலைக்குள் வைத்துப் பார்ப்பது ஒருவகைத் தேடல். அதன் அநித்தியத்தை மட்டுமே பார்க்க முனைவது இன்னுமொரு வகைத் தேடல். இரண்டையும் ஒருசேர இணைத்து ஒன்றிலொன்றைக்கொண்டு நிரப்பவைப்பதே பிரபஞ்ச வாழ்வியல் பற்றிய தேடல். இந்நூலில் பதினைந்து அத்தியாயங்கள் ஊடாக கவிக்கோ கோபால் நம்முடன் பேச முனைகின்றார். அவர் பேசும் விதம் நமக்குப் பிரமிப்பை உண்டுபண்ணுகின்றது. நமக்கான ஒரு தேடலை – தர்க்க ரீதியான வாதங்களை – நம்மூடாக நாமாகவே எழுப்பிக்கொண்டு அதனை எட்ட முனைவதுவே இந்நூலின் சிறப்பம்சமாகிவிடுகின்றது.






கோபால் நமக்கு நன்கு பரீட்சயமானவர். அவரது அணுகுமுறைகள் மென்மையானவையெனினும் உறுதிமிக்கவை. கோபால் ஒரு தலைசிறந்த கவிஞர். தமிழுலகறிந்த ஆய்வாளர். பன்னூல் ஆசிரியர். இந்நூலின் வாயிலாக தன்னை ஒரு தத்துவவாதியாகப் பிரகடனப்படுத்தியுள்ள அவர் அதற்கான சிறப்பினை நிச்சயம் எட்டவேசெய்வார். நமது பிரார்த்தனையும் அதுவே.

முனைவர் பா.காயத்திரி
(தத்துவவியல் பேராசிரியர்)
தமிழ்நாடு










ISBN 978-955-42694-3-9

விலை ரூபா :350.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org